Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 9/00

දිනමුරසු වාරමලර

ஆக.21-27,1994


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 64

## வன்முறை+வதந்தி=தற்கால அரசியல்

## தமிழ்க்கட்சிகளின் முழக்கங்கள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## புதிய பாராளுமன்றம் புதிய யுகம் தருமா?

அரசியல் அலசல்

பொப்பிசை மன்னனின் காதல்

முகம் பளபளக்க

லேடிஸ் ஸ்பெசல்



வயிற்றுக்குள் 2 கத்தரிக்கோல்

## உலகில் அதிசய தகவல்

## மிகவும் நீளமான நாக்கு

## மாறியது நெஞ்சம்-மாற்றியது யாரோ?

சவுல் என்பவன் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்தி கொலை செய்யும்படி பிரதான ஆசாரியரிடத்தில் போய் தமஸ்குவிலுள்ள நிருபங்களை கேட்டு வாங்கினான். தமஸ்குவிற்கு செல்லும்போது சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். பார்வை யிழந்தான். ஆண்டவரின் சத்தத்தைக்கேட்டு நீர் யார்? எனக் கேட்கிறான்.

"நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே எனக் கூறிய ஆண்டவர் அவனோடு பேசுகிறார். அவன் போக வேண்டிய இடத்தை கூறுகிறார். அப்படியே அவன் கீழ்ப்படிந்தான். மீண்டும் பார்வையடைந்தான். ஜெப ஆலயங்களில் பிரசங்கித்தான். (அப்.9: 21,22)

கிறிஸ்துவின் நாமத்தை தொழுது கொள்கிறவர்களை துன்புறுத்த வந்தவனல்லவா இவன் என்று கேட்டவர்களெல்லாம் ஆச்சரியமடைந்தார்கள். முன்பு அவனது நெஞ்சத்திலே துன்புறுத்தல், கொலை, பழி என பல்வேறு குணங்கள் நிறைந்திருந்தன. தற்போது தேவ வசனம் நிறைந்திருந்தது. அவன் நெஞ்சத்தை மாற்றியவர் யார்? நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

இயேசுவுடனிருந்த 12 சீடர்களில் ஒருவனே யூதாஸ்காரியோத்து. அன்பு, பொறுமை, தாழ்மை, சமாதானம், இரக்கம் என்று பலவித குணங்களில் நிறைந்திருந்தவன். இயேசுவின் எல்லா பிரசங்கங்களையும் செவிமடுத்தவன். (லூக் 22:3) யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். (மத் 26:14) அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் ஆசாரியரிடத் திற்குப்போய் "நான் அவரை உங்களுக்கு காட்டிக்கொடுக்கிறேன்- நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்" என்றான். அவர்கள் முப்பது வெள்ளிக்காசை கொடுக்க உடன்பட்டார்கள்.


அதன்படியே இயேசுவுடன் ஒன்றாயிருந்து கடைசி இராப்போசனத்திலும் பங்குபற்றிய சீடன் மனம் மாறுகிறான். அவரை காட்டிக்கொடுக்கிறான். அவரோடே இருந்தவன் அவரை காட்டிக்கொடுக்கிறான். அவனது நெஞ்சத்தை மாற்றியவன் யார்? சாத்தான்.

எமது நெஞ்சத்தை சோதித்துப் பார்ப்போம். எம் நெஞ்சத்தை மாற்றுவது யார்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவா? அல்லது சாத்தானா?

எம் நெஞ்சத்தை சாத்தான் வஞ்சியாதிருக்க தினம் இறைவனிடம் மன்றாடுவோம்.

ஜே.புளோரன்ஸ்
கெங்கல்ல.

## ஆன்மீகம்



## பிறமதத்தாரை மதித்தல்

முஹம்மத் (ஸல்) உலகிற்கோர் அருளாக அனுப்பப்பட்டவர்கள். அவர்களின் வாழ்க்கை முறை ஒவ்வொன்றும் முஸ்லிமின் முன்மாதிரியாக விளங்குகின்றது. ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் மதம் உயிர் போன்றது என்பதை உணர்ந்திருந்த நாயகம் அவர்கள் பிற சமயத்தவர்களுக்கு எப்போதுமே மதிப்பளித்து வந்துள்ளார்கள்.

ஒரு முறை மதினாவில் ஒரு முஸ்லிமுக்கும் யூதனுக்குமிடையில் கோபம் ஏற்பட்டது. முஸ்லிமானவர் போர் உடையொன்றைத் திருடி அந்த யூதனின் வீட்டில் ஒளித்து வைத்துவிட்டார். யூதனே அதைத் திருடியதாகக் குற்றமும் சாட்டினார். ஆனாலும் நாயகம் அவர்கள் உண்மையை அறிந்து விசாரித்து யூதனை உடனடியாக விடுதலை செய்தார்கள். அந்நிய மதத்தானாக இருந்தாலும் நீதியை நிலைநாட்ட தயங்கவில்லை.

உமர் (ரலி) அவர்களும் ஒரு முறை ஜெருசலம் நகரை வெற்றி கொண்டு அங்கு பிரவேசித்தபோது தொழுகை நேரம் வந்துவிட்டது. பக்கத்து கிறிஸ்தவக் கோவிலில் நின்ற பாதிரியார் ஒருவர் உமரை அங்கேயே தொழும்படி வேண்டிக்கொண்டார். அப்போது உமர் (ரலி) அவர்கள் "இன்று உங்கள் வணக்கஸ்தலத்தில் நான் தொழுதுவிட்டால் நாளை முஸ்லிம்கள் இதைக் கைப்பற்றிக் கொண்டு எங்கள் கலீபா இங்கு தொழுதார் என்று கூறலாமல்லவா?" என்று பதிலுரைத்தார்கள். பின்பு கலீபா தாம் இந்த இடத்திலேயே தொழுதுவிட்டு தாம் தொழுத இடத்தில் பாங்கு சொல்லவோ ஜமா அத்தாக சேர்ந்து தொழவோ கூடாது எனவும் கட்டளையிட்டார்கள்.

இவர்கள் காட்டிய பாதையில் நாமும் நடந்து சாந்தி சமாதானம் பெற வழிசமைப்போமாக!

கரம்பை எம்.எச்.எம்.ஹாரிஸ்-புத்தளம்.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு-
வணக்கம்.

தேர்தல் முடிவுகளை அறிவதற்கிடையே
முரசு முந்தி வந்து
உங்கள் கரம் சேர்ந்துள்ளது.

முடிவுகள் எப்படி இருப்பினும்
யுத்தம் முடிவடைவதற்கு
உடனே ஒரு வழி காண்பது
அவசியம் என்பதை
வெற்றி பெறுவோர்
முதல் பணியாக கவனத்தில் கொள்ளவேண்டும்.

தேர்தல் பிரசாரங்களில்
சகல அரசியல் கட்சிகளுமே
போர் முடிதல் பிரதானம் என்று
பெரும் தொனியில் பேசி வந்தன.

பேச்செல்லாம் வெறும் கோசம் என்று
மக்கள் நினைக்குமளவுக்கு
அரசியல் கட்சிகள் தொடர்ந்தும்
தம் அணுகுமுறைகளை கடைப்பிடித்தால்
மக்களது நிரந்தர வெறுப்பினை அவை
சம்பாதிப்பதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

மறுபுறத்தில்-
புலிகளது பங்கு பெற்றல் இல்லாமல்
அரசியல் தீர்வோ-யுத்த நிறுத்தமோ
முன்னெடுக்கப்படல் சாத்தியமில்லை.

யுத்த நிறுத்தம் ஏற்படவேண்டுமானால்
புலிகளும்- அரசும் உடன்பட வேண்டும்.

அரசியல் தீர்வைப் பொறுத்தவரை
அது-புலிகள்-அரசு என்னும்
இரு தரப்புக்கள் சம்பந்தப்பட்ட
விடயமாக மட்டும் கொள்ளப்பட முடியாது.

நாட்டின் மிக முக்கிய அரசியல் கட்சிகள்
தமக்குள் பொது இணக்கத்திற்குள் வந்து
அரசியல் தீர்வுக்கு உடன்பட்டால் மட்டுமே
வேதாளம் மறுபடி மறுபடி
முருங்கை மரத்தில் ஏறும் கதை முடியும்.

இல்லாவிட்டால்-
விரிசல்கள் மேலும் அதிகமாகும்.
தோதான மருந்தால் ஆற்றக்கூடிய காயத்தை
அறுவைச் சிகிச்சைக்கு செல்லும்
கட்டம்வரை கொண்டு வந்த பொறுப்பை
அனைத்து அரசியல் வாதிகளும்
நாளை ஏற்கவேண்டி வரலாம்.

□□

தேர்தல்கால முரசின் செய்திகள்,
வெளியிட்ட கருத்துக்கள்,
நாடித்துடிப்பறிந்து தந்த கணிப்புக்கள்
தேர்தல் முடிவுகளோடு உங்களால்
பொருத்திப் பார்க்கப்பட்டிருக்கும்.
தேர்தல் காலங்களில்
வாக்காளர்களின் நாடித்துடிப்பறிந்து
முன்கூட்டியே கணிப்புக்களை வெளியிடும்
முறை வெளியுலகத்தில் ஏற்கனவே அறிமுகமானது.

நம் நாட்டிலும் இப்போது
அந்த முறை நடைமுறைக்கு வந்துள்ளது.
முரசும்-தன் சக்திக்குட்பட்ட வகையில்
கிடைத்த தரவுகள்-தகவல்கள்-
வாசகர் கணிப்புக்கள் மூலமாக
முன்கூட்டியே சில முடிவுகளை
வெளியிட்டது. அது வரவேற்கவும்பட்டது.

ஆயினும்-அதனால் பாதிக்கப்பட்ட சிலர்
மிகவும் மனம் வருந்தி-மனம் புழுங்கி
விருப்பத்திற்கு ஏற்ப வியாக்கியானம்
சொல்லித் துள்ளியதுதான் வேடிக்கை.

அந்தந்த நேர முடிவுகளே
தேர்தல் கால கணிப்புக்கள்.
அவற்றில் மாறுதல்கள் ஏற்படலாம்.

கணிப்புகளைப் பொய்யாக்கிப் புரட்டிய
ஆச்சரிய அலைகளும் உண்டு.
கணிப்புக்கள் மெய் என்று காட்டிய
தேர்தல் முடிவுகளும் உண்டு.

எனவே- ஜனநாயகத்தில்
சகிப்புத்தன்மையும்-
புதிய போக்குகளை ஏற்கும் தன்மையும்
முக்கியம் என்பதை மறவாதிருப்போம்.
தங்களுக்கு பாதிப்பு என்றாகிவிட்டால்
நம்மில் சிலர்
வரவேற்கப்பட வேண்டிய மாற்றங்களைக்கூட
குறுக்கே நின்று மறிக்க நினைக்கிறார்கள்.
அவர்களுக்கு-
நம் அனுதாபங்கள்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை,

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-61

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**ஓர் உயிர்**

தேசமெங்கும்
பிணக்குவியல்.
தேர்ந்தெடுத்தோம்,
ஓர் உயிரை.....!

எஸ்.பீ.டீன்
பிரதான வீதி,கல்பிட்டி.

### வியக்கப்பட்டவை

**உன்னைச் சொல்லவில்லை**

விழியிருந்தும், மனமிருந்தும் வியப்பைக் காணோம்.
செவியிருந்தும், வாயிருந்தும் செப்பக் காணோம்.
கையிருந்தும் காலிருந்தும் செயலைக்காணோம்
நான் உன்னைச் சொல்லவில்லை.
என்னாட்டு அரசியலைச் சொன்னேன்.

வி.துரைராஜா-வவுனியா.

போரென்னும் வாளொன்று
அறுவடை செய்த இளம் பயிரின்று
பார்வையை இழந்ததா? இல்லை
பாரினிலே மனித நாசத்தை புரிந்ததா?

கோகிலா குமாரவேல்-இரத்தினபுரி.

போர் வெப்பத்தில்
கருகிய சிறுமலர்
கண்ணீர்விட
கண் ஒன்றுண்டு
கட்டியழ
உறவு ஒன்றுமில்லை.

பா.பிரதீபன்
அக்கரைப்பற்று-08.

**குற்றம்**

தேர்தல்
பிரச்சாரக்கூட்டத்தில்
முன் வரிசையில்
இருந்தது
குற்றமாயிற்று!

எஸ்.செல்வா
அக்கரைப்பற்று-07.

**இலச்சினைகள்**

அங்கவீனமும்
அவலமும்,
எங்கள்
தேசத்தின்
இலச்சினைகள்.

பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**யாருக்குத் தெரியும்**

போருக்குத் தெரியும்
பார்வையை நிறுத்த
யாருக்குத் தெரியும்
போரை நிறுத்த?

ச.மகாலிங்கம்-வெளிமடை.

**காணச் சகிக்காமல்...?**

பட்டங்கள் பதவிகளுக்காய்
பதறுகின்ற மனிதரை;
குற்றங்கள் கொடுரங்கள்
குவிந்துவிட்ட தேசத்தை
காணச் சகிக்காமல்-உன்
கண்களிலொன்று
கழன்று விழுந்ததுவோ?

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.



**யார் கொடுப்பார்**

பாரில் போர் சோதனை
பிள்ளை இவன் வேதனை
வாடும் இந்த ஜீவனுக்கு
வாழ வழி யார் கொடுப்பார்

தெ.லோஜனா-கொழும்பு-15.

அரசியல் சதுராட்டப் போரில்
நகர்த்தப்படும்
அநாதைக் காய்கள்;
நாங்கள்
அகதிகளாவதுமுண்டு
அழிந்து போவதுமுண்டு

மாஸ்டர்.எஸ்.நோபிராகவன்
அக்கரைப்பற்று-07.

**உணர்ந்திடும் காலம் வருமா?**

முடிவில்லா யுத்தமங்கே..
முளைத்ததே பாலைவனம்..
நெஞ்சம் குமுறவைத்த..
பஞ்சமோ தலை தூக்க..

ஊனமுற்று..
உணர்வற்று..
ஊசலாடும்..
உயிரினம்..
உலகமதை உணரவைத்து
உணர்ந்திடும் காலம் வருமா?

மகாலிங்கம்-பொகவந்தலாவ.

**நானும் ஒரு கவிதை**

போர்த்
தேவதையால்
எழுதப்படும்
புதுக் கவிதைகளில்
நானும்
ஒரு கவிதை.

த.கண்ணன்
வவுனியா.

நிகழ்கால
யுத்த
விளைவுகளை
எதிர்காலத்திற்கு
எடுத்துச் சொல்லும்
பதிவேடுகள்!

தங்கத்துரை ஜெயாஞ்சலி
தம்பிலுவில்-02.

**எது முக்கியம் இப்போ?**

கண்ணு போனால் என்ன?
கை போனால் என்ன?-என்
கட்சி தலைவரின்
பெயர் போகாமல்
இருந்தால் சரி.

சரவணேஸ் டெயிசி-கலவான.

## கவிதைப் போட்டி இல-64



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 27.08.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 64
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772, கொழும்பு.

**சிதைவுகள்**

ஈயக் குண்டுகளுக்கு
அழிந்து போனது
என் கண்ணும் கையுமா?
என் தேசமும்

கவிக்குயில்- ஆரையம்பதி.

**இலச்சினை**


அநாதைகள் கட்சிக்கு
அருகதையான
அரசியல் இலச்சினை

ஏ.எச்.எம்.பாஹிம்
ஹிஜ்ராபுரம்.

**குருட்டு மனங்கள்**

கண்களை மூடிக்கொண்ட
உலகமே, அழுது வடியும்
எங்கள் வானம்
விடிவதெப்போது?

ஷர்மி-கண்டி



திக்கெட்டும் ஒலிக்கும் தினமுரசே, நீ தரும் சகல அம்சங்களும் தித்திக்கும் தேன் சுவை தருகிறது. அரசியல் அலசல் இராஜதந்திரி அவர்களுக்கு எனது பாராட்டு. தினமுரசு என்றென்றும் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

வி.கலியபெருமாள்-நாகசேனை.

□□

சூடு, சுவை, சுவாரஸ்யம் நிறைந்த தினமுரசே, என் இதயத்தை கொள்ளை கொண்ட தினமுரசே, நீ சுமந்து வரும் சிறு கதைகள், சினி விசிட் வர்ணப்படங்கள் அனைத்தும் ரொம்ப... ரொம்ப... சுப்பர்.

எ.ஆர்.மாஹிர்-நுரைச்சோலை.

□□

**நில் !கவனி!!முன்னேறு!!!**

அற்புதனின் அற்புத படைப்பான நில்! கவனி!! முன்னேறு!!! எனும் புதிய அம்சம் சிந்தனை ஆற்றலைத் தூண்டும் அளவிற்கு அமைந்திருக்கின்றது. அற்புதனுக்கு சபாஷ்.

ரசிகனின் 'கொலை விழும் நேரம்' விறுவிறுப்பாகச் செல்வதை இட்டு என்மனம் பூரிப்படைகின்றது. ரசிகனின் மற்றுமொரு படைப்பான 'இலக்கிய நயம்' உண்மையில் இலக்கியத் தேன் சொட்ட வைக்கிறது. ரசிகனுக்கு தினமுரசு வாரமலர் வாசகர்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

எம்.மசூத் அஹமத்-காத்தான்குடி-03.

□□

அன்பின் தினமுரசே,

வாராவாரம் அள்ளித் தரும் ஆன்மீகம், முரசம், அரசியல் அலசல், சிறு கதைகள், புதுமை செய்திகள், கவிதைகள் அள்ளித் தந்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. தினமுரசுக்கு எனது வாழ்த்துக்கள்.

சிறிபாலன்-சத்துருக்கொண்டான்.

□□

சுவைக்க சிந்திக்க வைக்கும் என் அருமை முரசே!

வாரமொருமுறை என்னருகில் வந்திடுவாய் என்னுயிர் முரசு கொட்டும் வாரமலரே! நீர் பல்சுவை கொண்டு இரசிகர்களை மகிழ்விக்கும் ஒவ்வொரு ஆக்கங்களும் சுவையோ சுவை.

உண்மையிலே சென்ற வாரம் உனது இதழில் கொண்டுவந்த தகவல் பெட்டியில் பெண்களை மாத்திரமல்ல, ஆண்களையும் திகைக்க வைத்தது அந்த மார்புகள் சொன்ன தகவல்கள். உன்னை எவ்வாறு பாராட்டுவது உனக்கு நீயே நிகர்! எனது வாழ்த்துக்கள்.

எஸ்.பரமேஸ்வரன்-அக்கரைப்பற்று-07.

□□

என் அன்பின் முரசே, நீ சுமந்துவரும் எக்ஸ்ரே ரிப்போர்ட், தேன் கிண்ணம், இலக்கிய நயம் என்பன என் மனதை கொள்ளை கொண்டுவிட்டன.

க.முகுந்தன்-அக்கரைப்பற்று-2

□□

அன்பின் முரசே,

உன்னை கையில் எடுத்ததும் எங்களையே மறந்துவிடுகிறோம். நீ, சுமந்து வரும் அனைத்து அம்சங்களும், எங்களை உள்ளம் குளிர வைக்கின்றன. அற்புதமான கருத்துகளை அள்ளி வழங்கிய தினமுரசே உனக்கு எங்கள் அன்பார்ந்த வாழ்த்துக்கள் பல..பல.

செல்வி.ரஞ்சனா வடிவேலு,
மங்களகௌரி-அட்டன்.



முத்துப்போன்ற முரசே!

உன்னை ஆசையுடன் வாழ்த்துகின்றேன் முதல் கண். உன்னில் அடங்கும் ஒவ்வொரு வசனமும் வாழ்வுள்ளவரை அறிவூட்டிக் கொண்டே இருக்கும். என்னை கவர்ந்த கவிதை போட்டி, தேன் கிண்ணம், நில்!கவனி!!முன்னேறு!!! லேடீஸ் ஸ்பெசல் அனைத்தும் அருமை. என்றும் அனைத்தையும்விட நீ முன்னிடம் பெறவும்.

நஸீதா நஸீன்-அக்குறணை-7.

□□

ஆரம்பகாலம் முதல் தினமுரசு வாரமலரின் பல்லாயிரக் கணக்கான இலங்கைவாழ் வாசகப் பெருமக்களில் ஒருவன் நான்.

எமது நாட்டில் தளிர்விடும் (வெளியாகும்) தமிழ் சஞ்சிகைகள்கூடிய காலம் நிலை நிற்பது இல்லை. அதனையிட்டும் வருந்திக் கொண்டிருந்த என் போன்ற தமிழ் நேயர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக வந்து வாராவாரம் வாய்க்கும் மனதுக்கும் ருசியான புதுப்புது புதிரான விடயங்களையெல்லாம் புட்டு, புட்டு வைத்தாற்போல வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டிருக்கும் தினமுரசே, உன் முரசொலி இலங்கையில் மட்டுமல்ல திக்கெட்டும் கேட்க வேண்டும். உலகில் உள்ள அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் நீ விருந்தாக வேண்டும். அனைவரும் உன்னை விரும்பி வாங்கிப் படிக்க வேண்டும். உனது தரமான புதுமையான செய்திகளுக்கு எனது பாராட்டுக்கள்.

எஸ்.எம்.எச்.பைசல் அமீன்
சவூதி அரேபியா.

□□

என் அன்புக்குரிய முரசே,

நீ தாங்கிவரும் அம்சங்கள் பிரமாதம். அரசியல் அலசல், சினி விசிட், கவிதை, யாவும் இனிமையே. தொடர்ந்தும் உனது சேவைக்கு எனது வாழ்த்து.

கே.ஆர்.விஜயகுமார்-ராகலை.

□□

# தேசிய அரசாங்கம் தோன்றுமா?

# இரு பெரும் அணிகளும் இரகசிய ஆலோசனை!

பொதுத்தேர்தல் முடிவுகள் எந்தவொரு அணிக்கும் தனிப் பெரும்பான்மையை வழங்காவிட்டால் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி பொதுஜன முன்னணியின் தலைவர்கள் சிலர் இரகசியமாக ஆலோசித்துள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரசின் ஆதரவை நாடுவதற்கு முன்வரலாம் என்றும் அதேபோல,

பொதுஜன முன்னணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உதவியை கோரலாம் என்றும் பேசப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரசிடம் உள்ள ஆசனங்கள் பொதுஜன முன்னணி ஆட்சி அமைக்கப் போதுமானதாக இல்லாவிட்டால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு ஆதரவு தருமாறு கோரக்கூடும்.

ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இரண்டும் இணைந்தும்கூட ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஆனால் இ.தொ. காவும் பொதுஜன முன்னணியும் சேர்ந்தால் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலை உருவா னால் தொண்டா எவ்வாறான முடிவை எடுப்பார் என்று தெரியவில்லை. தொண்டா தமக்கு ஆதரவு தருவார் என்றே பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர்கள் சிலர் நம்புகிறார்கள்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதில் இ.தொ.காவின் ஆதரவு அவசியமாக இருக்குமானால் தொண்டா சில நிபந்தனைகளை முன்வைக்கக்கூடும் என்றும் பேசப்படுகிறது.

முக்கியமான சில அமைச்சுப் பொறுப்புக்களும் அந்த அமைச்சுகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் என்பவற்றையும் அவர் வலியுறுத்தக்கூடும்.

அதேபோல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபும் தனது ஆதரவு தேவையாக உள்ள அணியிடம் நிபந்தனைகளை முன்வைக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும் பதவிக்கு வருமானால் திரு.காமினி திசாநாயக்காவுக்கு மிக முக்கிய பதவி வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

பொதுஜன முன்னணியைப் பொறுத்த வரை இப்போதே சிலர் தமக்கு எப்படியான பதவி கிடைக்கும் என்று தாமாகவே தீர்மானித்து வாக்காளர்களிடமும் கூறி வருகின்றனர்.

பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்தால் சந்திரிக்கா தனது வெற்றிபெற்ற வேட்பாளர்களை சமாளிப்பதற்கு கஷ்டப்படவேண்டியிருக்கும்.

அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் ஆட்சிக்கு யார் வந்தாலும் தமது சொந்த அணிகளுக்குள் உள்ள கோஷ்டிகளுக்கு விட்டுக்கொடுத்து செயற்படவேண்டியே ஏற்படும்.

பெரும்பான்மைப் பலம் இருக்குமானால் ஆட்சிக்குவரும் அணிக்கு உள்ளே தலைவலி குறையும். வெளியே பிடித்து தள்ளிவிடுவார்கள் என்று பயந்து குழுவாதங்கள் மேலோங்காது.

எப்படியோ இரு அணிகளும் கடுமையான ஆலோசனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால்- தனிப் பெரும்பான்மை கிடைத்தால் இரு அணிகளுமே சிறுபான்மைக் கட்சிகளைக் கணக்கில் எடுக்கப்போவதில்லை.

எவருக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் சிறுபான்மை இனங்களுக்கு நன்மை என்றும் அரசியல் கணிப்பாளர்கள் சிலர் கூறிவருகின்றனர்.

## கட்சி மோதல்கள் கட்டில் வரை!

## அம்பாறையில் சூடு! கத்திக்குத்து !!

வடக்கு-கிழக்கில் பொதுத்தேர்தல் நடைபெறும் பகுதிகளில் வன்முறை மோதல்கள் அதிகமாக நடைபெற்றுள்ள மாவட்டம் அம்பாறையாகும்.

முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கிடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 12ம் திகதி கல்முனைக்குடி என்னும் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அபுல் ஹசன்-வயது 27, ஏ.எல்.ஏ.கபூர் (35) ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்குள்ளானோராவர்.

சம்மாந்துறையிலும் ஒருவர் கத்திக்குத்துக் குள்ளாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட பொதுமருத்துவமனையில் காயப்பட்டவர்கள் இருப்பதால் அவர்களைப் பார்வையிட ஆதரவாளர்கள் செல்கிறார்கள். அவ்வாறு போட்டிக் கட்சிகளது ஆதரவாளர்கள் சந்திக்கும்போது மருத்துவமனை யிலும் மோதல் ஏற்படும் சூழல் இருக்கிறது.

இதனால் மாவட்ட வைத்திய அதிகாரி பொலிஸ் பாதுகாப்பு கோரிப் பெற்றுள்ளார். மருத்துவ மனைக் கட்டிலில் இருந்தும் கட்சி மோதலில் ஈடுபட்டால் ஏனைய நோயாளிகள் என்ன செய்வது? அதற்குத்தான் பாதுகாப்பு.

அரசியல் நிலவரம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி வருகிறது! ■

## நோயாளிகளை வதைத்த வித்துவான்

## முதுமையிலும் இளமைபோல் நடித்தவர்கள்

### சுவாரசிய சமாச்சாரங்கள்

கொழும்பில் குமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிடும் வித்துவான் வேலன் என்பவர் தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்றும் புகுந்து பிரசாரம் செய்து வெளுத்துக் கட்டினார்.

நோயால் அவதிப்பட்டவர்களுக்கு அன்னாரின் பிரசாரம் பெரும் தலைவலியாக இருந்ததாம்.

தான் ஒரு தனிமரம் என்று தொடங்கி கூடு கட்டுவது வரை அவர் விலாவாரியாக விளக்கம் சொல்ல, நோயாளிகளுக்கு தலைவலியும்மேலதிக நோயாக வந்து சேர்ந்துவிட்டதாம்.

அவரது பிரசாரத்தால் மிக மிக பாதிக்கப்பட்ட ஒருவர் சொன்ன கருத்து இது: "வித்துவான் வேலனாக இருந்தபோது கொஞ்சம் மதிப்பிருந்தது. வேட்பாளராக மாறியதால் அதுவும் போய்விட்டது."

இதுதவிர, குமாரின் சுயேச்சைக் குழுவில் வேட்பாளராக உள்ள திருமதி கனகசபை (முன்னாள் அதிபர்) தனது தற்போதைய தோற்றமுள்ள புகைப்படத்தை தேர்தல் விளம்பரமாக வெளியிட்டிருந்தார். அதனைப் பார்த்தவர்கள் "இந்த வயதில் ஏன் இந்த ஆசை" என்று கேட்டது காதில் விழுந்ததாலோ என்னவோ மறுநாள் விளம்பரத்தில் சற்று வயது குறைந்த தோற்றமுடைய பழைய படம் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதேவேளை திருமதி யோகேஸ்வரன் மிக இளமையான படம் ஒன்றை (10-15 வருசத்திற்கு முற்பட்ட) முதலில் விளம்பரத்திற்கு கொடுத்திருந்தார். பின்னர் வாக்குக்கேட்டு சென்றபோது அவரிடமே சிலர் "திருமதி யோகேஸ் வரவில்லையா?" என்று கேட்டதால் சங்கடமாகி தனது தற்போதைய தோற்றமுள்ள புகைப்படத்தை பின்னர் வெளியிட்டிருந்தார். ●




இனிய வாசக நெஞ்சங்களுக்கு

-மீலாத் வாழ்த்துக்கள்-

வாழ்வில் மலர்ச்சி
என்றும் நிலைக்கவும்-
மனித நேசிப்பும்
மனித உறவுகளும்
செழிக்கவும்-
'மீலாத்' நாளில்
வாழ்த்துவோம்.
முயன்று வெல்வோம்.

## சந்திரிகா-பிரபா சுவரொட்டி

தேர்தல் பிரசார இறுதி நாளான 13ம் திகதி கொழும்பு நகரில் புதிய சுவரொட்டி ஒன்று தோன்றியது.

திருமதி. சந்திரிக்கா பூத்தாவுவது போலவும்- பிரபா வடக்கையும்- அஷ்ரப் கிழக்கையும் பிரித்தெடுத்து விட்டது போலவும் அச் சுவரொட்டியில் சித்தரிக்கப்பட்டிருந்தது.

அது மட்டுமல்லாமல் தேர்தல் பிரசார இறுதிநாளன்று கேலிச் சித்திரங்கள் அடங்கிய பிரசுரங்களும் கூட்டங்களில் அதிரடியாய் விநியோகிக்கப்பட்டன. அநேகமாக பொதுஜன முன்னணிக்கு எதிரானவையாகவே அவை காணப்பட்டன.

## 14 வயது சிறுவன் பலி

## மிதி வெடியால் உடல் சிதறியது

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதி தற்போது விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கிறது.

சமீபத்தில் இரு சிறுவர்கள் யாழ் கோட்டைப் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த போது திடீரென்று வெடிச்சத்தமும், மரண ஓலமும் கேட்டது.

அப்பகுதியில் இருந்த மிதி வெடியை தற்செயலாக மிதித்துவிட்ட 14 வயதுச் சிறுவன் உடல் சிதறிக் கிடந்தான். அருகில் அவனது 7வயது சகோதரன் படுகாயமடைந்த நிலையில் விழுந்து கிடந்தான். ●

## வீடுடைத்த 'வீர' வேட்பாளர்

மட்டக்களப்பில் சுயேச்சை குழுவொன்றில் போட்டியிடும் கோபிதராஜா எனப்படும் காளிதாஸ் பற்றி முரசு ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த காளிதாஸ் தேர்தலில் போட்டியிட ஆரம்பமாகும் போதே அரசியல் அசிங்கம் அரங்கேறப்போவதாக முரசு முன்கூட்டியே சுட்டிக்காட்டியிருந்தது.

தொலைக்காட்சியில் தோன்றி சமூக [illegible]

## யாழ் பயணிகளிடம் கொள்ளை

கொழும்பில் இருந்து கிளாலி கடல் [illegible] யாழ் சென்ற பயணிகளிடம் கொள்ளை நடந்துள்ளது.

அப்பயணிகள் கிளாலியில் படகிலிருந்து இறங்கியபின் ஆட்டோ ஒன்றில் யாழ்ப்பாணம் நோக்கி சென்றனர். அப்போது எழுதுமட்டுவான் சந்தியில் வைத்து கொள்ளையாளர்களால் ஆட்டோ வழிமறிக்கப்பட்டது. பயணிகளிடம் இருந்த நகைகள், பணம் உட்பட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உடமைகளை கொள்ளையர் சுருட்டிச் சென்றுவிட்டனராம்.

எழுதுமட்டுவான் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். புலிகள் அமைப்பின் காவல்துறையிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாம். ●

## அதிக விருப்பு வாக்கு யாருக்கு?


கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களிடையே திருமதி சிரிமணி அத்துலத் முதலி அதிக விருப்பு வாக்குளைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் பொதுஜன முன்னணியில் போட்டியிடும் சி.வி. குணரத்தினவும் அதிக விருப்பு வாக்குகள் பெறுவார் என்று நம்பப்படுகிறது. ●

## முன்னேஸ்வரம் திரு விழா

(சிலாபம் நிருபர்)

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலய வருடாந்த உற்வசம் எதிர்வரும் 23ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 28 நாட்கள் திருவிழா நடைபெறும். செப்டெம்பர் மாதம் 18ம் திகதி தேர்த் திருவிழாவும், 19ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். இம்முறை நாட்டின் பல பகுதிகளிலுமிருந்தும் பக்தர்கள் கூடுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

## தோல்வி விளக்க கூட்டம்



இத்தனை மக்கள் செல்வாக்கு இருக்கும்போது, காத்திரமான நமது கட்சி தோல்வியடைந்தது சதியால்-மோசடியால் என்பதை இங்குள்ள பல ஆயிரம் மக்களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

## சபாலிங்கம் கொலையின் சூத்திரதாரி சுக்ளா!

## சுவிஸிலுள்ள ஈழத் தமிழர் அமைப்பு தெரிவிப்பு!

சுவிட்ஸர்லாந்தில் நடிகர் ரஜனிகாந்த் நடத்தவிருந்த நட்சத்திர நிகழ்ச்சிகளை அங்குள்ள ஈழத் தமிழர்கள் சிலர் தடுத்தது பற்றி முரசு ஏற்கனவே விபரமாக செய்திகள் வெளியிட்டிருந்தது.

தற்போது சுவிஸ் தமிழர் நலன்புரிச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்று அங்கு தொடர்ந்தும் இலங்கைத் தமிழர்களுக்கு நடைபெறும் மோதல்கள், பூசல்கள் பற்றி சுட்டிகாட்டுகிறது.

அந்த அறிக்கையின்படி பிரான்சின் பாரிஸ் நகரில் கடந்த மே மாதம் 1ம் திகதி கொல்லப்பட்ட இலங்கைப் பத்திரிகையாளரான சபாலிங்கம் படுகொலைக்கு சுக்ளா என்பவரே காரணம் என்று நம்பப்படுகிறது. சுக்ளா ஏற்கனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமாராட்சியில் புலிகள் இயக்க பொறுப்பாளராக இருந்தவர். பின்னர் இயக்கத்தை விட்டு பிரான்சுக்கு தப்பி ஓடியவர். இப்போது அங்கு புலிகள் இயக்க ஆதரவாளராக இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

சுக்ளா தற்போது சுவிட்ஸர்லாந்திற்கு வந்துள்ளதாகவும், அங்கு அவராலும், புலிகள் இயக்க ஆதரவாளர்களாலும் இரு தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானதாகவும் சுவிஸ் தமிழர் நலன்புரிச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ரஜனிகாந்த் நிகழ்ச்சியை குழப்பியவர்களால் தற்போது பிரபு நடித்த 'வியட்நாம் காலனி' என்னும் படம் திரையிடப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. ●

# தேனகத்தின் செய்தித்துளி

## தேனீ

* மட்டுநகரில் பொலிஸ் பிரிவினர்- செய்தியாளர் சந்திப்பொன்றில் 'அனைத்து கட்சி பிரசுரங்களையும், எழுத்துக்களையும் அகற்றுவோம்' என சூழுரைத்தனர். மட்டு-திருமலை வீதியில் கோட்டமுனைப் பாலத்திற்கு அணித்தாகவுள்ள வீதிகளில் கண்ணுக் குத் தைத்த வெள்ளை எழுத்துக்களை தார் கொண்டு அழித்தனர். சுவ ரொட்டிகளும் உராய்ந்து கிழிக்கப் பட்டன. இவையெல்லாம் துலக்கியதன் காரணம்தான் என்ன? மறுநாள் காலை சுவர்களில் அலங்காரமாக, தொடராக ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களில் சனாதிபதியின் படங்கள்தான். நாலா திசைகளிலும் பச்சைக் கொடிகள், யு.என்.பி.வேட்பாளர்களின் படங்கள். இது ஒரு புதுவிதமான ஜனநாயகம் என மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே என்ற கதைதான்.
* கிழக்கு பல்கலைக்கழக- வந்தாறுமூலை விவசாய வளாகத்தில் விவசாயப் பொருட்காட்சி சிறப்பாக நடந்தேறியது. வடக்கு-கிழக்கு ஆளுநர் லயனல் பெர்னாண்டோ பிரதம அதிதியாக கலந்துகொண்டு காட்சியைத் திறந்து வைத்தார். முற்பகலில் தான் திறப்பு விழா வைபவம் என்றிருந்தது. ஆனால் ஆளுநர் பிற்பகலில் 3 மணிக்குப் பின்னரே வந்து சேர்ந்தார். பிரமு கர்கள், பாடசாலைப் பிள்ளைகள் 'எல்லோருமே அதுவரை வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தனர். மனம் வைத்து காத்திருந்து- சலித்துப் போனோர் ஆளுநர் உரையாற்றியதும் அவருடன் அன்புடன் ஒன்றித்துப் போனார்கள். எப்படி அவரது ஆளுமை?
* திருகோணமலை, மட்டக்களப்பு மேற்றிராசன பாதுகாவலரான புனித இஞ்ஞாசியார் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு 75 ஆண்டு பவளவிழா குதூகலமாக கொண்டாடப்பட்டது. காலை முதல் மாலைவரை விளையாட்டுவிழா மக்களை உற்சாகப்படுத்தியது. திருமலை-மட்டுநகர் ஆயர் அதி.வண. கலாநிதி. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்புச் செய்தார்.
* மட்டக்களப்பு-இருதயபுரம் மாநகர பாலர் பாடசாலை சிறுவர் விளை யாட்டு விழா பாடசாலை முன்றலில் அதிபர் திருமதி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். முதல்வ ருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது. மாநகர ஆணையாளர் வி.கணபதிப்பிள்ளை இவ்விழாவின் சிறப்பு அதிதியாவார்.
* மட்டக்களப்பு-தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய உற்சவம் முடிவுற்றது. இது இனிப்பான செய்தி. உற்சவ காலங்களில் அங்கு பதுங்கியிருந்த விசேட அதிரடிப்படையினர் காவடி எடுத்து நேர்த்திக்கடன் முடித்த இரண்டு முக்கிய புலிகளை சுட்டு வீழ்த்தினர். இது கசப்பான செய்தி. இதேவேளையில் தாந்தாமலை உற்ச வத்தைப் புலிகளே நின்று நடாத்திய இரகசியம் இவர்களுக்கு தெரிய வந்தது போலும்.
* மட்டக்களப்பு மாமங்கேஸ்வரர் வருடாந்த தீர்த்தோற்சவ விழா சிறப் பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாமங்கேஸ்வரரை தரிசிக்க கூடினார்கள். ஆனால் ஆலய வீதியின் ஒரு பகுதியில் காவல் படையினர் மையம்கொண்டிருந்தனர். இவர்களது காவல் அரண்களுக்கு பாதுகாப்பாக முட்கம்பி வேலி குறுக்கே வரியிடப்பட்டி ருந்தது. அகற்றி உதவி அடியார்கள் இருபுற வழிகளாலும் விஸ்தாரமான வீதிக்கு வரக்கூடியதாக மனம்திறக்கும் படி ஆலய நிர்வாகிகள் அதிகாரிகளை மன்றாடினர். வேண்டுகோளுக்கு கிடைத்த பதில்- முட்கம்பி வேலி பழுதுபார்க்கப்பட்டு இறுக்கமாக அடி பட்டதுதான். மாமங்கேஸ்வரரை தரிசிக்க வந்தோர் முள்வழிப் பாதையினால்தான் வரமுடிந்தது. கடவுளுக்கும்- மனிதனுக்குமிடையில் ஏன் இந்த முள் வேலி? மாமங்கேஸ் வரருக்கே வெளிச்சம்.
* மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுத்தேர்தலில் வேட்பாளர்களாக நின்றவர்கள் திடுதிப்பென்று நகரின் பாடசாலைகளுக்குள் விஜயம் செய்து வோட்டுக்கேட்க முனைந்தனர். காலை வேளைகளில் காரும், ஆட்களுமாக கல்லூரிகளுக்குள் நுழைவது சர்வ சாதாரண நிகழ்வாக இருந்தது.

# கணவன் குடிவெறியில் தொல்லை!

## மனைவி தற்கொலை!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்- ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான விசயகம் (40) கணவனின் குடி வெறி தொல்லை தாங்க முடியாமல் அலரிப் பருப்புச் சாப்பிட்டு உயிர்துறந்தார்.

சம்பவதினம் கணவன் தனது சைக்கிளை சாராயக் கடையில் அடைவு வைத்து குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து மனைவியிடம் சாப்பாடு கேட்டு தாறுமாறாக அடித்து வீட்டுப் பாவினைப் பொருட்களையும் உடைத்து நொருக்கியிருக்கிறார். இதைக் கேள்வியுற்ற மகன் ஓடி வந்து பார்க்கும்போது தாய் அடி காயங்களுடன் வீழ்ந்து கிடந்து அழுததைக் கண்டு ஆத்திரமுற்று தந்தைக்கு அடித்திருக்கிறார். இதன் பின்னர் கணவர் தன்னை மீண்டும் துன்புறுத்துவார் என்ற பீதியில் மனைவி அலரிப் பருப்பைச் சாப்பிட்டு சாவை அணைத்துக் கொண்டுள்ளார்.

இக்குடும்பத்தினர் இந்தியாவிலும் வவுனியாவிலும் அகதிகளாக இருந்து இங்கு வந்து இரண்டு மாதங்களே ஆகின்றன.

# 46 வருடம் நீடித்த வழக்கு

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்ட நீதி மன்றத்தில் 46 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வழக்கொன்றுக்கு அண்மையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ரசூல் என்பவரின் சொத்துக்கான வாரிசுரிமை தொடர்பாக அவரின் மனைவி ஹனூன் ரசூல் என்பவருக்கெதிராக 15.06.48ல் இவ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

திருகோணமலை, மட்டக்களப்பு, ஏறாவூர் ஆகிய இடங்களிலுள்ள தென்னந் தோட்டங் களுட்பட்ட 3500 ஏக்கர் காணி, 65 பெறு மதியான வீடுகள், இரண்டு ஐஸ் உற்பத்திச் சாலைகள் என்பன கொண்ட 145 ஆதனங்கள் தொடர்பாக இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வந்ததெனினும் 10.05.62ல் இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு 31.05.62க்கு ஒத்தி வைக்கப்பட்ட பின் எவ்வித தடய முமின்றி திட்டமிட்டு அமுக்கப்பட்டிருந்தது.

தற்போதைய மாவட்ட நீதிபதியின் முயற்சியால் மீண்டும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுபட்டதைத் தொடர்ந்து 12.07.94ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையின் பிரபல சட்டத் தரணி ஒருவர் திட்டமிட்டு தவறான கையாளுகை, நம்பிக்கைக்குக் குந்தக நடத்தை என்பவற்றை மேற்கொண்டதாகவும் விசாரணை முடிவில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்குள் கணக்கு வழக்கை முடித்து உரியவர்களிடம் சொத்துக்களைக் கையளிக்குமாறு மேற்படி சட்டத்தரணிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் நம்பிக்கைப் பொறுப்பாளியான அவர் கடனாளியாகவே காணப்படுகிறார் என்றும் தீர்ப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வதாயின் பத்து இலட்சம் ரூபா பிணையாக வைப்பிலிடும்படியும் அச்சட்டத்தரணியை நீதிமன்றம் கோரியுள்ளது.

# வெள்ளத்தில் மூழ்கும் ஆலயம்



(மஸ்கெலியா நிருபர்)

மவுசாக்கலை நீர்த்தேக்கம் மஸ்கெலியா நகரையொட்டி அமைந்துள்ளது. நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டபோது மஸ்கெலியா பழைய நகரம் முற்றாக நீரில் மூழ்கியது.

படத்தில் காணப்படுவது பழைய மஸ்கெலியா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சண்முகநாதர் சுவாமி ஆலயமாகும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் 'கைவிடப்பட்ட இவ்வாலயத்தை நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் குறையும்போது (கோடை காலத்தில், முழுமையாகப் பார்க்கலாம்.

தற்போது மாரிகாலம் ஆரம்பித்து விட்டதால் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நீர்த்தேக்கம் ஆகக் கூடிய மட்டத்திற்கு உயரும்போது ஆலயத்தின் கோபுர உச்சி மட்டுமே வெளியில் தெரியும்.

## புகார் பெட்டி

# இங்கும் தமிழைத் தேடுகிறோம்!

(ஹேவாஹெட்ட நிருபர்)

கண்டியைச் சேர்ந்த பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகத்திலே தமிழ்மொழி மூலமான கருமங்களைச் செய்வதற்கு தமிழ் பேசும் ஊழியர்கள் எவருமே இல்லையென்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த செயலகத்துடன், பல கருமங்களுக்காகத் தொடர்பு கொள்ளும், பெருந்தொகையான தமிழ் பேசும் மக்கள் தினமும் பல்வேறு வித அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த செயலகத்தினால் அடிக்கடி வெளியிடப்படுகின்ற அறிவித்தல்கள், அறிக்கைகள் என்பன யாவும் தனிச் சிங்களத்திலேயே இடம் பெறுவதனால் தமிழ் மொழி மூலமான தொடர்புகள் உட்பட தமிழிலான கடிதங்கள் மீதான கரிசனையும் தாமதமடைவது இங்கு வழக்கமாகிவிட்டது. இதே நிலை இப்பகுதி பிரதேச பதிவாளர் காரியாலயத்திலும் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த காரியாலயத்துடன், பிறப்பு, இறப்பு, திருமண பதிவு விடயங்களுக்காகவும் சான்றிதழ்கள் பெறுவதற்காகவும், செல்கின்றவர்கள் தினமும் அங்கலாய்த்தவர்களாக திரும்பி வருவதையும் அவதானிக்க முடிகிறது.

பதிவாளர் காரியாலயத்தின் இந்த குறைபாடு இங்குள்ள பல தோட்டப்புற தமிழ் மக்களையே பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது. அரச கரும மொழியான தமிழுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவல நிலையைப் போக்க சம்பந்தப்பட்ட காரியாலயங்களுக்கு உடன் தமிழ் மொழியிலான கருமங்களுக்காக ஊழியர்களை அமர்த்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேசவாசிகள் 'தினமுரசு' மூலம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இப்படியும் ஒருமக்கள் மய பஸ்சேவை! பரிதாபமான பயணிகள்!!

மட்டு மக்கள்மய பஸ் சேவை உரிய நேரத்திற்கு கிடைப்பதில்லை. இது ஒருபுறமிருக்க மட்டு பிரதான பஸ் தரிப்பிடத்தில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று நகைப்பிற்கிடமானது. கூட்டுறவுத் துறையினரின் வாழைச்சேனை பஸ் ஒன்று மட்டு பிரதான பஸ் நிலையத்திற்கு அண்மையில் வந்து நின்றபொழுது அவ்விடத்தில் நீண்டநேரமாகக் காத்து நின்ற பயணிகள் அந்த பஸ்ஸில் ஏற முற்பட்டனர். அவ்வேளை அங்கிருந்த மட்டு மக்கள்மய பஸ் சேவை நேரக் காப்பாளர் (ரைம் கீப்பர்) பயணிகளை ஏறவேண்டாம் . என்று தடுத்ததுடன் அந்த பஸ்காரருடனும் தர்க்கம் புரிந்தார். எனினும் சில பயணிகள் அந்த பஸ்ஸில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தனர். அந்தக் கூட்டுறவு பஸ் அவ்விடத்தில் வந்து பயணிகளை ஏற்றிச் சென்றது சம்பந்தமாக அவ்விடத்தில் நின்ற பொலிசாரிடம் அந்த நேரக் காப்பாளர் 'இவ்விடத்தில் கூட்டுறவு பஸ்களும், தனியார் பஸ்களும் வந்து பயணிகளை ஏற்றக்கூடாது என்று தடையுள்ளது. எனினும் அந்த கூட்டுறவு பஸ்காரர் பயணிகளை ஏற்றிச் சென்றுவிட்டார்' என்று முறையிட்டார்.

அவரால் ஏறவேண்டாம் என்று தடுக்கப் பட்ட வாழைச்சேனை செல்லும் மாணவி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பஸ்ஸுக்காக தான் பி.ப.2மணி தொடக்கம் கால் கடுக்க நிற்பதாகவும், மக்கள்மய பஸ். பி.ப 4.30 மணிக்கே கிடைக்கும் என்றும் கூறி பஸ்ஸில் ஏறவிடாது தடுத்த அந்த அதிகாரியைக் கடிந்து கொண்டார்.

மேலும் ஒரு அலுவலர் கருத்துக் கூறுகையில் "இவர்களுக்கு பயணிகளின் நலனில் அக்கறை யில்லை. குறிப்பிட்ட நேரத்திற்கு மக்கள்மய பஸ்சேவை கிடைப்பதில்லை. அதுவுமல்லாமல் உரிய நேரத்திற்கு வரும் வேறு பஸ்களில் போவதையும் தடுக்கிறார்கள். அலுவலகம் முடிந்து செல்லும் மாலை 5க்கும்-6க்கும் இடையிலும் அலுவலகத்திற்கு வரும் காலை 5.30க்கும் 7மணிக்கும் வாழைச்சேனை மட்டக்களப்பு-மட்டக்களப்பு வாழைச்சேனைக்கு இவர்களது பஸ் சேவை பயனளிப்பதில்லை. இவ்வேளையில் கூட்டுறவுத் துறை பஸ்களும் தனியார் பஸ்களுமே சிறந்த சேவையாற்று கின்றன" என்று கூறி பயணிகளை ஏறவிடாது தடுத்த அந்த அதிகாரியைக் கடிந்து கொண்டார்.

மட்டக்களப்பில் கூட்டுறவுத் துறையினரும் தனியாரும் உரிய நேரத்திற்கு சிறந்த பஸ் சேவைகளை நடாத்தி வருகின்றனர் என்பது தெரிந்ததே.

(ஏறாவூர் நிருபர்)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தேவை! உடனடியாக தற்காப்பு கவசம்!

தற்போது கம்பனிகளுக்குச் சொந்தமான தோட்டங்களில் வேலை செய்துவரும் தோட்ட தொழிலாளர்கள் பெரும் அசௌ கரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். காரணம் தோட்டங்களில், கிருமி நாசினிகளையும், களைக் கொல்லிகளையும், தயார்படுத்தி மலைகளுக்கு அடிக்கும்போது எதுவித பாதுகாப்புமின்றி, இவர்கள் பாதிப்படைகின்றனர்.

குறிப்பிட்ட நேரங்களில் விசுறுவதில்லை. கடும் சூடான வெய்யில் நேரங்களையே கையாண்டு வருகின்றனர். விசிறும் பதார்த்தத்தை தயாரிக்கும்போது அல்லது விசிறும்போது உண்பதை, நீர் அருந்துவதை, புகைப்பதை, வெற்றிலை போடுவதையே இவர்கள் கூடியளவு விரும்பி வருகின்றனர். பயன்படுத்தப்படும் விசிறல் கருவியானவை (KNAPSACK SPRAYER) மேற்கொள்ளப் படும். நிலப்பரப்புக்கு போதுமானதாகவும் இல்லை.

இந்நிலை மாறி தோட்ட தொழிலாளர்களும் சிறப்படைய வேண்டும். தோட்ட தொழிலாளர்களும் தற்காப்பு கவசங்களை பயன்படுத்தி பயனடையவேண்டும். இவர்கள் இந்நிலையில் தொடர்ந்தும் செல்வார்களாயின் இவர்களின் நிலை காலப்போக்கில் கவலைக்கிடமாகிவிடும்.

எனவே இது குறித்து தோட்டங்களில் மருந்தடிப்பவர்களின் நலன்கருதி தொழிற்சங்கவாதிகளும், தோட்டச் சொந்தக்காரர்களும் சுகாதார வைத்திய பகுதியினரும் கலந்தா லோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மடுல்சீமையூர். பெ. சண்முகராஜா.

# மொழி தெரியாமல் அவதி!

கந்தளாய் அரசாங்க வைத்தியசாலை தற்போது புனரமைக்கப்பட்டு பூர்த்தி அடைந்துள்ளது. பல வசதிகளுடன் காணப் படும் இவ்வைத்தியசாலையில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கடமை புரிகின்றனர். இங்கு நோயாளிகளைக் கவனிக்கும் தாதிமார்கள் தமிழ் பேசத் தெரியாமல், நோயாளிகள் சிங்களம் புரியாமல் படும் சிரமம் சொல்லிலடங்காது. இத்தனை வசதிகளும் அடங்கியுள்ள இவ்வைத்திய சாலைக்கு தமிழ் பேசும் தாதிகளையும் கடமைக்கு அமர்த்தினால் நோயாளர்களின் சிரமம் தீரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நோய்ாளிகளின் சிரமத்தைத் தீர்த்துவைக்க அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என தமிழ் பேசும் மக்கள் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

ஏ.எம்.அப்துல் றகுமான்-சிறாஜ் நகர்.


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.

உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ, இஷ்டப்பட்டவளையோ தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய ரொ.ஃபி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

**வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.**

| தலைமைப்பீடம் | கொழும்பில்- |
| --- | --- |
| P.K.சாமி JDGAN | இல: 162, |
| (மாந்திரீகச் சக்கரவர்த்தி) | கொட்டாஞ்சேனை வீதி, |
| சிறீ துர்க்காதேவி ஆலயம் | கொட்டாஞ்சேனை. |
| 32, தினச்சந்தை காம்பிளக்ஸ் | கொழும்பு-13. |
| நுவரெலியா. | |

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-434225

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
| --- | --- | --- |
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



## 31ம் நாள் நினைவஞ்சலி
## நன்றி நவிலல்

மலர்வு 15–12–1934



உதிர்வு 14–07–1994


### கருப்பையா ஆச்சாரி சந்தனம் ஆச்சாரி

ஊர்கொடவத்தை காலஞ்சென்ற கருப்பையா ஆச்சாரியின் மகனும் யாழ்ப்பாணம் காலஞ்சென்ற பிரமநாயகம் ஆச்சாரியின் மருமகனுமாகிய கருப்பையா ஆச்சாரி சந்தனம் ஆச்சாரியின் இறுதி ஊர்வலத்திலும் இறுதி சடங்குகளிலும் அந்தியேட்டி கிரிகைகளிலும் கலந்து கொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள், எமது ஆழ்ந்த துயரத்தில் நேரில் கலந்து ஆறுதல் கூறியவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய வர்கள் மற்றும் பலவழிகளில் உதவியவர் களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நீங்காத நினைவுகளுடன்
மனைவி, மக்கள், சகோதரர், சகோதரி
மாமி மைத்துனர்கள்.



## காணவில்லை



கொட்டகலை, மண்வெட்டித் தோட்டத்தைச் சேர்ந்த டி. ஆரியதாஸ் என்பவரின் மகள் **புஷ்பலெட்சுமியை** (16வயது) 18.05.94 முதல் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

டி. ஆரியதாஸ்
மண்வெட்டி தோட்டம்
கொட்டகலை. ADVT.



## கணித விஞ்ஞான ஏனைய வகுப்புகள்

G.C.E. (O/L) மீட்டல் மற்றும் 5, 6, 7, 8, 9,10ஆம் ஆண்டுகளுக்கான விடுமுறைகால விசேட வகுப்புகள் உங்கள் வீடுகளுக்கு வந்து பயிற்றுவிக்கப்படுகின்றன.

விடுமுறையில் 3ஆம் தவணைக்கான பாடத்திட்டம் பூர்த்தியாக்கப் பட்டு ஏனைய குறைவான பாடங்களிலும் கவனம் செலுத்தப்படும். 'குழு'முறையில் ஒழுங்கு செய்வோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**M.R. SATHESSCUMAR**
**29/19. IDAMA MAWATHA**
**POLHENGODA, COLOMBO-05.**

# வன்முறை+வதந்தி=தற்கால அரசியல்

# தமிழ்க்கட்சிகளின் முழக்கங்கள்



## எ-க்-ஸ்-ரே ரி-ப்-போ-ர்-ட்

அதிர்ச்சியாக இருந்தாலும் அதுதான் உண்மை.

கடந்த தேர்தல்களைவிட இம்முறைதான் வன்முறை அதிகம்.

வன்முறைக்கு காரணம் யார் என்பதில் ஒவ்வொரு கட்சியும் மறுதரப்பின்மீது குற்றம் சாட்டிவிட்டு தாம் மட்டும் தப்பிக் கொள்ளப் பார்க்கின்றன.

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வந்தவுடன் வன்முறையும் பிடரியைச் சிலிர்த்தபடி எழுந்துவிட்டது.

தெற்கில்தான் வன்முறைகள் அதிகம் தலைவிரித்தாடின.

தேர்தலுக்கு முன்புவரை வடக்கு-கிழக்குதான் இலங்கையில் வன்முறை நடக்கும் பகுதிகளாக சிவப்பு மையினால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நிலமை அடியோடு மாறியது.

தென்னிலங்கையில் வன்முறை அமோகமாக அரங்கேறி உயிரிழப்புக் களையும் அறிவிக்கத் தொடங்கியது.

17 வருட பொறுமை உடைந்து, சந்திரிக்கா அலை தந்த உற்சாகத்தில் எதிரணிகள் ஒரு புறம்;

17 வருடகால ஆட்சியில் பெற்ற சுகங்களையும் சலுகைகளையும் இழக்க விரும்பாத ஐ.தே.கட்சி மறுபுறம்;

இரு அணிகளும் சந்தித்துக்கொள்ளும் போது பூக்களுக்குப் பதில் பொறிகளே பறந்தன.

பொலிசாருக்கும் தலைவலி. ஆளும் கட்சி உறுப்பினர்களை பிடித்து உள்ளே போடுவதும் சங்கடமான விசயம்.

அடுத்து யார் ஆட்சிக்கு வரப்போகிறார்கள் என்பதே குழப்பமாக இருந்தமையால் எதிரணி முக்கியஸ்தர்கள்மீது கை வைக்கவும் யோசிக்க வேண்டிய நிலை.

இரு தரப்புமே பொலிசார்மீது அதிருப்தி தெரிவித்துக்கொண்டதுதான் இன்னும் கொடுமை.

"அடுத்து ஆட்சிக்கு வரப்போவது நாம்தான் என்பது நினைவிலிருக்கட்டும்" என்று எதிரணி மேடைகளில் பேசப்பட்டது.

பாரபட்சமாக நடந்துகொள்ளும் பொலிஸ் அதிகாரிகளை தாம் வந்தால் பதவி நீக்கம் செய்யப் போவதாக எதிரணித் தலைவர்கள் பகிரங்கமாகவே கூறிக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து அதிகார பலத்துடன் வரும் வன்முறையை தடுக்க, தம்மிடமும் அதிகாரம் வரும் என்ற பேச்சுத்தான் எதிரணிக்கு தற்காப்பு ஆயுதமாக மாறியது.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுஜன முன்னணியையும்,

பொதுஜன முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியையும் மாறி மாறி குற்றம் சாட்டிய போதும், இரண்டு அணியுமே தமக்குள் [illegible]


வன்முறை கூடாது. அரசியலில் [illegible]

இரு [illegible] சிரிப்பது போலத்தான். அரசியல்வாதிகள் மேடையில் பேசும் வன்முறை கூடாது என்ற பேச்சும் [illegible]

"நாமன் மட்டும் அடிப்போம். நீ [illegible] திருப்பியடிக்கக்கூடாது. அப்படி அடித்தால் வன்முறைக்கு நீயே காரணம்" என்பது போலத்தான் ஒவ்வொரு அணியும் நடந்து கொள்கின்றன.

வடக்கு-கிழக்கை என்ன செய்யப் போகிறீர்கள்? பிரிக்காமல் விட்டுவிடாதீர்கள் என்று அக்கறையோடு பேசிய பௌத்த பீடாதிபதிகள்கூட பௌத்த தர்மத்திற்கு விரோதமான வன்முறை பற்றி பெரிதாக வருத்தம் தெரிவிக்கவில்லை.







இன்றைய அரசியலுக்கு வன்முறை என்பது அத்தியாவசியப் பாவனைப் பொருள்.

அரசியல் கட்சிகள் தொண்டர் பலத்தை விட குண்டர் பலத்தையே தேர்தல் காலங்களில் விரும்புகின்றன.

அரசியல் என்பதும் ஒரு தொழிலாக மாறிவருவதால் எப்படியாவது வெற்றி பெற்றேயாக வேண்டும் என்ற வேகமும் அரசியல்வாதிகளிடம் காணப்படுகிறது.

போட்ட மூலதனத்தை திருப்பி எடுத்துவிட வேண்டும். திருப்பி எடுக்கும்போது இலாபத்துடன் எடுக்க வேண்டும். அதற்காக செய்யப்படும் முயற்சிகளில் நேர்மையை எதிர்பார்ப்பது திருவாளர் பொதுஜனத்தின் தவறோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இம்முறை தமிழர் பகுதிகளில் தேர்தல்கால வன்முறைகள் அதிகமில்லை என்பது ஒரு ஆறுதல்.

அடிபட்டுக்கொண்டால் இருக்கும் ஆதரவும் இல்லாமல் போய்விடுமோ என்று சில அமைப்புகளுக்கு இருந்த பயமும் வன்முறை தலைவிரித்தாடாமைக்கு காரணம் எனலாம்.

ஏற்கனவே- ஆயுத அத்துமீறல்கள், அராஜகம், அடாவடித்தனம் பற்றிய மக்களது வெறுப்புக்கு பதில் சொல்லவேண்டிய கட்டாயம். இந்நிலையில் மேலும் அடிபாடுகளில் ஈடுபட்டால் பதில் சொல்லவே முடியாமல் போய்விடும் என்று நம் அமைப்புகளுக்கு தெரியாமலா போயிருக்கும்!

ஆனால்- கிழக்கில்-குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பகுதிகளில் இம்முறை வன்முறையின் ஆதிக்கம் காணப்பட்டது.

முஸ்லிம் காங்கிரசும், ஐ.தே.கட்சியும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டபோதும் இரு கட்சிகளுமே வன்முறையும் தேவை என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொண்டதுதான் உண்மை நிலவரம்.

வன்முறைகளால் தாம் பாதிக்கப்படாத போது பொதுமக்களில் சிலர் வன்முறைப் பலம் கொண்டவர்களை பிரமிப்போடு பாராட்டுவதும் வன்முறை அதிகரிக்க காரணமாகிறது. அதே ஆட்கள் தாம் பாதிக்கப்படும்போதுதான் வன்முறையின் கொடுமையை உணர்ந்து காலம் கடந்த ஞானம் பெறுவார்கள்.

□□

வன்முறைக்கு அடுத்ததாக இன்றைய அரசியலின் இன்னொரு அத்தியாவசிய பாவனைப் பொருள் வதந்தி.

வதந்தி வன்முறைக்கு காரணமாவதும் உண்டு.

வன்முறை வதந்தியை உற்பத்தி செய்து உலாவச் செய்வதும் உண்டு.

இம் முறை பல்வேறு வதந்திகள் தேர்தல் திருவிழாவில் பரவியிருந்தன.

அவற்றில் நாடு பூராவும் பிரபலமாகிய தேர்தல் இறுதிக்கட்ட வதந்தி திருமதி சந்திரிக்காவினால் உருவாக்கப்பட்டது.

தன்னைக் கொல்லச் சதித்திட்டம் இருப்பதாக தேர்தல் பிரசாரங்களில் இடையிடையே கூறிவந்தவர் திருமதி சந்திரிக்கா.

ஆனால், திடீரென்று தனது தேர்தல் பிரசார கூட்டங்களை இரத்துச் செய்தார்.

ஏன் என்று விசாரித்தவர்களுக்கு 'கொலை செய்யச் சதி'-என்று கூறப்பட்டது. உடனே அவரது ஆதரவாளர்கள் மத்தியில் பரபரப்பும் பதட்டமும் ஏற்படத் தொடங்கிவிட்டன.

அவ்வாறான ஒரு பரபரப்பையும், பதட்டத்தையும் எதிர்பார்த்தே இறுதி நேரத்தில் ஒரு பிரசாரக் குண்டாக அந்த வதந்தி வீசப்பட்டது என்பதை மறக்க முடியாது.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் லலித் கொல்லப்பட்டமையானது அவ்வாறான வதந்தி ஒரு உண்மைபோல் தெரிவதற்கு உதவிகரமாக இருந்தது.

எனினும், கடந்த மாகாணசபைத் தேர்தலில் லலித் கொல்லப்பட்டமையானது எதிரணிக்குத்தான் அனுதாப அலையை உருவாக்கியது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

**-நாரதர்-**

தற்போதுள்ள நிலையில், தேர்தல் நேரத்தில் பொதுஜன முன்னணியின் முக்கிய தலைவியான திருமதி சந்திரிக்காவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தால் அது எவ்வாறான விளைவை ஏற்படுத்தியிருக்கும்? அதன் மூலமாக யாருக்கு சாதகம் ஏற்பட்டிருக்கும் என்பதெல்லாம் உடனே ஊகிக்கக்கூடியவைதான்.

தேர்தல் பிரசாரத்தின் இறுதி நேரத்தில் எதிரணியின் தலைமையில் உள்ள எவருக்காவது தீங்கும் நிகழ்ந்தால் அதன் முழுப் பொறுப்பும் அரசாங்கத்தின் தலையில்தான் விழும்.

விளக்கம் சொல்லவோ, விசாரணை நடத்தவோ காலமிருக்காது. ஆளும் கட்சி திணற வேண்டியதுதான்.

எனவே- எதிரணித் தலைவர்களுக்கு தங்கள் உயிர்மேல் உள்ள அக்கறையைவிட தேர்தல் நேரத்தில் அவர்கள் உயிர்மீது அரசாங்கத்தில் உள்ள கட்சிக்குத்தான் அக்கறை அதிகமாகவிருக்க வேண்டும்.

ஆகவே-சந்திரிக்கா கொலைத் திட்டம் பற்றிய வதந்தி மிகப் பலவீனமான பிரச்சாரக் குண்டாக இருந்தபோதும், பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் பலரால் உண்மை என்றே நம்பப்படும் அளவுக்கு வேலை செய்தது.

ஐ.தே.கட்சியும் அப்படி ஒரு வதந்தியை பரப்பிவிட்டிருக்கலாம்.

ஜனாதிபதியை கொல்லச்சதி என்று கூறியிருக்கலாம்.

ஆனால், அதிகாரத்தில் இருந்தபடி அப்படிக் கூறுவது பலவீனமாகத்தான் கருதப்படும்.

அரசாங்கத் தலைவர்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால்கூட, உடனே எதிரணிகள் அதையும் தமக்கு சாதகமாக மாற்றலாம்.

தமது தலைவர்களைக்கூட பாதுகாக்க முடியாத பலவீனமான அரசாங்கம் பதவியில் இருக்கக்கூடாது என்று எதிரணிகள் பேசமுடியும்.

ஜனாதிபதியாக இருந்து பிரேமா கொல்லப்பட்டபோதுகூட, ஜனாதிபதியைக் கூட பாதுகாக்க முடியாத அரசாங்கம் இருந்தென்ன பயன்? என்று எதிர்க்கட்சிகள் கேட்டன. அக் கேள்வியில் ஓரளவு நியாயமும் உண்டு என்றே பொதுமக்களும் பேசிக் கொண்டார்கள்.

எனவே- கொலைச்சதி வதந்தியோ, அல்லது உயிராபத்துக்களோ ஆட்சியில் உள்ள கட்சியைவிட, எதிரணியில் உள்ள கட்சிகளுக்குத்தான் ஆதாயமாக அமைய முடியும்.

ஏற்கனவே-பிரதமர் ரணில், காமினி திசாநாயக்கா, ஆகியோரது உயிருக்கு புலிகளால் ஆபத்து என்று பாதுகாப்பு அமைச்சு கூறியிருந்தது. அந்தப் பட்டியலில் திருமதி சந்திரிக்காவின் பெயரும் இடம் பெற்றிருந்தது.

எனினும், அது பெரும் பரபரப்பாக பேசப்படவில்லை.

அது மட்டுமல்லாமல், புலிகளோடு உடனடி விரோதத்தை ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்வதில் பொதுஜன முன்னணி அக்கறை காட்டுவதாக தெரிகிறது.

ஆனால், பொதுஜன முன்னணி நினைப்பதுபோல், வெறுமனே திருப்திப் படுத்தும் பேச்சுக்களால் மட்டுமே புலிகளை அமைதிப்படுத்த முடியாது.

வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரத்தில்கூட பகிரங்கமாக தெளிவான ஒரு நிலைப்பாட்டை முன்வைக்க சந்திரிக்காவால் முடியவில்லை.

இந்த நிலையில் புலிகளது நம்பிக்கையைப் பெறக்கூடிய அரசியல் நடவடிக்கைகளை அவரால் மேற்கொள்ள முடியுமா என்பது சந்தேகம்தான்.

□□

இம்முறை தமிழ் கட்சிகள் இடைக்கிடையே வீர முழக்கங்களை எழுப்பியதை அவதானிக்க முடிந்தது.

தமிழ் மண், தமிழர் தாயகம், ஆண்ட பரம்பரை, சேர-சோழ-பாண்டியர் என்று 77 பொதுத் தேர்தலில் கூட்டணி மேடைகளில் ஒலித்த அதே முழக்கங்கள் 94லும் கேட்டுள்ளன.

இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் சமஷ்டி தீர்வு பற்றிய பேச்சுக்களை கேட்க முடிந்தது.

அடுத்த தேர்தல் தமிழீழத்தில் என்று 77ல் வாக்கு வாங்கிய கூட்டணி 94ல் வந்து சமஷ்டி பற்றிப் பேசுகிறது.

ஆயுதம் ஏந்திவிட்டு இப்போது ஜனநாயக அரசியலுக்கு வந்துள்ள அமைப்புக்கள் சில இம்முறை வீர முழக்கம் எழுப்பி வாக்குக் கேட்டுள்ளன.

நமது அரசியலில் பேச்சுக்கும்-செயலுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை.

அட, முன்னர் இப்படியெல்லாம் பேசினோமோ மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம் அரசியல்வாதிகள் யோசிப்பதும் இல்லை.

தமிழரசுக் கட்சி காலத்தில் சமஷ்டி கேட்டு பின்னர் கூட்டணியாகத் தமிழீழம் கேட்டு, எதற்கும் தருவதை வாங்குவோம் என்று மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்று, பின்னர் மாகாண சபையும் பெற்று இப்போது மீண்டும் சமஷ்டியில் வந்து நிற்கிறோம்.

இன்று சமஷ்டி கோருவோர் தமிழீழத்துக்காக அன்று பேசிய பேச்சுக்களும் தூண்டிவிட்ட உணர்ச்சிகளுமே இன்றைய காட்டுத்தீக்கான அன்றைய பொறிகள்.

நாம் யாரையும் படிப்பை கைவிட்டு வருமாறு கூறவில்லை என்று கூட்டணித் தலைவர்கள் பேசுவது சட்டவாதத்திற்கு சரியாகலாமே தவிர மனச் சாட்சிக்குமுன் சரிப்படாது.

"பத்துத் தடவை பாடை வராது. பதுங்கிப் பாயும் புலியே தமிழா, செத்து மடிதல் ஒரு தரமன்றோ, சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா"

புலிகள் இயக்கம் உருவாக முன்னரே கூட்டணியின் இளைஞர் பேரவைத் தூண்களில் ஒருவராக இருந்த காசி ஆனந்தன் எழுதிய கவிதைதான் அது.

கூட்டணி மேடைகளில் அவ்வாறான கவிதை முழக்கங்கள் கேட்டபோது தலைவர்கள் தடுக்கவில்லை. சிரித்தபடி இரசித்தார்கள்.

"செத்துமடிதல் ஒருதரம். சிரித்தபடி வா" என்று அழைத்துவிட்டு இப்போது, "நாம் எங்கே படிப்பை விட்டு வரச் சொன்னோம்?" என்று சட்ட ரீதியாகப் பேசுவது பொறுப்பில்லாத பேச்சாகும்.

"படித்துவிட்டு வாடா தமிழா" யார்தான் சொன்னார்கள்? ஒருவரும் என்று அப்படிச் சொல்லவில்லை.

கூட்டணித் தலைவர்கள் தம் பொறுப்பை தட்டிக்கழிக்க தப்பிக் கொள்ளும் பேச்சுக்களை பேசும் நேரத்தில்,

கூட்டணி மட்டுமே இளைஞர்களை நடுவீதிக்கு கொண்டுவந்து நிறுத்தியது போன்று சில இயக்கத் தலைவர்கள் பேசுவதும் ஏற்கப்படக்கூடிய ஒன்றல்ல.

ஆயுதப் பயிற்சி என்றுகூறி பள்ளிக் கூடத்தில் இருந்து நேரடியாக தம் முகாமுக்கு ஆள்பிடித்துச் சென்றதில் சகல இயக்கங்களுக்கும் பங்குண்டு.

பின்னர் பாதைமாறி, இன்று பாராளுமன்றப் பாதைக்கு திரும்பிவந்து நின்று கொண்டு கூட்டணியை மட்டும் குறைகூறுவது அர்த்தமில்லாதது.

பாராளுமன்றத்திற்கு போகவேண்டாம் என்று கூட்டணித் தலைவர்களை தடுத்த இயக்கங்கள் இப்போது தாம் அங்கு போவதை கூட்டணி தடுக்கிறதே என்று கோபப்படுகிறார்கள்.

ஆக மொத்தத்தில் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்தாயிற்று.

அப்படியிருந்தும்கூட விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று சொல்வதுமாதிரி ஒருவரை ஒருவர் முழக்கங்களால் திட்டித் தீர்க்கிறார்கள்.

## அதிரடி அய்யாத்துரை



ரெண்டு எழுத்தார் தேர்தலை புறக்கணிக்கும் விசயத்தையோ, அவை அதைப்பற்றி சொன்ன கருத்துக்களையோ 'நடுநிலை'க்காரர்கூட கண்டும் காணாமல் இருந்து போட்டினம். தங்களுக்குப் பிடிச்ச விசயத்தை ரெண்டு எழுத்தார் சொன்னா மட்டும் கால், கை வைச்சுப் போட்டிடுவினம் பாருங்கோ. உது நல்ல நடுநிலை!

குமாருக்கு முதல் வழக்கைப் பிடிச்சுக் கொடுத்ததே தனது நகப்பனார்தான் எண்டு கூட்டான கட்சியின் நீலமானவர் முரசுக்கு எழுதின கையொப்பம் இல்லாத அறிக்கையிலை தெரிவிச்சிருக்கிறாராம்.

தேர்தல் நேரத்திலை முரசாலை முகமூடி கிழிஞ்சவை சிலர் முரசுக்கு முத்திரை குத்திப் பார்க்கினமாம். முத்திரை குத்துறது கிடக்கட்டும். முரசு அவையைப்பற்றி சொன்ன விசயங்களுக்கு முதலில் பதில் சொல்லட்டும் எண்டு விசயம் அறிஞ்சவை சொல்லுகினமாம்.

திருவானமலை சபைத்தலைவர் பதவியை தூக்கி எறியப் போறன் எண்டு சொல்லிப்பார்த்தார். "ஐயோ பதவியை விடாதீங்கோ" எண்டு நாலுபேர் கேட்பினம். அதை வைச்சு முடிவை மாத்தினதா சொல்லலாம் எண்டு நினைச்சாராக்கும். ஆளைப்பாருங்கோ! அவற்றை நெருக்கமான வட்டாரங்கள்கூட வாய் திறக்கேல்லை. இராஜினாமாச் செய்தால் நல்லதுதான் எண்டு அந்த வட்டாரமும் நினைக்குதாக்கும். பாவம் தலைவர். உது தெரிஞ்சா சவால் விட்டிருக்கமாட்டார்.

ஊர்வாதமோ, சாதிபேதமோ எதைச் சொல்ல முடியுமோ அதையெல்லாம் சொல்லி வாக்குக் கேட்டு எங்கடை முன்னாள் போராளிகளும் தங்கடை உறுதியைக் காட்டிப்போட்டினமாம்.

இசைக் கச்சேரியோடை சேர்த்து கூட்டம் நடத்துற முறையை யார் கண்டுபிடிச்சது எண்டு தெரியேல்லை. தெரிஞ்சா எங்கடை கட்சியள் சார்பாக ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தலாம். வாக்குக் கேட்டு ஒரேயடியா நச்சரிக்காமல் இடைக்கிடையே இசைக் கச்சேரி வைக்கிறது சனத்தை குளிரவைக்கும்தானே?

கொழும்பிலை குமார் குழுவிலை போட்டியிட்ட முருகனின் மறுபெயர் கொண்ட ஒரு வித்துவான் தன்ரை இலக்கத்தை நினைவூட்ட, 12 வயதிலை கல்யாணம் நடத்திறதும் நல்ல பண்பாடு எண்ட மாதிரி பத்திரிகை விளம்பரம் செய்தவர். நல்ல காலம் இவர் மாதிரி ஆட்கள் பா.மன்றம் போனா தங்களை நியாயப்படுத்த இன்னும் எதையெல்லாம் சொல்லுவினமோ! தெரிஞ்சதானே சனம் புள்ளடி போடாமல் விடுறது.

கொழும்பிலை கலவர வதந்தியாலை எங்கடை சனம் பயந்து கொண்டிருக்க, நீல அணித் தலைவிலை கொலை செய்ய தமிழ் கட்சி திட்டம் எண்ட செய்தியும் பரவி, அப்படி நடந்தால் தங்கடை தலையிலைதான் இடி எண்டு எங்கடை சனத்தை மேலும் ஒரு கலக்குக் கலக்கிப் போட்டுது.

தனித்துவ முஸ்லிம் கட்சி பிரமுகர்கள் சிலரே சாணக்கருக்கு தேசியப் பட்டியலில் தலைவர் இடம் கொடுத்ததை விரும்பவில்லையாம். தேவையில்லாத சோலியை விலைகொடுத்து வாங்கினதாலை எப்படியோ நஷ்டம்தான் எண்டு கிழக்கு முக்கியஸ்தர் சிலர் தங்களுக்கை பேசிக்கொள்ளுகினமாம்.

மீன்பாடும் பகுதியிலை முன்னாள் எம்.பியான கருணையார் தனது தேர்தல் விளம்பரங்கள் எதிலையும் இயக்கத்தின் பெயரையோ அல்லது கூட்டுச் சேர்ந்து உருவான புதிய பெயரையோ குறிப்பிடவே இல்லையாம். காரணம் உள்ளே இருக்கிற புகைச்சல். தனது சொந்த செல்வாக்கைக் காட்டத்தான் அப்பிடி ஒரு விளம்பரமாம்.

தாலாட்டு பாடல் ஒரு தனிரகம். இப்ப நினைச்சாலும் குழந்தையா மாறி தாலாட்டு நினைவிலை தூங்கலாம்.

**"பாட்டி அடிச்சாளோ பால் வார்க்கும் கையாலே**
**அண்ணன் அடிச்சானோ அரை ஞாண் கயிற்றாலே**
**ஆண் பனையின் நுங்கே அணில் கோதா மாம்பழமே**
**கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்"**

தாலாட்டிலும் தனிநயம் கண்ட மொழி தமிழ் எண்டு சொன்னா அதிலை என்ன பிழை?

# துப்பாக்கிகள் மத்தியில் ஜனநாயகத்தை நிறுவினோம்

## பாலஸ்தீன தலைவர் யாசிர் அரபாத் பேட்டி



யாசிர் அரபாத்

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசிர் அரபாத் கடந்த 10 வருடங்களாக ரியூனிஸ் நகரில் இருந்து கொண்டே தன் மக்களை வழி நடத்தினார். இப்பொழுது அவர் மேற்குக்கரையிலுள்ள காஸா பிராந்தியத்தில் ஜெரிக்கோ நகருக்கு தன் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். இடையில் பாரிஸ் நகர்சென்று ரியூனிஸ் நகரம் வந்தார். ஒரு தசாப்த காலம் குடியிருந்த பிரதேச மக்களிடம் பிரியாவிடை பெறும் நோக்குடன் வந்திருந்த தலைவர் அரபாத்தை 'ரைம்' பத்திரிகையின் நிருபர் பேட்டி கண்டார்.

**நிருபர்:** காஸாவிலும் ஜெரிக்கோவிலுமுள்ள தங்கள் மக்களின் தலையாய பிரச்சனை என்ன?

**அரபாத்:** பொருளாதாரப் பிரச்சனை. காஸா பிராந்தியத்தில் வாழும் மக்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலையில் தற்போதுள்ளனர். அடிப்படை அமைப்புகள் யாவும் முற்றாகச் சிதைந்துவிட்டமையினால் எமது மக்கள் பெரும் துன்பப்படுகிறார்கள். அடி அத்திவாரத்திலிருந்து கட்டியெழுப்பவேண்டியிருக்கிறது. பண உதவி தருவதாக பல பகுதிகளாலும் வாக்களிக்கப்பட்டது. ஆனால் சொற்பமாகவே கைக்கு வந்து சேர்ந்துள்ளது.

**நிரு:** அடுத்த 5 ஆண்டுகளுக்கு 2 பில்லியன் டொலர் உதவி கிடைக்கும் என்று தங்களுக்கு வாக்களிக்கப்பட்டது. உதவி தருவதாகக் கூறியவர்கள் உங்கள் அவசரத் தேவைகளையும்- செலவுகளையும் கருத்திக் கொள்ள வேண்டுமே?

**அர:** திட்டங்களை மேற்பார்வையிடும் பொறுப்பு முழுவதும் உதவி புரிவோருக்கே உரித்துடையன. உதவும் நாடுகளின் நிறுவனங்களே திட்டங்களுக்கும் பொறுப்புடையவை. நானல்ல- சிறுசிறு ஒப்பந்தப் பணிகளை மட்டும் நாம் ஏற்போம்.

**நிரு:** உதவும் நாடுகளின் தலைவர்களுடன் கலந்து பேசியுள்ளீர்களா?

**அர:** ஆமாம். அவர்கள் வியந்தனர். எல்லாமே சீராக நடைபெறுகின்றன என்று அவர்கள் கருதியிருந்தனர். முதல் ஆறு மாதங்களுக்கான அரசாங்கச் செலவினங்களையே உலக வங்கிதான் கண்காணிக்கிறது. இது சுதந்திரமாகவே இயங்க வேண்டியிருக்கிறது.

எமது அமைதி நிலைப்பதற்கு உலகத்தின் பாதுகாப்பு எங்களுக்குத் தேவைப்படு கிறது. அல்லாவிட்டால் எல்லாமே சீர்குலைந்து போய்விடும். முழுப் பிராந்தியத்துக்குமே அது ஒரு விபத்தாக முடியும். காஸா பிராந்திய மக்கள் உணவின்மையால் சோமாலியாவின் நிலையினை அடையக் கூடும். உரிய உதவிகிடைத்தால் பொருளாதாரப் புலிகளாகவே மாறலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனிடம் கூறினேன். சகல சாதனங்களும் எம்மிடமுண்டு. ஆக உதவிதான் அவசியம்.

**நிரு:** பாலஸ்தீன நிர்வாகத்தினை மக்கள் கையேற்க இவ்வருடம் தேர்தல் நடத்தப்படுமா?

**அர:** இதே ஆண்டுதான் நடைபெறும். ஏனெனில் மக்களுடைய ஆதரவைப் பெறாமல் திட்டங்களை என்னால் நடத்த முடியாது.

**நிரு:** நீங்கள் நிச்சயமாக ஜனநாயகத்தையே பேணப் போகிறீர்களா?

**அர:** நிச்சயமாக. புரட்சியின்போது உலகிலேயே மிகவும் கடினமான ஜனநாயகப் பாதையினை-அதாவது துப்பாக்கிகளின் சூழலிலேயே நாம் ஜனநாயகத்தினை- காடுகளில்- எனது தோழர்களுடன் சேர்ந்து நிலை நிறுத்தியுள்ளேன் என்பதை மறக்க வேண்டாம்.

**நிரு:** ஆனால் தங்களுடன் தொடர்புவைத்துள்ள பலர் தாங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுப்பதில்லை என்று கூறுகிறார்களே!

**அர:** அவர்கள் ஒவ்வொரு நாளும் விமர்சிக்கின்றனர். அதுவும் ஒரு ஜனநாயகப் பண்புதானே! இது மேலும் எனக்கு உறுதி அளிக்கிறது. 'ஒரு தலைவனை விமர்சித்துத் திருத்துபவனை ஆண்டவன் ஆசிர்வதிக்கின்றான்' என்று ஒரு அரபுப் பழமொழி உண்டு.

> "உங்களிடம் துப்பாக்கி இல்லையே?"
> "நான் என் மக்களுடன் இருக்கிறேன்."

நான் ஆட்டுமந்தைகளை வழி நடத்தவில்லையே! மனிதர்களையன்றோ வழி நடத்துகிறேன்.

**நிரு:** ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவராக உள்ள தங்கள் வாழ்வு அரசாங்கத்தின் தலைவர் என்ற நிலைக்கு மாற்றமடையுமா?

**அர:** இதே கேள்வியினை தெ.ஆ.தலைவர் மண்டேலாவிடம் அல்லது ஸிம்பாப்வே ஜனாதிபதி றொபட் முகாபியிடம் கேட்டிருக்கலாமே? அவர்களும் புரட்சியாளர்கள் தானே? அரபாத்தும் ஒரு புரட்சித் தலைவன். எனது மக்கள் சிறந்த புத்திசாலிகள். இது ஒரு மிகச் சிறந்த சாதகமான அம்சம்.

**நிரு:** இஸ்ரேலியப் பிரதமர் ராபினுடன் தங்களுடைய உறவு எவ்வாறுள்ளது?

**அர:** நல்ல நிலையிலுள்ளது. தொலைபேசி யினூடாக.... கடிதங்கள் மூலம், நேருக்கு நேர் சந்திப்பு ஆகியவற்றின் மூலம் உறவு தொடர்கிறது.

**நிரு:** தீவிரவாதத்துக்கு எதிரான பங்காளிகள் நீங்கள் இருவரும் என்ற எண்ணம் உண்டா?

**அர:** அதைவிட மேலானவர்கள்; சகல துறைகளிலும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியில் இணைந்து ஈடுபடு கிறவர்கள் நாங்கள். இருதரப்பிலும் தீவிரவாதிகள் உள்ளனர். இருவரிலும் ஒருவர் வெற்றி பெறுவதோ மற்றவர் தோல்வியினைத் தழுவுதலோ நல்ல தல்ல. இருவரும் இணைந்தே வெற்றி சட்டவேண்டும்; அல்லது தோல்வியைத் தழுவ வேண்டும்.

**நிரு:** காஸாவில் பா.வி. அமைப்பும் மற்றுமொரு தீவிரவாத இயக்கமான 'ஹமாசும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதாகச் சிலர் கூறுகின்றனரே?

**அர:** நான் அதனை எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் எனது மக்களை நான் நன்கு அறிவேன்.

**நிரு:** இதனால்தானா நீங்கள் துப்பாக்கி வைத்திருப்பதைக் கைவிட்டு விட்டீர்கள்?

**அர:** எனக்கு துப்பாக்கி அவசியமேயில்லை. நான் எனது மக்களுடன் வாழ்கிறேன்.

# உலக வரலாறு இதுவரை காணாத கொடுமை!

# எலிகள் போல கொல்லப்படும் மனிதர்கள்!



குண்டுத் தாக்குதலில் தப்பிய சிறுவர்கள். கோரமாய் சிதைந்த முகத்தோடு வலதுபுறச் சிறுவன்.

ருவண்டாவில் நியுறுபுயி என்றொரு சிறு நகரம். அங்கு ஒரு கத்தோலிக்க தேவாலயம். ஆலயத்தின் மூன்றிலில் இயேசு கிறிஸ்துவின் ஆளுயரச் சிலை. இரு கரங்களையும் அகலமாக நீட்டி, அண்டி வருவோரை ஆதரவுடன் அணைக்கத் துடிக்கும் கருணை பொழியும் முக பாவம். ஆனால், அந்தத் திருச் சொருபத்தின் பாதங்களுக்குக் கீழும் எதிரில் தேவாலயத்தின் முன்புறம், பின்புறம், இரு பக்கங்கள் மட்டுமல்லாமல் தேவாலயத்தினுள்ளும்கூட- எங்கும் கேட்பார் பார்ப்பாரற்ற நிலையில்-நூற்றுக்கணக்கான சடலங்கள்.

இந்த தேவாலயத்தின் மருங்கில் காணப்படும் சடலங்களனைத்துமே சிறு பிள்ளைகளினுடையவை. ஆலயத்ினருகே உள்ள பள்ளியில் படித்துக்கொண்டிருந்த சிறுவர்களனைவரையும் மனித மிருகங்கள் வாளால் வெட்டியும் கத்தியால் குத்திக் குதறியும் துப்பாக்கியால் சுட்டும் வேட்டையாடியுள்ளன. சம்பவம் நடத்த கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து இத்தகவல் வெளியுலகுக்குத் தெரியவந்த இம்மாத ஆரம்பம்வரை இந்தச் சடலங்கள் உக்கி உருக்குலைந்துபோய் அப்படியே கிடக்கின்றன. புழுக்கள்கூட இறந்துவிட்டன. இங்கு எத்தகைய மணம் வீசுகின்றது என்பதைவிட, இவற்றைப் பங்குபோடும் இலையான்கள், ஈக்கள் ஆகியவற்றின் ஓசைகள் மட்டுமே இப்பிராந்தியத்தில் கேட்டவண்ணமுள்ளன என்பதனையே கூறலாம்.

கோரமான இக்காட்சியினை வெளியுலகு ஊனக்கண்களால் காண முடியாதபோதும் மனக்கண்களாலாவது காணட்டும் என்று, ஆபிரிக்க தொடர்பாடல் நிறுவனம் ஒன்றின் நிருபர் போல் வாட்சன் நேரில் கண்டு கூறுகிறார்.

இந்தச் சிறு நகரில் உயிருடன் மனிதர்களோ மிருகங்களோ கிடையாது. ஆனால் அண்மையிலுள்ள குன்றுகளில் கெரில்லா போராளிகள் பதுங்கியுள்ளனர். இவர்களாவது இந்தச் சடலங்களை எடுத்து அடக்கம் செய்ய முன்வரவில்லை.

இங்குமட்டுமல்ல ருவாண்டாவின் சகல பகுதிகளிலுமே மனிதனை மனிதன் வேட்டையாடும் கொடுமை- உலகின் வேறு எந்த நாட்டிலுமே இல்லாத நிலையில் நடைபெற்று வருகிறது. வன்முறையாளர்களால் கொல்லப்படுவதைப் பார்க்கிலும் அந்நாட்டு அரச படைகளே பெரும்பாலான கொலைகளுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. நாட்டைவிட்டு உயிரைக் காத்துக்கொள்ள இலட்சக்கணக்கில் வெளியேறும் அகதிகளுக்கு உணவு கிடைக்காமலும் ஒதுங்குமிடமில்லாமலும் இறப்பு அதிகரித்துவிட்டது. அத்துடன் கொலரா போன்ற கொள்ளை நோயும் இணைந்து பல்லாயிரக்கணக்கில் மக்கள் தினசரி செத்து வீழும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் ஆதிக்கத்தைக் கைப்பற்றுவது யார் என்று அந்த நாட்டிலுள்ள ஹூட்டு மற்றும் டுட்சி இன மக்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியே ஆயுதப் போராக மாறி இலட்சக் கணக்கானோரைப் பலிவாங்கி வருகிறது. ஓரினம் மற்றோரின மக்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற மனப்பான்மையில் இரு இனங்களும் முடிவில்லா மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

டுட்சி இனப் போராளிகள் (ருவாண்டா பேட்றியாட்டிக் ஃபுரண்ட்) 'ருவண்ட நாட்டுப் பற்றுக் கொண்டோர் முன்னணி' என்ற அமைப்பினை ஏற்படுத்தினர். இதில் ஹூட்டு இனத்தவர்கள் சிலரும் இணைந்துள்ளனர். இந்த அமைப்புடன் இணைந்து அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள ஹூட்டு இனத் தீவிரவாதிகள் அனுமதிக்க மறுப்பதனாலேயே அந்நாட்டில் பிரச்சனை தொடங்கியது.

ஃபிரெஞ்சின் ஆதிக்கத்திலிருந்த ருவண்டா 1962ல் சுதந்திரம் அடைந்தது. அதிகாரத்தை ஹூட்டு பெரும்பான்மையினரும், டுட்சி சிறுபான்மையினரும் இணைந்தே ஏற்றுக்கொள்ள முற்பட்டனர். ஆனால் இரு இனங்களிடையேயும் பரஸ்பர உறவு நீடிக்கவில்லை. மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்திலிருந்து சிறுபான்மை டுட்சி இனத்தவர்கள் வெளியேறி உகண்டா போன்ற அயல் நாடுகளைச் சென்றடைந்தனர். இங்கெல்லாம் இவர்கள் 'நாடற்றவர்கள்' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவர்களில் ஒரு சாராரே ருவண்டா நாட்டுப் பற்றுள்ளோர் முன்னணியை அமைத்தனர்.

உகண்டா இவர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்தது. அந்நாட்டின் சர்வாதிகாரி மில்ரன் ஒபொட்டேயை முறியடிக்க இவர்களின் ஆற்றலை, ஜனாதிபதியாகப் பின்பு பொறுப்பேற்ற யோவெரி மொசேவேனி பயன்படுத்தினான். பிரதி உபகாரமாக போதிய ஆயுதங்களைக் கொடுத்து ருவண்டாவுக்குள் அனுப்பி வைத்தான். இதேவேளை அரச படைகளுக்கு ஃபிரான்சும் தென் ஆபிரிக்காவும் பயிற்சியையும் படைக்கலங்களையும் அளித்தன.

இராணுவத்துடன் மற்றுமொரு போராளி இயக்கமான (இன்ரற ஹம்வே) 'ஒன்றிணைந்த மக்களின் படை'யும் சேர்ந்து கொண்டது. வரம்பு மீறிய பயங்கரக் கொலைகளை இன்று ருவண்டாவில் நிகழ்த்துவது இராணுவமும் இந்தப்படையுமே என்று கூறப்படுகிறது. நியறுபுயி நகர தேவாலயத்தில் சிறுவர்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்த கைங்கரியத்தைச் செய்ததும் இந்தப் படையும் இராணுவமுமே என்று தெரிய வருகிறது.

"எங்களை எலிகளைத் துரத்தி அடித்துக் கொல்வதுபோல் கொன்று குவிக்கிறார்கள்" என்று 44 வயதான நியோன்ஸிமா என்ற முன்னாள் விவசாயி கூறுகிறார். இவர் எவருடைய கண்களிலும் படாமல் அடர்ந்த புல் வெளியில் பதுங்கியிருந்து வெளி●

## ஸ்போர்ட்ஸ்

### மியாண்டாட் ஏன் இல்லை?



மிகுந்த சர்ச்சைகளுக்கிடையே கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று மீண்டும் அதை வாபஸ் பெற்ற பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்திருந்த பாகிஸ்தானின் தலைசிறந்த மட்டை வீரரான ஜாவெட் மியாண்டாட் இலங்கைக்கான சுற்றுப் பயண பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்திருந்தார்.

ஆனால் பாகிஸ்தான் அணியின் இலங்கை சுற்றுப் பயணத்திற்குச் சரியாக ஒருவார இடைவெளி இருக்கும்போது ஜாவெட் மியாண்டாட்டை பாகிஸ்தான் அணியிலிருந்து பாகிஸ்தானிய கிரிக்கெட் தேர்வுக் கமிட்டி நீக்கிவிட்டது. இதற்குக் காரணம் மியாண்டாடுக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் பத்தாயிரம் ரன்கள் சாதனையை நிகழ்த்தும் ஆர்வத்தில் ஜாவெட் மியாண்டாட் இலங்கை சுற்றுப் பயணத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். அதற்காக பாகிஸ்தான் அணியின் பயிற்சி முகாமிலும் இடம்பெற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வந்தார்.

ஆனால் இலங்கைச் சுற்றுப் பயணத்திற்கு பாகிஸ்தான் அணி புறப்படுவதற்கு சரியாக 15 நாட்களே இருந்தபோது, பயிற்சி முகாமில் கால்பந்து விளையாடியவேளை தனது முழங்காலில் காயத்தை ஏற்படுத்திக் கொண்டார். மியாண்டாட்டின் காயத்தைப் பரிசோதித்த டாக்டர் கண்டிப்பாக அவருக்கு குறைந்தது ஆறு வார காலம் ஓய்வு வேண்டும் என்று கூறிவிட்டார். இதுபற்றி விளக்கம் கேட்டிருந்த பாகிஸ்தானிய தேர்வுக் கமிட்டிக்கும் அந்த டாக்டர் இதே பதிலை அளித்துவிட்டார். இதனால் இலங்கை சுற்றுப் பயணத்திற்கான பாகிஸ்தான் அணியிலிருந்து ஜாவெட் மியாண்டாட்டை தேர்வுக் கமிட்டி நீக்கிவிட்டது.

ஏற்கனவே பாகிஸ்தான் அணியின் நியூசிலாந்து மற்றும் சார்ஜா சுற்றுப் பயணத்தின்போதும் பாகிஸ்தான் அணியிலிருந்து மியாண்டாட் நீக்கப்பட்டிருந்தார் என்பதும் நினைவுகூரத்தக்கது. ●

### ஓட்டத்தில் இவரே ராஜா

உலகிலேயே 'மிக வேகமான ஓட்டப் பந்தய வீரர்' என்ற பெருமைக்குரியவர் அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல் லூயிஸ். குதிரை மாதிரி அவர் ஓடுவதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றும்.

32 வயதான இவர் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் 9.86 நொடிகளில் ஓடி உலக சாதனை ஏற்படுத்தி வைத்துள்ளார். அவரது சாதனை அசைக்க முடியாத சாதனையாக உள்ளது.

100 மீற்றர் ஓட்டப் பந்தயத்திலும் நீளம் தாண்டுதலிலும் இவர் கடந்த சில ஆண்டுகளாக முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து வருகிறார். இவருக்கு ஓட்டத்தில் எதிரிகளே இல்லை என்று சொல்லலாம்.

இடையில் கனடா நாட்டைச் சேர்ந்த பென் ஜோன்சன் இவருக்குப் பெரும் சவாலாகக் கருதப்பட்டார். ஆனால் அவர் போதை மருந்து விவகாரத்தில் சிக்கி, இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டார்.

இப்போது லின்போட் கிறிஸ்டி, கார்ல் லூயிஸுக்குச் சவால் விடக்கூடியவர் என்று கூறப்படுகிறார். ஆனால் "கிறிஸ்டி எனக்கு ஒரு பொருட்டே அல்ல," என்று கார்ல் லூயிஸ் கூறினார்.

எட்டு தடவை ஒலிம்பிக் சாம்பியனான இவர் கடந்த ஆண்டு கார் விபத்தில் சிக்கிக் காயம் அடைந்தார்.

ஆனால் கார்ல் லூயிஸ் ஆச்சரியப்படும் வகையில், மீண்டும் களத்திற்கு வந்துள்ளார். அவரது இப்போதைய ஆசையெல்லாம் 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் புதிய சாதனை படைக்க வேண்டும் என்பதே.

1996ம் ஆண்டு அட்லாண்டா நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டி தான் அவர் பங்குபெறும் முக்கியமான போட்டியாக இருக்கும்.

# புதிய பாராளுமன்றம்

# 'பட்டினி யுகம்' – 'கொலையுகம்' அற்ற ஒரு புதிய யுகத்தை உருவாக்குமா?

**அலசுவது – இராஜதந்திரி**

தேர்தல் பிரசாரங்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளை ஐக்கிய தேசியக் கட்சியினரும், எதிரணியினரான பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கி பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பிரசுரங்களாவும், கவிதை மற்றும் பாடல்களாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் கடந்த கால ஆட்சியை விமர்சித்திருந்தனர்.

1970ம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் மக்களுக்கு உண்ண உணவோ, உடுக்க உடையோ இருக்கவில்லை. மரவள்ளி கிழங்குகளையே மக்கள் உண்டு வந்தனர். எனவே மீண்டும் இந்த 'மரவள்ளி யுகம்' வேண்டாம் என்று ஐ.தே.கவினர் கூச்சலிட்டனர்.

[illegible]

[illegible] படையினராலும் ஐ.தே.கவின் ஆட்சியின்போது கொல்லப்பட்டிருந்தனர். எனவே ஐ.தே.கவின் 'கொலையுகம்' மீண்டும் தோன்றக்கூடாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் முழக்கமிட்டிருந்தனர்.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த கால அரசியல் அனுபவங்கள் வெறுப்பையும், வேதனையையும் தருவனவாகவே இருந்து வந்துள்ளதை நன்கு உணரக்கூடியதாக இருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி [illegible] ஆட்சி செய்த ஏழு வருட காலப்பகுதியும், பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினர் [illegible] ஆண்டிலிருந்து மேற்கொண்டுவரும் ஆட்சியும் சாதாரண மக்களைப் பொறுத்தவரை பல்வேறு நெருக்கடியான, துயரமான சூழ்நிலைகளை உருவாக்கியவையாகவே இருக்கின்றன.

[illegible] ஆண்டிலிருந்து 77ம் ஆண்டுவரை நிலவிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் பொருளாதாரச் சிக்கல்கள் விஸ்வரூபமெடுத்திருந்தன. அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுடன் கூட்டுச் சேர்ந்திருந்த முன்னணி இடதுசாரித் தலைவர்கள் பலரும் சுய உற்பத்தி [illegible] என்ற அடிப்படையில் பிற்போக்கான பொருளாதார நடைமுறைகளைக் கையாண்டனர்.

இதனால் உணவுத் தட்டுப்பாடு, வேலையில்லாப் பிரச்னை என்பன உருப்பெற்றதுடன் நாடு பெரும் திண்டாட்டமான நிலையை எதிர்நோக்கியிருந்தது.

விரக்தி நிலைக்குள்ளான இளைஞர்கள் ஆயுத பாணிகளாக புரட்சி செய்ய ஆரம்பித்ததும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலேயாகும்.


1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பெரும் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியது. 1978ம் ஆண்டு புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஐ.தே.க. அறிமுகப்படுத்தியிருந்தது. இந்த ஆட்சி முறையின் மூலம் பல்வேறு முன்னோடித் திட்டங்களையும் ஐ.தே.க அரசு முன் வைத்தது.

ஆனால் அத்திட்டங்கள் தகுந்த பலனைத் தர முடியாதவாறு இலங்கையின் இனப் பிரச்னை கோரத் தாண்டவமாட ஆரம்பித்திருந்தது.

ஐ.தே.க அரசு இனப் பிரச்னையின் ஆழ அகலத்தை நன்கு அறிந்து வைத்திருந்தபோதிலும் இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவே அப்பிரச்னையைக் கையாளுவதில் பெரிதும் ஆர்வங் காட்டியிருந்தது. இதனால் இன்று நாட்டின் அபிவிருத்தி முடக்கமடைந்திருப்பதுடன், அடிப்படை மனித உரிமைகளும் மீறப்பட்டு, இன சௌஜன்யமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இலட்சக் கணக்கான மக்கள் அகதிகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்குப் பிரதேசம் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் அந்நியப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கின்றது.

கனரக யுத்த தளபாடங்களுடன் படையினரின் பலமும் வடக்குக் -கிழக்குப் பகுதிகளில் பாரியளவில் விளங்குகின்றது.



இது தவிர ஐ.தே.கவின் கடந்தகால ஆட்சியில் தென்னிலங்கையிலும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் படு மோசமான கட்டத்தை எட்டியிருந்தன. ஜே.வி.பி. தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகள் என்ற ரீதியில் எண்ணிலடங்காதவர்கள் தென்னிலங்கையில் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகியிருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும், ஐ.தே.கவினரும் போலி வாக்குறுதிகளை வழங்கி, சுயநலம் கருதிய அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு கடந்த காலங்களில் தமது குறுகிய அரசியல் அபிலாஷைகளுக்கே முக்கியமளித்தனரே தவிர ஒரு பரந்துபட்ட அமைதிக்காகவும், அபிவிருத்திக்காகவும் காத்திரமான பங்களிப்புக்களைச் செய்யத் தவறியிருந்தனர்.

இதன் காரணமாகவே இன்று நாட்டின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு, என்பன அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதுடன், வடக்கு-கிழக்கில் ஒரு முடிவற்ற யுத்தமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னை ஒரு மோசமான கட்டத்தை எட்டியிருப்பதை இலங்கையில் அனைத்துத் தரப்பினருமே நன்கறிந்துள்ளனர்.

வவுனியாவுக்கு வடக்கே புலிகளின் ஆதிக்கம் வலுவடைந்துள்ளது. ஆயுதப்படையினர் வட பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு முயற்சிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரும் மோதல்கள் ஏற்பட்டு இழப்புக்களும் பாரதூரமானவையாகவே இருக்கின்றன.

இரு வாரத்துக்கு முன்னரும் பலாலி இராணுவத் தளப் பிரதேசத்துக்குள் புலிகள் ஊடுருவி விமானப்படையினரின் ஹெலிகொப்டர் ஒன்றை நாசஞ் செய்திருந்தனர்.

இத் தாக்குதல் நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து நல்ல பலத்துடன் இருப்பதனையே உணர்த்தியிருந்தது.



வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் மட்டுமல்ல, அப்பிரதேசங்களுக்கு வெளியிலும் புலிகள் குறித்த அச்சுறுத்தல் பெரிதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் யுத்த நிலைமையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டின் ஓர் உறுதியான அமைதி நிலையைத் தோற்றுவிப்பதற்கு ஆரோக்கியமான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் ஏனைய தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, தமிழ் அரசியல் கட்சிகள்கூட வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து எதுவித அர்த்தமுள்ள தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

அனைத்து அரசியல் கட்சிகளுமே தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்னை அரசியல் நடவடிக்கைகள் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும் என தெரிவித்திருந்தன.

ஆனால் அரசியல் நடவடிக்கைகளைவிட வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளே பாரியளவில் வியாபித்திருக்கின்றன.

இந்நிலையில் எதிர்காலத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு குறித்து முன்னெடுக்கப்பட வேண்டிய அரசியல் முயற்சிகள், இராணுவ நடவடிக்கைகளை முடக்கமடையச் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இலங்கையில் கடந்த ஒரு தசாப்த காலமாக இடம்பெற்றுவரும் வடக்கு-கிழக்கு யுத்தம் பல்வேறு பரிமாணங்களையும் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

அத்துடன் நாட்டின் அபிவிருத்திக்கும், அமைதிக்கும் பெருஞ் சவாலாக இருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தம் இலங்கையின் நாளாந்த நடவடிக்கைகளில் ஓர் அம்சமாகிவிட்டதுடன் தென்னிலங்கை அரசியலாளர்கள், அந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அக்கறையோ அல்லது விவேகமோ அற்றவர்களாக இருந்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு சர்வதேச நாடுகள் பலவும் முன்வந்திருந்தன. ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த உதவிகளை நிராகரித்தனர். வெளிநாட்டு உதவி எதுவுமின்றி வடக்கு-கிழக்குப் பிரச்னையை தீர்த்து வைக்க முடியுமென்று அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் 1990ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான பேச்சுக்கள் முறிவடைந்தது முதற்கொண்டு இன்றுவரை எதுவித அணுகுமுறைகளும் முன்னெடுக்கப்படாமலேயே இருக்கின்றது.

இதுதவிர பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமான செயற்பாடுகளும் எதுவித வெற்றியையும் கொடுத்திருக்கவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ்.தொண்டமான், முன்னாள் சபாநாயகர் எம்.எச்.மொஹமட் ஆகியோர் வடக்கே சென்று சமரச முயற்சிகளை மேற்கொள்ள முன்வந்திருந்தனர்.

ஆனால் அவர்களது முயற்சிகளுக்கும் உரிய ஒத்தாசைகள் அரசினால் வழங்கப்படவில்லை.

இது தவிர தென்னிலங்கையிலிருந்து வடக்கிற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்த்து வந்த மதத் தலைவர்களும் அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர். ஆனால் அவர்கள் கூறியவையும் அலட்சியம் செய்யப்பட்டிருந்தன.

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் வவுனியாவுக்கப்பால் மனிதாபிமானப் பிரச்னைகள் புடைத்தெழுந்திருக்கின்றன.

1990ம் ஆண்டு அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இரண்டாவது தடவையாக மோதல்கள் வெடித்ததையடுத்து வடக்கே மின்சாரம், போக்குவரத்து என்பன முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. இவை தவிர வடக்கே அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையினால் உணவுக் கஷ்டம் ஏற்பட்டு மருத்துவத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இத்தடவை தேர்தல் பிரசாரங்களின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியினர் ஆட்சிக்கு வந்தால் உணவுத் தட்டுப்பாடு, மற்றும் பொருளாதாரக் கஷ்டங்கள் ஏற்பட்டு மக்கள் பட்டினி கிடக்கும் நிலை எற்படும் என்று ஐ.தே.கவினர் மேடைக்கு மேடை கூறி வந்தனர்.

ஆனால் இதே ஐ.தே.கவினர் கடந்த பல வருட காலமாக வடக்கே உணவு, மருத்துவ வசதிகள் மட்டுமல்ல மின்சாரம், போக்குவரத்து வசதிகள் என்பனகூட இல்லாமல் இலட்சக்கணக்கான மக்கள் அவதிப்படுவது குறித்து பாராமுகமாகவே இருந்து வந்துள்ளனர். கூடவே வடபகுதி மக்களுக்கு மேலும் நெருக்குதல்களைக் கொடுக்கும் இராணுவ நடவடிக்கைகளையும் விரிவுபடுத்தியுள்ளனர்.

எனவே தென்னிலங்கையில் பொருளாதாரக் கஷ்டம், பட்டினி என்பன பற்றிக் குறிப்பிட்ட ஐ.தே.கவினர் இந்நாட்டின் ஒரு பகுதியினரான வடபகுதி மக்கள் குறித்துக் கொண்டிருக்கும் நிலைப்பாடு, மனிதாபிமானத்தை கடுகளவில்தானும் கருத்திற் கொள்ளாததாகவே இருக்கின்றது.

ஐ.தே.கவினரும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் மேற்கொண்ட தேர்தல் பிரசாரங்களில் 'பட்டினி யுகம்,' 'கொலையுகம்' என்ற வார்த்தைப் பிரயோகங்களே பெருமளவில் இடம்பெற்றிருந்தன.

ஆனால் இன்று ஏதோ ஒரு வகையில் இந்த இரு யுகங்களும் ஒன்று கலந்த தன்மையே நாட்டில் நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்கில் பட்டினியும், யுத்தக் கெடுபிடியும் மக்களைப் பெரிதும் வதைத்து வருகின்றன.

தென்னிலங்கையில் அராஜகம், வன்முறைகள் என்பன தலைவிரித்தாடி சட்டம், ஒழுங்கு என்பன நிலை தடுமாறிப் போயிருக்கக் காணப்படுகின்றன.

ஜனநாயக விரோத நடவடிக்கைகள் முனைப்படைந்து அனைத்துத் தரப்பினரிடையேயும் விஷமத்தனமும், நேர்மைத் திறனும் அற்ற அரசியலே இதுவரை காலமும் இடம்பெற்று வந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும், சுபீட்சத்தையும் விரும்பும் அனைத்து இன மக்களும் 'பட்டினியுகம்', 'கொலை யுகம்' அற்ற ஒரு புதிய யுகத்தை புதிய பாராளுமன்றம் உருவாக்குமா என்பதனையே ஆவலோடு எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றனர்.

புதிய ஆட்சியாளர்கள் இந்த எதிர்பார்ப்பினை எவ்வளவு தூரம் பூர்த்தி செய்வார்கள் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# உங்கள் லேடீஸ் ஸ்பெசல்

# -அழகை அதிகப்படுத்த-

# இயற்கையான 10 வழிகள்




தங்களுடைய முகங்களுக்கு அழகூட்டுவதற்கு மேலை நாடுகளில் மட்டுமல்லாமல் நமது நாடுகளிலும் 'பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைமுறை மேற்கொள்ளப் படுகிறது. இத்தகைய சத்திரசிகிச்சைகளுக்காக பல்லாயிரக்கணக்காகப் பணத்தைச் செலவிடவோ வேதனைப்படவோ வேண்டியதில்லை: தங்களுடைய கை விரல்களைக்கொண்டே எழிலான தோற்றத்தைப் பெற முடியும் என்கிறார் டிலோறிஸ் கபெல்லரோ என்ற அழகியற் கலைஞர்.




ஹோலிவுட்டின் பிரபல நடிகைகளான ஜூலியா ரொபேட்ஸ், பார்பரா ஸ்ரேரா போன்றவர்கள் மட்டுமல்லாமல் இளவரசி டயனாவும் டிலோறிசிடம் இயற்கை அழகூட்டும் முறைப் பயிற்சி பெறுகிறாராம்.

'உடல் பருமனையும் உறுப்புகளின்




ஒழுங்கற்ற வளர்ச்சிகளையும் குறைக்கவும் ஒழுங்குபடுத்தவும் அக்கறைகாட்டும் பல பெண்கள் தங்கள் முக அழகுதான் பிரதானமானது என்பதனை மறந்துவிடுகிறார்கள். உடலுறுப்புகளுக்கு 'மசாஜ்' எனும் அழுத்தம் கொடுக்க முன்வருவோர் தங்கள் முகத்திலுள்ள உறுப்புகளுக்கு விலையுயர்ந்த அழகு சாதனங்களைப் பூசுகின்றார்கள். இவற்றினால் பெறப்படும் பலன்களைவிட தங்கள் விரல்களினைப் பயன்படுத்தி அழகூட்டுவதன்மூலம் பெரும் பயனடையலாம். என்கிறார் டிலோறிஸ் கபெல்லரோ.

முகத்திலுள்ள நெற்றி, மூக்கு, கன்னம், வாய், கண் மற்றும் கழுத்து ஆகியவற்றுக்கு தனித்தனி அழுத்த முறைகளை டிலோறிஸ் தருகிறார். இவை மிகவும் சுலபமான பயிற்சி முறைகள். எவரும் கடைப்பிடிக்கலாம். இப்பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் குளிர்ந்த தேயிலைச் சாயத்தினால் முகத்தை அலம்பி துடைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். ஈரத்தை நன்றாக ஒற்றி எடுத்த பின் பயிற்சியினைத் தொடங்கலாம். அழுத்தத்துக்கு மென் தன்மை தருவ தற்காக ஏதாவது தடிப்பற்ற களிம்பினை விரல்களில் தடவிக்கொள்ளலாம்.

**நெற்றி**

படத்தில் காட்டப்பட்டவாறு இரு கைகளின் சுட்டு மற்றும் நடுவிரல்களை நெற்றியில்-மூக்குக்கு மேலே வைத்துக்கொள்ளவும். வேகமாகவும் ஒரே சீரான அழுத்தத்துடனும் விரல்களை கண் மண்டலம்வரை கொண்டு வரவும். இதனை 25 தடவைகள் செய்ய வேண்டும்.

அடுத்து வலது கையின் இரு விரல்களையும் கண் புருவத்தின் மீது வைத்து மேலே த்லைமுடி தொடங்குமிடம்வரை (நெற்றி முழுவதும்) மேல் நோக்கி இழுக்கவும். அதேபோல் இடது கண்ணுக்கு மேலேயும் செய்யவும். ஒவ்வொரு பயிற்சியையும் 25 தடவைகள் செய்ய வேண்டும். விரல்களினால் தோல் அழுத்தப்படும் தாக்க நிலை ஒரே சீராக அமைவது பிரதானம்.

இப்பயிற்சியினால் நெற்றியில் ஏற்படும் சுருக்கங்கள் யாவும் மறைவதுடன் சருமமும் செழிப்புறும்.






**மூக்கு**

வலது கைப் பெருவிரலாலும் சுட்டு விரலாலும் மூக்கின் நுனியினைப் பிடித்துக் கொண்டு அடுத்த கையின் பெருவிரல் மற்றும் சுட்டுவிரலாலும் மூக்கின் மேல் மட்டத்திலிருந்து மூக்கின் துவாரங்கள் வரையிலான சதைப் பிடிப்புகளை முன்னோக்கி இழுத்து விடவும். இதனையும் 25 தடவைகள் செய்யவேண்டும்.

**கன்னம்**

சுட்டு விரலையும் நடுவிரலையும் கன்னத்திலுள்ள உயர்வான பகுதி (எலும்பில்)யில் வைத்து அழுத்தியவண்ணம் வலது புறச் சுழற்சியினை மேற்கொண்டு தாடை வரை கொண்டுவரவும். அதே போன்று தாடையிலிருந்து மேல்நோக்கி கண்ணின் அடிப்பாகம்வரை விரல்களால் அழுத்தமாக சுழற்றித் தேய்த்த வண்ணம் கொண்டு செல்லவும். இடது கன்னத்துக்கும் இப்பயிற்சியினைச் செய்யவும். ஒவ்வொரு பக்கமும் 25 தடவைகள் செய்யப்பட வேண்டும்.

கன்னத்தில் ஏற்படும் சுருக்கங்கள் அகலவும் கன்னம் பொலிவுற்றுப் பிரகாசிக்கவும் இப்பயிற்சி உதவும்.

**வாய்**

1. நாடியில் இருவிரல்களையும் வைத்து அழுத்திய வண்ணம் கடவாயைத் தொட்டாற்போல் மேல் நோக்கி மூக்குவரை கொண்டு செல்லவும். இடது புறமும் வலது புறமும் தலா 25 தடவை செய்யவும். இதே விரல்களால் வாயைச் சுற்றி சுழற்சி அழுத்தம் கொடுத்து மூக்குவரை கொண்டு செல்லவும். இரு புறமும் தலா 20 தடவைகள் இவ்வாறு செய்யவேண்டும்.
2. சுட்டு மற்றும் நடுவிரல்களின் நுனியினை அதரங்களின் நடுப்பகுதியில் பொருத்தவும். சுட்டுவிரல் மேலுதட்டையும் நடுவிரல் கீழுதட்டையும் தொட்டாற்போல் அழுத்திய வண்ணம் காதுவரை விரல்கள் இழுக்கப்பட வேண்டும். இதனையும் 25 தடவை செய்யவேண்டும்.

**கண்கள்**

கண்ணின் மூக்கடியிலுள்ள தொங்கலில் இரு விரல்களையும் வையுங்கள். சுட்டு விரல் மேல் இமையை சற்று அதிகமாக அழுத்திய வண்ணமும் நடுவிரல் இமையின் கீழ்ப் பகுதியினை மென்மையான முறையில் அழுத்தியவண்ணமும் கண்ணின் காதுப் பகுதிவரை இழுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கண்ணுக்கும் இவ்வாறு 25 முறை அழுத்தம் கொடுக்கப்படவேண்டும்.

**கழுத்து**

1. விரல் நுனிகளை நாடியின் நுனியினைத் தொடவைத்து அழுத்திய வண்ணம் தாடை வழியாக காது மடலின் கீழ்ப்புறம்வரை கொண்டு செல்லவும். இரு புறமும் தலா 50 தடவைகள் தொடரவும். இப்பொழுது விரல்களை விரித்தவண்ணம் நாடியின் அடிப்பாகத்திலிருந்து அடிக்கழுத்துவரை இழுக்கவும். இடம் புறம் ஆகிய பகுதிகளில் தலா 50 தடவைகள் செய்யவும்.
2. விரல்களை முஷ்டியாக்கியவண்ணம் கழுத்தின் மேல் புறத்தில் (நாடியின் நுனியிலிருந்து) கீழ்நோக்கி அழுத்தி இழுக்கவும். ஒவ்வொரு பகுதிக்கும் 50 முறை செய்யவும். இதே முஷ்டி அமைப்புடன் அதே முறையில் கழுத்தின் கீழேயிருந்து மேல் நோக்கி இழுக்கவும்.

**மூக்கு**

இரு கைவிரல்களையும் கோர்த்துக்கொண்டு மூக்கையும் வாயையும் லேசாக அழுத்தவும். பின்னர் அதே நிலையில் விரல்களை (கோர்வை நீக்கி) காதுவரை இழுக்கவும் இதனையும் 25 தடவைகள் செய்ய வேண்டும். மீண்டும் விரல்களைக் கோர்த்து நடுவில் ஒரு முக்கோண வடிவம் தோன்றும்படி அமைத்து,




(அம்முக்கோண அமைப்பு மூக்கினை வெளியே விட்டதாக) விரல்கள் முகத்தின் சகல பகுதிகளையும் அழுத்தியவண்ணம் விரல்கள் முகத்துக்கு




குறுக்கால் இழுக்கப்பட வேண்டும். இதனையும் 25 தடவைகள் செய்தாக வேண்டும்.

இந்தப் பயிற்சிகளை தொடர்ந்து மூன்று வாரங்கள்வரை செய்ய உங்கள் வயதில்










10 வயது குறைந்துவிட்ட தோற்றத்தினை முகம் காட்டும் என்று உறுதி கூறுகிறார் டிலோறிஸ் கபெல்லரோ.

## நீங்களும் தைக்கலாம்

### 12-14 வயதுப் பெண்பிள்ளைகளுக்கான சல்வார் சட்டை




**எஸ்.எஸ்.**

**சல்வார் சட்டையின் அகலம் 30 அங்குலம் (முன்பக்கத்திற்கு)**
**சல்வார் சட்டையின் நீளம் 36 அங்குலம்**
**கையின் அகலம் 8 1/2+ 8 1/2 அங்குலம்**
**கையின் நீளம் 15 அங்குலம் (மடிப்பு உட்பட)**
**சல்வாரிக்கான கீழ்காற்சட்டை**
**காற்சட்டையின் அகலம் 26 அங்குலம் (ஒருபக்கத்திற்கு)**
**காற்சட்டையின் நீளம் 38 அங்குலம் (மேல்+கீழ் மடிப்பு உட்பட)**

**சட்டையின் முன்பக்கம் வெட்டும் முறை:**

30 அங்குல அகலமான துணியை எடுத்து சமனாக மடிப்போம். அவ்வாறு மடித்த துணியின் மார்புப் பகுதிக்கு 20÷2 அளவில் அடையாளமிடுக. பின்னர் படம் 1ல் காட்டியவாறு G,H என்னும் பகுதிகளில் G யிலிருந்து 3 அங்குலம் அளந்து M எனக் குறிக்குக. M இலிருந்து 3 1/2 அங்குலம் அளந்து N எனக் குறிக்குக. N லிருந்து 31/2 அங்குலம் அளந்து H இருக்கிறதா என்று பார்க்கவும்.

இவ்வாறு குறித்த பகுதிகளிலிருந்து மீண்டும் Mலிருந்து 7 அங்குலம் பதிவாக வளைத்து L எனக் குறிக்குக. அப்பகுதி கையாகும். அதனை அடுத்து H இருந்து 4 அங்குலம் பதிவாக P எனக் குறிக்குக. இப்பகுதியை U வடிவில் வளைத்து வரைக. இது கழுத்துப் பகுதியாகும். இதனை அடுத்து Kலிருந்து 1 1/2 அங்குலம் மேல்நோக்கி J எனக் குறிக்குக. பின்பு Jஐயும் Iயையும் சிறு சரிவாக வரைக. இத்தோடு (J,L) இடுப்புப் பகுதியை மென் வளைவாக வரையவும். இவ்வாறு வரையப்பட்ட முன் பகுதியை வெட்டவும்.

இப்பகுதியை வைத்து பின்பக்கத்தை வெட்டவும். கழுத்துப் பகுதியை மட்டும் 4 அங்குலம் பதித்து வெட்டாமல் 1 அங்குலம் பதித்து வெட்டினால் போதுமானது.

**கை வெட்டும் முறை:**

படல் 2ல் காட்டப்பட்டவாறு 17 அங்குலத்தை சமனாக மடிக்கவும். மடித்த பகுதியினை A,B-C,D எனக் குறிக்குக. A யிலிருந்து 3 அங்குலம் பதிவாக F எனக் குறிக்குக. C லிருந்து 4 அங்குலம் உள்நோக்கி E எனக் குறிக்குக. E க்கும் D க்கும் இடைப்பட்ட அளவு 4 1/2 அங்குலம் ஆகும். F ஐயும் B யையும் படம் 2ல் காட்டியமாதிரி வளைத்து வரைந்து வெட்டவும்.

**சல்வாருக்கான காற்சட்டையினை வெட்டும் முறை:**

மேற்குறிப்பிட்ட அளவிலான துணியினை சமனாக மடிக்கவும். மடித்த பகுதிகளுக்கு QR எனவும், TS எனவும் குறிக்குக. அவ்வாறு குறித்தபின்,

× (படம் 3ஐ கவனத்திற் கொள்க)

Rஇலிருந்து 1 1/2 அங்குலம் உள்நோக்கி W எனக் குறிக்குக. R இலிருந்து 11 1/2 அங்குலம் கீழ்நோக்கி Vஎனக் குறிக்குக. அதனை அடுத்து T இலிருந்து 7 அங்குலம் உள்நோக்கி U எனக்கு குறிக்குக. U-S இடையிலான அளவு 6 அங்குலமாகும். U யையும் V யையும் மென்சரிவாக மேல்நோக்கி படத்தில் காட்டியவாறு வரைந்து Vயையும் W யையும் ஒரு அங்குல கழிவாக மென்சரிவாக படத்தில் காட்டியவாறு வெட்டவும். இவ்வாறு வெட்டிய காற்சட்டைப் பகுதியை வைத்து இன்னோர் பகுதியை வெட்டி எடுக்கவும்.

**தைக்கும்முறை:**

காற்சட்டையின் இரு துணிகளையும் எடுத்து கீழ்க்கால் மடிப்புக்கு 1 1/2 அங்குலம் மடித்து தைக்கவும். இவ்வாறு தைத்தபின்னர் காற்சட்டையின் ஒரு பகுதி முதலில் எடுத்து U,V பகுதியை பொருத்தவும். அவ்வாறு அடுத்த பகுதியையும் பொருத்தவும். இவ்வாறு பொருத்திய பகுதிகளை நல்ல பக்கமாக திருப்பி எடுத்து இரு கால்களின் மேற்பகுதியை அதாவது W,V பகுதிகளை ஒன்றோடு ஒன்று சேர்த்து பொருத்தியதும் காற்சட்டையின் அமைப்பு வந்துவிடும். இவ்வமைப்பின் மேல் பகுதிக்கு 1 1/2 அங்குல மடிப்பு போட்டு அதனுள் இறப்பர் நாடா போட்டு பயன்படுத்திக்கொள்ளவும்.

**சல்வார் சட்டை பொருத்தும் முறை:**

முதலில் தோள் பகுதியை பொருத்தி பின் இடுப்புப் பகுதியை சரிவாக வளைவு வடிவில் பொருத்தவும். (தையலுக்கு 1/2 அங்குலம் போதும்) இவ்வாறு பொருத்தியபின் கைப்பகுதியை சட்டையின் கைக்கான பகுதியில் இணைக்கவும். கழுத்துப் பகுதி குறுக்கு வெட்டுத் துணி 1 1/2 அங்குலம் அளவில் வெட்டி, சிறிதாக உருட்டித் தைக்கவும். பாவனைக்கு சுலபம் தேவைப்படின் சட்டையின் முன் பக்கத்தின் மேற்பகுதியில் 3 அங்குலம் வெட்டி (OPEN) அழகுக் கேற்ப பொத்தான்களை பயன்படுத்திக்கொள்ளலாம்.

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பீட்ரூட் சாலட்

**தேவையான பொருட்கள்:**
பீட்ரூட் 1/4 கிலோ
வெண்ணெய் 2 மேசைக்கரண்டி
மிளகுத்தூள் 1 தேக்கரண்டி
உப்பு தேவையான அளவு
எலுமிச்சம்பழம் 1

**செய்முறை:**

1. பீட்ரூட்டைச் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
2. வெண்ணெயை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பில் வைக்கவும். வெண்ணெய் உருகியவுடன் மிளகுத் தூளைப் போட்டு, உடனே பீட்ரூட் துண்டுகளைப்போடவும். உப்பும் போடவும். ஒருமுறை எல்லாவற்றையும் ஒன்றாகக் கிளறவும்.
3. எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து, அடுப்பிலிருந்து இறக்கியதும் சாற்றை விடவும்.

### பச்சைத் தக்காளி கறி

**தேவையான பொருட்கள்:**
பச்சைத்தக்காளி 1/4 கிலோ
வெங்காயம் 2
தேங்காய்த் துருவல் 2 மேசைக்கரண்டி
பச்சை மிளகாய்
உப்பு தேவையான அளவு
மஞ்சள்பொடி 1/4 தேக்கரண்டி

**செய்முறை:**

1. பச்சைத் தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய் மூன்றையும் நீளவாக்கில் நறுக்கிக்கொள்ளவும்.
2. எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரு கோப்பை தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும்.
3. காய் வெந்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கவும். தேவையானால் பச்சைக் கொத்தமல்லியைப் பொடியாக்கிச் சேர்க்கலாம்.
4. அவசரமாகக் கறி செய்ய வேண்டுமானால் இதைச் செய்யலாம்.

## அழகுக் குறிப்பு

### பாத வெடிப்பு



**வெடிப்புள்ள பாதங்கள்:** வெடிப்புள்ள பாதங்களில் மண்துகள் செல்ல வாய்ப்புண்டு. நீளம் குறைவான செருப்புகளை போடாதீர்கள். அப்படி போட்டால் பித்த வெடிப்பு உள்ள இடத்தில் மண் துகள்கள் புகுந்து விடும். அடிக்கடி கால்களை கழுவி சுத்தமாக வைத்திருக்கவும். உங்கள் கால்களில் பித்த வெடிப்பிருந்தால் உடனே மருதோன்றி அரைத்துப் போடவும். கால்கள் அழகாக இருந்தால் உங்கள் கணவர் உங்களிடம் அன்புசெலுத்த அதிக வாய்ப்புண்டு.

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 3
உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* கூப்பன்களை பத்திரமாக சேகரியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

# நீளமோ நீளம்



நாக்கைத் தொங்கப் போடாதே என்று இவருக்கு சொல்லக்கூடாது. 9 1/2 அங்குல நாக்கை உள்ளே வைத்துக்கொண்டிருப்பது சுலபமான காரியமா? அதுதான் அடிக்கடி வெளியே நீட்டிக்கொள்கிறார்.

உலக சாதனையான இந்த நீ....ள...மான நாக்கின் நீளம் 9 1/2 அங்குலம். இவரது பெயர் ஹொஃஹ் ஸ்ரோன். வயது 28. இவருக்கு திருமண ஆசையும் வந்துவிட்டதாம். நீளமான நாக்கைக் கொண்ட பெண்ணாகக் கிடைத்தால் பிரச்சனை இல்லை என்கிறார். கிடைப்பது தான் பிரச்சனை.

இவரது நீள நாக்குப் படங்கள் சர்வதேசப் பத்திரிகைகளில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதால்இவரை நேரில்காண பலர் விருப்பம் தெரிவித்து கடிதம் போட்டுள்ளார்களாம்.

## தகவல் பெட்டி



## நான்கு கை-ஒரு குழந்தை

குவைத்திலுள்ள பர்வானியா மருத்துவமனையில் 11.07.94 அன்று அடார்த்தியான ஆச்சரியம்.

அன்றுதான் நான்கு கைகளோடு பிறந்தது ஒரு குழந்தை. இடது பக்கத்தில் ஒரு கைதான். ஆனால் வலது பக்கத்தில் மூன்று கைகள். மருத்துவர்கள் அதிசயத்தோடு குழந்தையை பராமரித்துக்கொண்டிருக்கிறார்கள். விசயம் அறிந்த பலர் குழந்தையை பார்வையிட மருத்துவமனைக்கு படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆச்சரிய குழந்தையால் மருத்துவமனையும் பிரபலமாகிவிட்டது. இக்குழந்தையின் தாயார் சோமாலியாவைச் சேர்ந்தவர். ஏற்கனவே அவருக்கு ஏழு பிள்ளைகள். எட்டாவது குழந்தையை உலகமறியும் குழந்தையாக தந்துவிட்டார்.

## எப்போதும் வழித்துணையாய்



விபத்தில் சிக்கி இடையின் கீழ் செயலிழந்து முடமான போதிலும் மனதில் துணிவுடன் தன் வாழ்க்கையைத் தொடர்கிறார் சிண்டி ஐரிஷ் என்ற 31 வயது பெண்மணி. 1982ம் ஆண்டு ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய இவர் இடையின் கீழ் இயக்கமிழந்தார்.

சிண்டி வசிப்பது அமெரிக்காவின் வட துருவத்தை ஒட்டிய அலஸ்கா மாநிலம். பெரும்பாலும் எப்பொழுதும் கடும் குளிரும் பனியும் வாட்டும் ஃபெயார்பாங்க்ஸ் நகரத்தில் வாழ்கிறார். விபத்தில் சிக்குவதற்கு முன்னர் ஒரு மீன் பிடிப் படகில் பணி புரிந்தார். எப்போதும் சுறுசுறுப்பாகவே பணிபுரிந்து வந்த சிண்டியால் கால்கள் இயங்க மறுத்தாலும் உழைத்தாக வேண்டும் என்ற ஆர்வம் தூண்டியமையினால் தொடர்ந்து உழைக்கிறார். தனக்குரிய பணிகளுக்கு அவர் வேறு எவருடைய தயவையும் நாடுவதில்லை.

வீட்டினுள் ஒரு சக்கர நாற்காலியின் துணையுடன் பணிகளைக் கவனிக்கும் சிண்டி, மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றிலேயே பணி புரிகிறார். இவர் வெளியே செல்லும் போது அதே சக்கர நாற்காலியிலேயே பயணம் செய்கிறார். எப்போதும் பனிப் படலங்களால் மூடப்பட்டிருக்கும் சாலைகளில் பயணம் செய்ய இவருக்கு இரு நாய்கள் உதவுகின்றன. இதற்காகவே மாக்ஸ் மற்றும் கிரி டுவாக் என்ற இரு நாய்களுக்கு பயிற்சி கொடுத்து வைத்திருக்கிறார் சிண்டி. இந்நாய்களை ஒன்றாக இணைத்துக்கொண்டு தனது சக்கர நாற்காலியுடன் பிணைத்து விடுகிறார். அல்லது அவற்றின் தொடர்புப் பட்டிகளை தன் கையில் வைத்துக் கொள்கிறார்.

## எந்தக் கோழியிலும் இல்லாத இரண்டு

நாலுகால்களோடு வாழும் பெண்மணியை முரசு ஏற்கனவே அறிமுகப்படுத்தியிருந்தது. இப்போது நாலுகால்களோடு வாழும் கோழியை படத்தில் காண்கிறீர்கள். அதிசயக் கோழியோடு நிற்பவர்தான் உரிமையாளர். அபுதாபியில் இந்த அதிசயக் கோழி பிறந்துள்ளது.



## என்னோடு மோதாதே......



கங்காருவுக்கு மல்யுத்தப் பயிற்சி. எல்லாம் ஒரு மாற்றத்துக்குத்தான்.

# சினிவிசிட்



## பம்பாய் நியூஸ்

### நம்பத்தகுந்த குமார்

இந்தியில் இளம் இரசிகர்களை கவர்ந்து வருகிறார் அக்சய் குமார்.

யாருக்கும் போட்டியாக இல்லாமல் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தப் போவதாக கூறுகிறார் அக்சய் குமார்.

சல்மான்கான், சஞ்சய்தத் போன்றவர்களோடு நட்பாகவும் இருக்கிறார்.

நல்ல கட்டான உடல்வாகும், நடிப்பில் ஈடுபாடும் இருப்பதால் அக்சய் குமார் இந்தியில் நிலைக்க முடியும் என்பதை நிச்சயம் நம்பலாம்.

### கரிஸ்மாவின் ஆட்டம்

'வால்டர் வெற்றிவேல்' படம் இந்தியில் 'குர்தார்' என்ற பெயரில் தயாரானது.

கோவிந்தாவும், கரிஸ்மா கபூரும் ஜோடியாக நடித்தார்கள்.

'குர்தாரில்' ஒரு பாடல் சர்ச்சையை கிளப்பியது. 'சக்னி, சக்னி' என்று முதல் அடியே அமைந்துவிட தணிக்கைக் குழு பாடலை வெட்டியே தீருவது என்று அடம் பிடித்தது. பின்னர் வேறு வழியில்லாமல் சக்னி, சக்னி என்பதை பேபி பேபி என்ற மாற்றி மறுபடியும் படத்தில் சேர்த்து தணிக்கைக்குழுவை திருப்தி செய்தார்கள். பாடல் வரியை மாற்றியபோதும் கரிஷ்மா கபூர் அந்த பாடல் காட்சியில் ஆடும் ஆட்டம் இருக்கிறதே... இரசிகர்கள் மத்தியில் அட்டகாச வரவேற்பு.

★



கரிஷ்மா கபூர்

## "அவரோடு இருந்தது உண்மைதான்"

ஜூஹி சாவ்லாவின் காதலர் பெயர் ஜாய் மேத்தா. இருவரும் கடற்கரை ஒன்றில் இருந்தது பற்றி ஒரே கிசுகிசு. இதுபற்றி ஜூஹி சாவ்லா கூறும்போது, "நான் கோவா கடற்கரைப் பகுதியில் அவரோடு இருந்தது உண்மைதான். ஆனால் அவர் என் நண்பர் மட்டுமே. மற்றதெல்லாம் புரளிதான்" என்கிறார். ஜூஹி சாவ்லா இந்தியில் முன்னேறி வருகிறார். தமிழில் 'பருவராகம்', 'நாட்டுக்கு ஒரு நல்லவன்' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

## தெரியாதவர்கள் கிடையாது

இன்றைய இந்திப்பட உலகில் அதிக கவர்ச்சியுடன் நடித்துக் கொண்டிருப்பவர் யார் என்று கேட்டால், உடனே வரும் பதில் மம்தாகுல்கர்னி. இந்தி திரையுலகில் இவரை அறியாதவர் கிடையாது. அந்த அளவுக்கு கவர்ச்சி காட்டி பரபரப்பாகப் பேசப்படுகிறார். 'பொலிஸ்வாலா கூந்தா' படப்பிடிப்பில் மம்தாவை சந்தித்த இன்னொரு நடிகை ஜூஹி சாவ்லா ஏன் இவ்வளவு கவர்ச்சியாக நடிக்கிறீர்கள் என்று கேட்க, மம்தா பதிலே சொல்லவில்லை. அதன்பின்னர் ஜூஹி சாவ்லாவுடன் பேச்சே கிடையாது.



டிஸ்கோ சாந்தி

## பாலசந்தர் எப்படித் திட்டுவார்?

இயக்குநர் சிகரம் என்று பெயரெடுத்தவர் பாலசந்தர். படப்பிடிப்புக்களின்போது பாலசந்தர் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்வார். நடிக, நடிகைகள் பயந்தபடிதான் நடிப்பார்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பாலசந்தரின் 'ஜாதிமல்லி' படத்தில் நடித்த யுவராணி தன் அனுபவத்தைச் சொல்கிறார்.

"ஜாதிமல்லி' படத்தில் சரத்துணியை பிழிந்துகொண்டு குஷ்புவிடம் பேச வேண்டிய காட்சி. எனக்கு டயலாக் (வசனம்) வரவில்லை. உடனே முண்டம்...முண்டம் என்று இயக்குநர் திட்டினார். நான் அழுதுட்டேன். இயக்குநர் என்னிடம் வந்து, "நான் எல்லோரையும் இப்படித்தான் திட்டுவேன் அழாதே' என்று சமாதானம் சொன்னார் என்று நினைவுகூருகிறார் யுவராணி.

## வரவேற்பு

பிரபுதேவா விரைவில் சிங்கப்பூர் செல்லவிருக்கிறார். அங்கு நடன நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக இசைக்குழுவுடன் செல்லுகின்றார். அங்கு அவருக்கு பலத்த வரவேற்பு கிடைக்கவுள்ளதாம்.

## கிசு-கிசு நியூஸ்

### "யார் வேண்டும் உனக்கு?"

அமலா- நாகார்ஜுன் தம்பதிகள் மத்தியில் புயலைக் கிளப்பியிருப்பவர் நக்மா. அமெரிக்காவில் படித்த நாகார்ஜுன் பம்பாய் நாகரிகத்தில் ஊறிய நக்மாவை நெருங்கத் தொடங்க விசயம் அமலாவின் காதுக்கு எட்டியது. நக்மாவின் காதலர் சிம்புகபூருக்கும் விசயம் தெரிந்துவிட்டது. "நான் வேண்டுமா? நாகார்ஜுன் வேண்டுமா?" என்று சிம்புகபூர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நக்மாவை கேட்டுவிட்டாராம். அதனால் சிம்புகபூரையே தான் திருமணம் செய்யப்போவதாக அறிவித்துவிட்டார் நக்மா.

## இறுதியில் சொந்த முயற்சி

பாண்டிக்கு ராஜன் நிலை மீண்டும் பழையபடி மாறினாலும் ஆச்சரியப்படமுடியாது என்கிறது கோடம்பாக்க வட்டாரம். நிதிப்பிரச்சனையால் பல படங்கள் அரைவாசியில் நிற்கின்றனவாம். தயாரிப்பாளர்களில் நம்பிக்கையிழந்த பாண்டிக்கு ராஜன் தன் சொந்த முயற்சியில் என்றாலும் படங்களை முடித்து வெளியிட நினைத்து காரியத்தில் இறங்கியுள்ளாராம்.

## ஒரு புதிய நாயகன்

'ஒட்டப் பந்தயம்' படத்தில் அறிமுகமானவர் சவுந்தர்யகுமார். அவர் இப்போது விக்ரமன் இயக்கும் புதிய மன்னர்கள் படத்தில் கதாநாயகர்களில் ஒருவராக நடித்து வருகிறார். 'சங்கர்லால்', 'என் அன்பே', 'செக்போஸ்ட்' ஆகிய படங்களிலும் கதாநாயக வாய்ப்பு கிடைத்துள்ளது. சிவந்த நிறம், உயரம், இளம் வயது என்பன அவர் முன்னேற கைகொடுக்கும் அம்சங்கள்.

## 40 அடி உயரத்தில் பிரசாந்த்

'ஆணழகன்' படப்பிடிப்பில் படு தீவிரமாக இருக்கிறார் தியாகராஜன். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை வெள்ளிவிழாப் படமாக எடுத்துத் தாருங்கள் என்று விட்டாராம் தயாரிப்பாளர் வேலூர் பாலாஜி.

பிரசாந்த் 40 அடி உயரத்தில் தொங்குவது போல் ஒரு காட்சியை கீழே வலை எதுவும் விரிக்காமல் படமாக்கியுள்ளார்களாம். சண்டைப் பயிற்சி சூப்பர் சுப்பராஜன். பிரமாதமான சண்டைக்காட்சிகளை அமைத்து வருகிறார்.

பிரசாந்த்துக்கு ஜோடியாக நடிக்கும் பம்பாய் நடிகை சினேஹாவை கமரா கொஞ்சம் அதிகமாகத்தான் உரித்து வருகிறது. அந்தளவுக்கு கவர்ச்சி. சினேஹாவை கண்டுபிடிக்க இரண்டு வருடம் காத்திருந்ததாகக் கூறுகிறார் தியாகராஜன்.

## முகப்பில்

பார்த்திபன்
படம்-சரிகமபதநி
ரோஜா
படம்-தாரை



## வள்ளிக்குப் பின்னர்

ரஜினியின் 'வள்ளி'யில் வில்லனாக நடித்திருந்தவர் சஞ்சய். 'வள்ளி'க்குப் பின் 'சேதுபதி ஐபிஎஸ்' படத்தில் நடித்தார். 'வள்ளி', 'சேதுபதி ஐபிஎஸ்' என்ற பெயரிலும் தெலுங்கில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டார்கள். இந்த இரு படங்களும் தெலுங்கில் வெற்றி பெறவே சஞ்சய் நேரடித் தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறார்.

## கௌதமியின் இரசனை

கமலஹாசன் முதன் முதலாக சினிமாவில் பின்னணி பாடிய 'அந்தரங்கம்' படத்திலிருந்து 'தேவர் மகன்' படம் வரை அத்தனை பாடல்களையும் ஓடியோ கசட்டில் பதிவு செய்து, ஒய்வு நேரத்தில் ரேப் ரெக்கோடரில் போட்டுக்கேட்டு இரசித்து வருகிறார் கௌதமி. 'அபூர்வ சகோதரர்கள்', 'தேவர் மகன்' படங்களில் கமலுடன் இணைந்து நடித்த அவர் இப்போது 'நம்மவர்' படத்திலும் கமலுக்கு ஜோடியாக நடித்துவருகிறார்.

## நதியாவின் திட்டம்

திருமணமாகி கணவருடன் அமெரிக்காவில் செட்டிலாகி மீண்டும் நடிக்க வந்தவர் நதியா. 'ராஜகுமாரன்', 'பூங்காற்று புதிதானது', 'சின்ன மேடம்' ஆகிய மூன்று தமிழ்ப் படங்களிலும், தெலுங்கு, மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் தலா ஒரு படத்திலும் நடித்தார். மீண்டும் அமெரிக்கா சென்றுவிட்டார். "நல்ல கதையம்சமுள்ள படம், மற்றும் நல்ல பாத்திரம் இருந்தால் இந்தியாவுக்கு வந்து நடித்துவிட்டுப் போவேன். விரைவில் இந்தியா வின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமெரிக்கா தொலைக்காட்சிக்காக ஒரு தொடரைத் தயாரிக்கவுள்ளேன்" என்றார் நதியா.



விக்ரம்-ரஞ்சிதா
படம்-மாபியா



வினிதா

## புல்லாங்குழலும் ஷோபனாவும்

நாதசுவரம் வாசித்து ராதிகா நடித்துள்ள படம் 'புதுப்பட்டி பொன்னுத்தாயி'. படமும் வந்துவிட்டது. இப்போது பல நடிகைகள் தம்மாலும் அப்படி நடிக்க முடியும் என்று கூறிவருகின்றனராம். அந்தப் பட்டியலில் ஷோபனாவும் இருக்கிறார். அவர் புல்லாங்குழல் வாசித்து நடிக்க ஆசைப்படுகிறாராம். படப்பிடிப்புகளுக்கு புல்லாங்குழலும் சகிதம் செல்கிறாராம் ஷோபனா.

## அதிரடியான உண்மை

இந்தி நடிகை ஷீபாவுக்கு பம்பாய் [illegible] பகுதியில் சொந்தமாக ஒரு பங்களா இருக்கிறது. உள்ளே வசதியான ஒரு நீச்சல் குளமும் உண்டு. ஷீபா தினமும் அந்த நீச்சல் குளத்தில் குளிப்பது வழக்கமாம்.

விசயமறிந்த சிலர் ஷீபா அக்ஷய்குமாருடன் நள்ளிரவில் குளிப்பதாக கிசு கிசு பரப்பிவிட்டனர்.

அதற்கு ஷீபா அளித்துள்ள அதிரடியான விளக்கம் இப்படி:

"அக்ஷய் குமார் எங்கள் வீட்டு நீச்சல் குளத்தில் குளிப்பது உண்மைதான். ஆனால் நான் அவருடன் சேர்ந்து குளிப்பதில்லை. காலையிலேயே நான் குளித்துவிடுவேன். அவர் மாலையில்தான் வந்து குளிப்பார். ஒரே ஒருவருடன் மட்டுமே நான் சேர்ந்து குளிப்பேன். அவர் தயாரிப்பாளர் சுதாகர் பொகாடியா. அவரைத் தவிர யாருடனும் நான் சேர்ந்து குளிப்பதில்லை" என்று ஒளிவு மறைவே இல்லாமல் உண்மையைச் சொல்லிவிட்டார் ஷீபா.

## அம்மாவுக்கு அடுத்தது யார்?

[illegible] பாரதிராஜாவுக்கும் இடையே ராசி[illegible] இருப்பதாகச் சொல்கிறார் ராதிகா. மீண்டும் பாரதிராஜா படத்தில் நடிக்கப் போவதாக கூறும் ராதிகா, தனது தாயாருக்கு அடுத்தபடியாக வணங்கும் தெய்வம் பாரதிராஜாதான் என்று உணர்ச்சி வசப்பட்டு பேசுகிறார்.



சிவராஜ்-மீனா [illegible]

## [illegible]ச்சரிவாள் காட்சிகள்

[illegible] பாண்டி'யில் நெப்போலியன் வீச்சரிவாளோடு தோன்றினாலும் தோன்றினார். [illegible] தனது படங்களில் வீச்சரிவாளோடு ஒரு [illegible] நிலைக்கச்சொல்லி இயக்குநர்களை சில தயாரிப்பாளர்கள் துரத்துகிறார்களாம். [illegible] காட்சி வந்தால் படம் வெற்றியாக ஓடிவிடும் என்று ஒரு நம்பிக்கை.

## பெ[illegible] பெயர்கள்

[illegible]

## புதிய கதைக்கு ஐடியா!

வித்தியாசமான பாத்திரங்களில் நடிப்பதையே விரும்புகிறேன். ஒரு படத்தில் போலீஸ் அதிகாரியாக நடிப்பேன். அடுத்த படத்தில் சாப்பாட்டுக்கடை சமையலளாக நடிப்பேன்.

என்னுடைய படங்களில் ஹீரோவோடு இரண்டு நடனம் ஆடிவிட்டுப் போகும் பாத்திரத்தில் நடிப்பதையெல்லாம் நான் கை விட்டு பல வருடங்களாகிவிட்டன. இப்படிக் கூறுகிறார் விஜயசாந்தி. மகாபாரதம்- ராமாயணம் மூலம் எத்தனையோ புதிய கதைகளை உருவாக்கி படமெடுக்கலாம் என்றும் ஐடியா சொல்கிறார் விசாந்தி.

## நடிக்கவா படிக்கவா?

இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரின் மகன் விஜய் இப்போதும் படித்து வருகிறார். நடித்துக்கொண்டே படிக்கும் நடிகர் இவர்தான்.

நடிப்பையும் படிப்பையும் ஒரே நேரத்தில் செய்வது கஷ்டமாக இருக்கிறதாம். கல்லூரிக்கு அடிக்கடி லீவு போட்டதால் வெறுப்பாகிப்போன கல்லூரி நிர்வாகம் சந்திரசேகரிடம் சொன்னது இது, "உங்க மகனை படிக்கவையுங்க அல்லது நடிக்க வையுங்க."

படிப்புத்தான் முக்கியம் என்று கருதியதால் எஸ்.ஏ.சந்திரசேகரின் புதிய படத்தில் விஜய் இல்லை. விக்னேஷ் நெப்போலியன் இருவரும் நடிக்கின்றனர். இருவரும் கதாநாயகர்கள்.

## சுமனின் நன்றி

ஆரம்பத்தில் ஏராளமான தமிழ்ப் படங்களில் நடித்து அதன் பின்னர் தெலுங்குப் படவுலகிற்குச் சென்றவர் சுமன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'அதிரடிப்படை'யில் நடித்தார். படம் வெற்றி பெறவில்லை. தற்போது [illegible]டன் இணைந்து, தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகி வரும் படமொன்றில் நடித்து வருகிறார்.

"நான் நடித்த தமிழ்ப்படங்கள் தொடர்ச்சியாக வெற்றி பெற்றிருந்தால் இங்கேயே ஹீரோவாகத் தொடர்ந்து இருந்திருப்பேன். தமிழ்ப் படங்கள் சரியாக அமையாததால்தான் தெலுங்குத் திரையுலகிற்குச் சென்றேன். ஆனாலும் என்னை ஆரம்பத்தில் வரவேற்று ஆதரித்த தமிழ்ப்பட ரசிகர்களை என்றுமே மறக்க மாட்டேன்" என்கிறார் சுமன்.

## பாண்டியால் கிடைத்த பயன்

'அமரன்' படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான ஆதித்யன் அதன் பின்னர் ஓரிரு படங்களுக்கு இசையமைத்தார்.

இருந்தும் வெற்றிகரமான இசையமைப்பாளர் என்ற பெயரைப் பெற முடியவில்லை.

ஆனால் சமீபத்தில் அவர் இசையமைத்த 'சீவலப்பேரி பாண்டி' படப் பாடல் ஹிட்டாகவே அவர் நான்கு புதிய படங்களுக்கு இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ளார்.



## வித்தியாசமாக விஜயசாந்தி

தெலுங்கில் கடந்த ஏழு ஆண்டுகாலமாக முன்னணி நடிகையாகக் கொடிகட்டிப் பறக்கிறார் விஜயசாந்தி. இடையில் அவருக்கும் போட்டியாக மீனா, ரோஜா, சௌந்தர்யா, வாணி விஸ்வநாத், நக்மா, ரம்யா, களத்தில் குதித்தனர். எனினும் ரோஜா, நக்மா, ரம்யா மூவரும்தான் போட்டியில் நிலைத்து நிற்கிறார்கள். ரோஜா, விஜயசாந்திக்குப் போட்டியாகப் பல தெலுங்குப் படங்களில் கிளுகிளுப்பாக நடித்து வருகிறார். விஜயசாந்தி 'ஸ்ட்ரீட் ஃபைட்டர்', 'லேடி பாஸ்' என அதிரடிப்படங்களில் நடித்து வருகிறார். 'லேடி பாஸ்' படத்தில் பெண் தாதாவாக வித்தியாசமானதொரு கெட்டப்பிலும் விஜயசாந்தி வருகிறார். கோடி ராமகிருஷ்ணா இயக்கும் இந்தப் படமும் விரைவில் தமிழுக்கு மொழி மாற்றப்பட்டு வரும்.

## மினி சினி

- ரஜினி நடிக்கும் 'பாட்ஷா' படத்தின் பெயரை 'பாஷா' என்று இரண்டு எழுத்தில் வரக்கூடியதாக மாற்றியுள்ளார்கள். இந்தப் படத்தில் ரஜினி ஆட்டோ டிரைவர் வேடத்தில் நடிக்கவுள்ளார்.
- தற்போது முடிவடையும் நிலையில் உள்ள 'பம்பாய்' படத்தை அடுத்து மோகன்லால் நடிக்கும் மலையாளப்படமொன்றையும், சிரஞ்சீவி நடிக்கும் தெலுங்கு படமொன்றையும் இயக்கவுள்ளார் மணிரத்தினம். அத்துடன் ஜீவி தயாரிக்கும் தமிழ்ப்படமொன்றையும் மணிரத்தினம் இயக்கவுள்ளார்.
- 'சம்சாரம் அது மின்சாரம்' படத்திற்குப் பின்னர் இயக்குநர் மணிவாசகம் தயாரிக்கும் 'பட்டுக்கோட்டை பெரியப்பா' படத்தில் வடிவேலும், விசுவும் சேர்ந்து நடிக்கிறார்கள். ஆனந்தபாபு-மோகினி ஜோடியாக நடிக்கும் இப்படத்தை விசு இயக்குகிறார்.
- இந்திய-ரஷ்ய கூட்டுத் தயாரிப்பான 'இசைப்பயணம்' முடிவடைந்த பின்னர், இந்தியில் வெற்றிபெற்ற 'டர்' படத்தின் தமிழ் வடிவத்தில் ரகுமான் நடிக்கவுள்ளார். புதிய இயக்குநர் ஒருவர் இயக்கும் இந்தப் படத்தில் ரகுமானுக்கு ஜோடியாக மதுபாலா அல்லது ரவீனா டாண்டன் நடிப்பார்.
- தொடர்ந்து ஒரே மாதிரியாக கவுண்டமணியிடம் உதை வாங்குவது போல் நடித்துவந்த செந்தில், 'வீரா', 'ஆனஸ்ட்ராஜ்' போன்ற படங்களில் வித்தியாசமான வேடங்களில் நடித்தார். தற்போது ராமராஜன் கதாநாயகனாக நடிக்கும் 'உளவாளி' படத்தில் குணச்சித்திர வேடத்தில் நடித்து வருகிறார் செந்தில்.
- பிரபு நடிக்கும் 'கட்டுமரக்காரன்' படத்திற்காக அப்படத்தின் இயக்குநர் பி.வாசு கதாநாயகியாக நடிக்க வைக்க இதுவரை எந்தப் படத்திலும் நடிக்காத, நிலவரசி மாதிரி இருக்கக்கூடிய புதுமுகம் தேவை என்று வலைவீசி வருகிறார்.
- பவித்திரனின் 'சூரியன் சந்திரன்'[illegible] நடித்த செண்பகம், பவித்திரன் அடுத்து இயக்கும் 'மூக்குத்தி காசி' படத்திலும் நடிக்கவுள்ளார். 'மூக்குத்தி காசி'யில் சரத்குமார்-ரோஜா ஜோடியாக நடிக்கவுள்ளனர்.
- தோழர் பாண்டியன் படத்திற்குப் பின்னர் மணிவண்ணன் இயக்கத்தில் சத்தியராஜ் நடிக்கும் படமொன்றை ராஜ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் சார்பில் ராஜநாதன் தயாரிக்கிறார். இப்படத்தில் சத்தியராஜிற்கு ஜோடியாக ராதிகா நடிக்க இருக்கிறார்.
- 'ராஜபாண்டி' படத்தில் கல்லூரி பேராசிரியை வேடத்திலும், மலையாளத்தில் மம்முட்டிக்கு ஜோடியாக '[illegible]' படத்தில் டாக்டர் வேடத்திலும் சுகன்யா நடித்து வருகிறார்.
- படங்களில் நடித்துக்கொண்டே சில மேடை நாடகங்களில் நடித்திருக்கும் கமலஹாசன், மீண்டும் மேடை நாடகமொன்றில் நடிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்.

## கற்றபின் கதாநாயகன்

[illegible] சகோதரர் அப்துல்லா, யுவராணியின் தம்பி ரத்னகுமார், [illegible] தம்பி சங்கர் இவர்கள் வரிசையில் மோகினியின் தம்பி சதிஷையும் [illegible]. அதாவது சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற [illegible] ஏற்பட்டு இருக்கிறது. "ஒரு கதாநாயகனுக்குரிய [illegible] அம்சங்களையும் கற்றுத் தேர்ந்த பிறகு எனது மகனை சினிமாவில் அறிமுகப்படுத்துவேன்" என்று சொன்னார் மோகினியின் தந்தை.


## இளையராஜாவிடம் வேண்டுகோள்

சிம்பொனி இசையமைத்து உலக சாதனை படைத்த இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு கேரள அரசு சார்பில் சில மாதங்களுக்கு முன்பு கேரளாவில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. அப்போது, கேரளாவில் ஒரு இசைப் பயிற்சிப் பள்ளி தொடங்க வேண்டும் என்று அரசாங்கம் இளையராஜாவைக் கேட்டுக்கொண்டது. அதற்கு இளையராஜாவும் சம்மதம் தெரிவித்து விட்டார். [illegible] இளையராஜாவின் இசைப்பள்ளி கேரளாவில் [illegible] போகிறது. இளையராஜாவுக்கு சினிமாவை [illegible] பொறுப்புகள் அதிகமாகிவிட்டால் பின்னணி இசை[illegible] முடங்கும்போடு வேண்டியதாகிவிடும்.



பாபு கணேஷ்-குப்ஸ்ரீ
-நாட்பூட் தஞ்சாவூர்-





## -சின்னப் பாப்பா-

சின்னச் சின்ன பாப்பா
சிந்தை கவரும் பாப்பா
மழலை மொழிகள் பேசி-எம்மை
மகிழ்வில் ஆழ்த்தும் பாப்பா.

சொன்னதையே சொல்லி-எம்மை
சிரிப்பில் ஆழ்த்தும் பாப்பா
தத்தித் தத்தி வந்து-தாயின்
மடியிலேறும் பாப்பா.

கள்ளமற்ற உள்ளம்
என்றும் உள்ள பாப்பா
உன்னைப்போல நானும்-வாழ
ஆசையுண்டு பாப்பா

வடிவேல் சசிதரன்
மட்/சரஸ்வதி வித்தியாலயம்,
கிண்ணையடி.

சேர்ந்து வாழு வீரோ? - உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ? - உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ?
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# அரசனும் பண்டிதரும்

தேவபரயாகை என்கிற அழகிய ஊரில் விஸ்வநாத பண்டிதர் என்பவர் வாழ்ந்தார். அவர் ஓர் அறிஞர். கலை, இலக்கியங்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். நாட்டு மக்களிடம் மிகுந்த அன்பு வைத்திருப்பவர். நன்றாகக் கவிதை புனைவார். எல்லாவற்றையும்விட அருமையான கலை ஒன்றை ஐயம் திரிபறக் கற்றிருந்தார்.

கை ரேகை சாஸ்திரம் என்கின்ற அபூர்வமான விஷயம்தான் அது.

ஒருவர் கையைப் பார்த்தால் போதும், நடந்து முடிந்த காலம், நடக்கின்ற காலம், நடக்கப்போகின்ற காலம் மூன்றையுமே மிகத் தெளிவாக எடுத்துக்கூறிவிடுவார்.

அவர் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவியிருந்தது. வேறு ஊர்களிலிருந்தும் அவரைத் தேடி மக்கள் கூட்டம் வந்த வண்ணம் இருந்தது. அவர் வீட்டு வாசலில் திருவிழாபோல மக்கள் கூட்டம் இருந்தது.

அவர் நினைத்திருந்தால் நகரத்திற்கே போய் பெரிய மாளிகையை விலைக்கு வாங்கி, ராஜ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கலாம். அவர் ஆசைப்பட்டிருந்தால் தங்க, வைரங்களை அடுக்கிக் குபேரனாய் இருந்திருக்கலாம். ஆனால் அவர் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவராய் இருந்தார்.

தன் கிராமத்தை விட்டோ, தான் எளிமையான வீட்டை விட்டோ வெளிவர அவர் தயாரில்லை, ஜோசியம் பார்ப்பார். பலாபலன்களை எடுத்துச் சொல்வார். அவர்கள் கொடுக்கும் தொகையை வாங்கி கொள்வார். அது சிறிதா, பெரிதா என்று பார்க்க மாட்டார். அவருடைய இந்த அதிசய குணங்களினாலும், அருமையான கலையினாலும் மக்கள் அவரை தெய்வம் போலவே மதித்துப் பழகி வந்தனர்.

விஸ்வநாத பண்டிதரின் புகழ் அந்த நாட்டு மன்னன் தேவதத்தன் செவிகளுக்கு வந்து சேர்ந்தது. அவன் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"இப்படி ஒரு அறிஞர் என் நாட்டில் இருக்கிறாரா? உடனடியாக அவரை நான் பார்த்தாக வேண்டும். அமைச்சரே! நீங்களே நேரில் சென்று அவரை அழைத்து வாருங்கள்." என்று கட்டளையிட்டான்.

அமைச்சர் குழாம் கிளம்பியது. பரிவாரங்களுடன் போய், அவர் கிராமத்தை அடைந்து வீட்டு வாசலில் நின்றது.

அமைச்சரைக் கண்டதும் குழுமியிருந்த மக்கள் விலகி வழிவிட, அவர் மிடுக்காக உள்ளே போனார்.

"வாருங்கள் தாங்கள் யாரோ?", என எப்போதும்போல அன்பான குரலில் வரவேற்றார்.

"இந்நாட்டு மன்னர் என்னை அனுப்பியுள்ளார். நான் இந்நாட்டின் அமைச்சர், அரசர் உங்களைக் காண மிகவும் ஆவலாய் இருக்கிறார்.

உடனே கிளம்பி என்னுடன் வரவேண்டும் நீங்கள்," என்றார் அமைச்சர்.

பண்டிதர் புன்னகைத்தார். "அமைச்சரே! என்னைக் காண வேண்டுமென்றால், அரசனாய் இருந்தாலும் சரி, இங்கேதான் வரவேண்டும்."


"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றார் அமைச்சர் கோபத்துடன்.

"அமைச்சரே விஸ்வநாத பண்டிதர் என்கின்ற தனி மனிதன். மிகவும் சாதாரணமானவன். அவனிடம் இருக்கும் கலையோ அசாதாரணமானது. மிகுந்த சக்தி வாய்ந்தது. நீங்கள் என்னைத் தேடிக்கொண்டா வந்தீர்கள்? என்னிடமுள்ள கலையை அல்லவா தேடி வந்திருக்கிறீர்கள். ஆகையால் அந்தக் கலைக்கு மதிப்புத் தருகிறவர்களுக்கே இங்கே மதிப்புக் கொடுக்கப்படும். உங்கள் மன்னரும் இந்தக் கலையை மதிப்பவராயிருந்தால் தாராளமாய் இங்கே வந்து பார்க்கட்டுமே," என்று கூறினார் பண்டிதர்.

அமைச்சர் குழாம் திரும்பி வந்து நடந்தவற்றை மன்னனிடம் கூறினார்கள்.

"என்ன அப்படியா சொன்னார்?" மன்னன் முகம் சிவக்க கோபமாய் சத்தமிட்டான். உடனே சமாதானம் அடைந்தான் மன்னன்.

"சரி சரி அவர் வழியே போய்ப் பார்ப்போம். உடனே ரதம் தயாராகட்டும்" என்று கிளம்பினான்.



பரிவாரங்களுடன் மன்னன் கிராமத்தை அடைந்து பண்டிதரின் வீட்டின் முன் இறங்கினான்.

"வாருங்கள் மன்னரே! வாருங்கள்," என்று பண்டிதர் முகம் மலர வரவேற்றார். "உட்காருங்கள்" என்று எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டி விட்டு தானும் அமர்ந்தார்.

"என் கையைப் பார்த்து பலனைச் சொல்லுங்கள். மிகச் சரியாகக் கணித்துச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் நான் தருகின்ற தண்டனையை அனுபவிக்க வேண்டும்," என்றான் மன்னன்.

புன்னகையுடன், "எங்கே, கையைக் காட்டுங்கள்" என்றார் பண்டிதர். மன்னரின் கையை பார்த்தார் அவர். பார்வையைக் கூர்மையாக்கினார். அவர் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறியது.

"என்ன பண்டிதரே என்ன விஷயம்" என்று மன்னன் கேட்டார்.

"இந்தக் கையில்..." பண்டிதர் தயங்கினார்.


"சொல்லுங்கள் என்ன?"

"இந்தக் கை அரசாள்கிற கையே அல்ல. அரச குடும்பத்தினரிடம் கை நீட்டி சம்பளம் வாங்கும் கை, மாதாமாதம் வருமானம் பெற்று வாழ்க்கை நடத்துகிற குடும்பஸ்தன் கை," என்று மன்னனைப் பார்த்தார்.

அங்கு நின்றுகொண்டிருந்த படை வீரர்களிடமிருந்து ஒருவன் முன்னேறி வந்து தன் மாறுவேடத்தைக் களைந்தான்.

அவன்தான் உண்மையான மன்னன். பண்டிதரின் புலமையை அறிய தன் படை வீரர்களில் ஒருவனுக்கு தன்னைப்போல் வேடமிட்டு நடிக்க வைத்திருந்தான் அவன். மிகச் சரியாகக் கணித்துக் கூறிய பண்டிதரின் கால்களில் விழுந்து வணங்கினான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.08.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 54
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 51

**பரிசுக்குரியவர்**
ஜெ.துஷிந்ரா
இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி
கொழும்பு-04.

**பாராட்டுக்குரியவர்கள்**

டி.செலித் ராணி-அட்டன்.

ஷாஃபியா பேகம்-கல்கிசை

எஸ்.சுரேந்திரன்
ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம்-உடப்பு.

பி.திரிஸ்கரன்
புனித மிக்கேல் கல்லூரி-மட்டக்களப்பு.

மா.சசீகரன்
சென்ஜோசப் கல்லூரி-திருகோணமலை.

ஜே.எம்.சாதிக் ஹுசைன்
அல்-மனார்.ம.வித்தியாலயம்-ஹந்தெஸ்ஸ.

பி.எஸ்.பெருமாள்
தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயம்
ருவான்வெல்ல.

செல்வி.வத்சலா யோகராசா
ஸ்ரீ சண்முக வித்தியாலயம்-திருகோணமலை.

எம்.ஸி.எஃப்.முர்சிதா
பேருவலை.

எம்.எல்.ஷாமீஸ்
புனித சில்வஸ்டர் கல்லூரி-கண்டி.

செல்வி.கு.சுதாசினி-கொழும்பு-06.

ஆர்.கலா-இரத்தினபுரி போஸ்ட்.

## அறிவோம் மனதில் பதிவோம்



இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தின் பெயர் 'அசாரே'. இங்கு 1894ம் ஆண்டில் (100 ஆண்டுகளுக்கு முன்பு) துவக்கப்பட்ட நூலகம் இன்றும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இங்கு 10 ஆயிரத்திற்கும் அதிகமான பல அரிய புத்தகங்கள் உள்ளன.



அமெரிக்காவில் 1949ம் ஆண்டு 'ரஸ்டி' என்ற பூனை பொஸ்டனில் இருந்து சிக்காகோவிற்கு நடந்தே சென்றது. அதனைச் செல்லப் பிராணியாக் வளர்த்தவர் சிக்காகோவிற்குச் சென்றுவிட்டார். அவரைத் தொடர்ந்து 83 நாட்களில் அது அங்கு சென்றுவிட்டது.



இங்கிலாந்தில் 1831ம் அண்டு மான்செஸ்டரில் ஒரு பாலத்தின்மீது இராணுவ வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். 'தொப் தொப்' என அவர்கள் 'மார்ச்' செய்து நடந்ததில் அந்தப்பாலம் இடிந்து விழுந்தது. அதிலிருந்து உலகில் எந்த இராணுவத்தினரும் பாலத்தைக் கடக்கும்போது 'மார்ச்' செய்வதில்லை.

## அறிமுகமும் தொகுப்பும்

- நாட்களை கணிக்கும் கலண்டர் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்?
  **13ம் கிறகறி பாப்பரசர்**
- சிங்கள அகராதியை முதன் முதல் தொகுத்தவர் யார்?
  **சோரட்ட தேரோ**
- ஆங்கில அகராதியை முதன் முதல் தொகுத்தவர் யார்?
  **சாமுவேல் ஜோன்சன்.**
- நில அளவைக் கருவியின் பெயர் யாது?
  **தியடோலைற்.**
- சுருக்கெழுத்து முறையை உலகிற்கு அறிமுகப் படுத்தியவர் யார்?
  **சேர்.ஐசாக் பிற்மன்**
- ஹோமியோபதி வைத்திய முறையை அறிமுகப் படுத்தியவர் யார்?
  **டாக்டர் ஹனேமான்.**

கந்தப்பெருமாள்-நிமலதாசன்-மட்/மாங்காடு.

## விடுகதைகளும் விடைகளும்


1. வற்றாத ஊற்றிலே குடிக்க தண்ணீர் கிடையாது. அது என்ன?
2. சமையலுக்கு உதவுவான் கரண்டியும் அல்ல, சண்டைக்கு உதவுவான் வாளும் அல்ல. அது என்ன?
3. உலகிற்கே ஒரே பந்தல். அது என்ன?
4. தரையில் முட்டிவிடும் விரலில் ஒட்டிடும். அது என்ன?
5. அடி காட்டில் நடுமாட்டில் நுனி வீட்டில். அது என்ன?
6. வெளிச்சம் போட்டு செத்தான். அது என்ன?

**விடைகள்**

1. கடல் 2. கத்தி 3. வானம்
4. கால் மெட்டி 5. நெல் 6. தீக்குச்சி

எஸ்.சத்தியவதனி-நல்லாயன் மகளிர் கல்லூரி.

## இரண்டாவது பெரிய சிகரம்




- உலகின் இரண்டாவது பெரிய சிகரம் எது?
  எவரொஸ்ட் சிகரத்திற்கு அடுத்தபடியாக உள்ளது கே2 (K2)எனப்படும் சிகரம். இதன் மற்றொரு பெயர் கொட்வின் ஆஸ்டன். இதன் உயரம் 8616 மீற்றர் ஆகும்.
- கே2 சிகரம் எங்கே உள்ளது?
  இமையமலை தொடர்ச்சியில் காராகோரம் மலைத் தொடரில் அமைந்துள்ளது.
- இதற்கு எவ்வாறு இரண்டு பெயர்கள் வந்தது?
  இந்தச் சிகரத்தை முதன் முதலில் 1850ம் ஆண்டு அளந்து ஆராய்ச்சி செய்தவர் ஹென்றி கொட்வின் ஆஸ்டன், அவரது நினைவாகவே இந்தப் பெயர் வைக்கப்பட்டது. ஆஸ்டன், இந்த சிகரத்திற்கு வைத்த பெயர் கே2 (K2) இதன் மற்றொரு பெயர் தப்சங்.
- இந்தச் சிகரத்தின் உச்சிக்கு முதன் முதலில் ஏறிய மனிதர் யார்?
  எவரெஸ்டை விடவும் இதில் ஏறுவதுகடினம். 1954ம் ஆண்டு இத்தாலியைச் சேர்ந்த ஆர்டிரோ தேசியோ என்பவரது தலைமையில் சென்ற மலையேறும் குழு கே2 (K2)வின் உச்சியில் ஏறிச் சாதனை புரிந்தது.
- உலகின் மூன்றாவது உயரமான சிகரம் எது?
  கஞ்சன்ஜுங்கா. 8598 மீற்றர் உயரமுடையது.

## மூன்றில் பதினெட்டு

1. முத்தமிழ்- இயல், இசை, கூத்து.
2. முக்கொடி- விற்கொடி, புலிக்கொடி, மீன்கொடி.
3. மும்முரசு- வெற்றி முரசு, கோழை முரசு, மங்கள முரசு.
4. மும்மலை- கொல்லி மலை, நேரிமலை, பொதிகை மலை.
5. முந்நதி- பொருகை நதி, காவிரி நதி, வைகை நதி.
6. முப்பதி- கருவூர், உறையூர், மதுரை.
7. முந்நாடு- குடாநாடு, புன்னாடு, தென்நாடு.
8. மும்மா-கனவட்டம், பாடலம், கோரம்.
9. முப்பிறப்பு-உம்மை, இம்மை, மறுமை.
10. முப்பொறி- மனம், வாக்கு, காயம்.
11. முக்காலம்-நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம்.
12. முத்தொழில்-படைத்தல், காத்தல், அழித்தல்.
13. முக்குற்றம்- காமம், வெகுளி, மயக்கம்.
14. முச்சுடர்- நிலவு, தீ, ஞாயிறு.
15. முக்குணம்- சாத்துவிகம், இராசதம், தாமதம்.
16. முக்கனி- மா, பலா, வாழை.
17. மூவிடம்- தன்மை, முன்னிலை, படர்க்கை.
18. மூவுலகம்- பூமி, அந்தரம், சொர்க்கம்.

## கவிதைக் கதை

# தேர்தல் காலத்துக் காதல்......

-எம்-சுரேஷ்-



இளமை விசிலடித்தது.
கல் கடுக்க நின்று
அவளைப் பார்த்தாலும்
பேசக் கிடைக்காத
இளமைச் சோகம்.

[illegible] ஒரு
மகளிர் கல்லூரி.
ஒரே நேரம்
ஒரே பாதை
ஒரே பஸ்..

பெயர் '[illegible]'
அப்பன் அரசியல்வாதி
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ஒரு பயம்!

[illegible] என்ன செய்ய....?
பாவி மனம் கேட்குதில்லை—
கொழுப்பெடுத்த என் விழிகள்
அவளின்றி தூங்குதில்லை.

எல்லாம் பிரச்சினை.
அரசியலும் பிரச்சினை.
அரசியல்வாதிக்கு அம்சமாய்
மகள் பிறந்தால்
அதுவுமெல்லோ பிரச்சினை!

குரங்கு பெற்ற தேவதையோ
குலை தள்ளி வலம் வர
அரிப்பெடுத்த என் தலையை
சொறிந்து கொண்டே சுற்றி
வந்தேன்.

அழகான கண்கள்
அம்சமான இதழ்கள்
போஸ்டர் ஒட்டாத
[illegible]
[illegible]
[illegible]

பேசிய போதெல்லாம்
சூடான பதில்.
பேசாத போதும்கூட
எரிமலையாய் முகம்.

இருந்தாலும்
ஆசை விடுதில்லையே!

துரத்தித் துரத்திச்
செருப்புத் தேய்ந்து
இப்போ—
கால் தேயும் கட்டம்.

நான் பார்த்ததும்
அவள் வழமைபோல் செய்தாள்..
'அடியே
காறித் துப்புவதை
மெதுவாகத் துப்பு.
உன் வாய்வழியே
என் இதயம்
வெளியே வந்தாலும்,
வந்துவிடும்!'
சொன்னேன். கேட்டால்தானே?

காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போனாலும்
தோதல் வந்தது...
ஆகா! அருமையான சந்தர்ப்பம்.

அவள் இதயத்திற்கு—நான்
வேட்டு வைக்காவிடினும்
வோட்டு வைத்திருக்கிறேன்.
அப்பன்
அரசியல்வாதியாயிற்றே...?

தைரியம் என்னை
தாறுமாறாய் ஊக்குவிக்க
வீர நடை நடந்து
அருகில் சென்றேன்
'கண்ணே' என்றேன்
முறைப்போடு திரும்பினாள்.
'அப்பா போட்டியிடுகிறாரா?'
என்றேன்.
முறைப்பை விடுத்து
'ஆம்' சொன்னாள்.
சிரித்தேன். சிரிக்கவில்லை.

யோசித்தேன்—
'[illegible] சின்னத்தில்
போட்டியிடும்
உன் அப்பனுக்குத்தான்
என் வோட்டு' என்றேன்.
அவ்வளவுதான்!
காறித்துப்பும் வாயால்
மிக அழகாய் புன்னகைத்து,
லேசாய் சிரித்துச் செவ்விதழ்
திறந்து சொன்னாள்
'ஹி...ஹி...ஹி..
எனக்குத் தெரியும்
நீங்கள் ரொம்ப நல்லவர்!'



## வாழ்க்கை வாடகைக்கு உண்டு

அது..
சூரியன் அஸ்தமிக்காத
சுதந்திர
வலயம்..
அமாவாசைகள்
அண்மிக்காத
பௌர்ணமி தேசம்...

□

சப்தம் வற்றிப் போய்விட்ட
சஹாராக்களுக்குள்
உன் பெயரை
உரக்கக் கத்துகிறேன்.
உன்
ஒரு தூர—
இடைவெளியில்கூட
நான்
தூர்ந்து போய்விடுவேன்.
இந்த ஒளிவருட
தூரங்களில்
நீ உட்கார்ந்திருப்பதை
எப்படி—
நான்
ஒத்துக்கொள்வது...?

□

உன் விலகலினால்
தனிமை(த்)
தடங்களுக்குள்
தடுக்கி விழும்போதெல்லாம்
உன் பெயரை
உச்சரிப்பதால்
நான்
உயிர்தெழுகிறேன்.

□

அநாமிகா என்றே
அடித்துக்கொள்ளும்
என்
இதயத் துடிப்புகளின்
இடைவெளியில்
வெறுமைச் சோகங்கள்
வெறிச்சோடிக் கிடக்கும்.

□

என் காதலின்
ஒவ்வொரு அத்தியாயமும்
கண்ணீரால்
கழுவப்படுவதால்
வாழ்க்கை
ஈரமாய்..
வெறுமையாய்....
வாடகைக்காய்...
காத்துக் கிடக்கிறது.

(அநாமிகா) சுதாசேகர்
பொத்துவில்.

## இருப்பு

கால்கள்
உடைந்ததான கனவுகள்
கண்ணீர் பைகளை
சுமந்தவாறே
இந்த ஒட்டகம்
தள்ளாடித் தள்ளாடி..

•

வாழ்க்கைத் தரையில்
வழுக்கி விழுவதான
ப்ரேமை!
விழிகள் மூடினால்
பிரபஞ்சம் சுருங்கி
பின் சிதறி விழும்.

•

போலித்தனமான
புன்னகைக்குள்,
நட்பின் உதடுகள்
நசிபட்டுக்கிடக்கும்

•

ஈரம் வற்றாத
இரத்த விழிகளும்
காயம் ஆறாத
காதல் நிகழ்வுகளும்
கசக்கிப் பிழிவதைப்போல்
ஒரு கனவு..!

•

அப்படியே
நான் வெடித்துச் சிதறி
ஒரு ரோஜாவின்
அடியில்—
முட்களாய் முளைத்தாலென்ன..?

•

ரணங்கள்—
என்—
இனிமையின் இடுப்பில்
ஸ்திரமாய் வசிக்கலாம்
துகிலுரிக்கப்பட்ட—
என் தூரத்து நினைவுகள்
அதில்—
கருகியும் விடலாம்
அதனாலென்ன
நான் அழவா முடியும்..?
அவள்—
மனத் தூளியில்
ஒரு சிசுவாய் ஆடுமட்டும்.

ஒட்டமாவடி-அறபாத்.

### நிலா

கவிஞனுக்கு.
கருகொடுக்கும்
கலியுகத்து
அழகிய
வான் மாது

•

### நட்சத்திரம்

திகைக்க வைத்து
விடிவுக்காய்
கண் சிமிட்டும்
விண்ணுலக
முத்துக்கள்

•

### நினைவு

பிரிந்ததால்
தினம்...!
அழுகிறேன்
அவள்
நினைவோடு

•

-ரைஷ்தீன்-

# தேன் கிண்ணம்





## நெருப்பு தேசம்

நரகத்திலிருந்து
நகர்ந்துபோன,
நண்பனுக்கு!
கொடூரத்தின்
உணர்வு உணர்ந்து
உள்ளம் வெந்துபோன
நிகழ்வுகளின்
வயது—நான்கு
இல்லையா?

மரணித்த
பருவகால நிஜங்களின்
நினைவுகளெல்லாம்
மீண்டு,
நெஞ்சத்துள்—குமிழி குமிழியாய்
சந்தோசப் பூக்கள்.
கூடவே,
நம் தேசத்து வடுக்கள்.

நண்பர்கள் நால்வரும்
நீ, நான், முரளி, ராஜனுமாய்
எண்பத்தோன்பதனில்
தங்கியிருந்த விடுதி
மதில் பாய்ந்து
அண்டியிருந்த
ஆச்சி வீட்டருகே
குலையாய் கொழுத்திருந்த
வாழை பார்த்து வாயூறி,
அன்றிரவே, அதை 'அபேஸ்'
பண்ணிய நாட்கள்!

பரீட்சை வருகிறது
சரி, படிப்போமென்று
மூவரும் முழித்திருந்து
தூங்க—நீ மட்டும்
குறட்டை விட்ட
இராக்கள்.

ஓரிரவு,
எல்லோரும் உறங்கியிருக்க
நீ, திடீரென
"கள்ளன்....கள்ளன்" என்றலறு
திடுக்குற்று விழித்தெழுந்து
நாம் கம்பு தடி தூக்கி
நாற்திசையில் சிதறியோட
அப்போதும்—நீ
சயனத்திலிருக்க,
அட... கனவில்தான் கத்தியுள்ளாய்
என்றுணர்ந்தபோது
செமத்தியாய் நீ வாங்கிய
தர்ம அடிகள்.

இவையெல்லாம்
ஞாபகமா? நண்பனே!
எவற்றை நினைக்காதிருந்தாலும்
தூக்கிய கண்ணாடி
தவறியபோது சிலீரென்ற
ஓசையில் சிதறியதுபோல்,
நம் சந்தோசங்களும்
சிதறியதே—ஒருநாள்
அந்தப் 'பிரச்சனை'
விஸ்வரூபமெடுத்த நாள்!
அன்றைய நிகழ்வை
நினைக்காதிருக்க முடிகிறதா
உன்னால்....?

அன்று,
நால்வரில் ஒருவனை—
நம் ராஜனை,
பலிகொடுத்தபோதுதான்
கொடுமையின் உக்கிரம்
உணர்ந்தோம்... இல்லையா?

அன்றே,
மலரைத் தென்றல்
பிரிந்த கணநேரத்தில்
மலரும் உதிர்ந்து—விட்டுப்போன
உறவுடன் தொட்டுச் சேர்ந்ததே
அந்தச் சூடு - மனசுள்
விட்டுப் போகுமா நண்பனே......?

சகலதும் நெஞ்சத்துள்
வடுக்களாக,
நம்மின ஒற்றுமையின்
பரிசுகளாய்—இன்று
நான்—அகதிமுகாமில்.....
நீ—கொழும்பில்___
முரளி—சுவிஸில்_
ராஜன்—மயானத்தில்.....
பார்த்தாயா நண்பனே....?
நம் சந்தோசங்கள் மட்டும்
சிதறவில்லை நம் சமூகம்
நம் கலாசாரம்
எல்லாமே சிதறிவிட்டன.

இருக்கட்டும் நண்பனே,
நம் சந்தோசங்களை
நம் சமூகத்திற்காகவே
தியாகம் செய்து விடுவோம்.
ஆனாலும்,
ஒன்று மட்டும் புரியவில்லை!

சிதறியவைகளை
ஒட்டும் முயற்சியில்
நம்மவர்கள்—எந்த மொழி
பேசுவார்கள்?
ஆங்கில மொழியா?
அடக்குமுறை மொழியா?
புரட்சி மொழியா?
துரோக மொழியா?—இல்லை
பரம்பரை பரம்பரையாய்
பழகிப்போன
மௌன மொழியா?

—அன்புடன் நான்—

ஸ்ரீவாணி-வாழையூர்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(21.08.94 முதல் 27.08.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன் |
| கன்னி | - சுக்கிரன் |
| துலாம் | - இராகு, வியாழன் |
| மகரம் | - சனி |
| மேடம் | - கேது |
| மிதுனம் | - செவ்வாய் |

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- செய்தொழில் நன்மை, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கேடு, மனச் சஞ்சலம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- மனஅமைதியின்மை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பணவரவு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- தனலாபம், உயர்ந்தநிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் சகவாசம், கௌரவம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- அந்நியரால் தொல்லை, கவலை மிகுதி. | காலை 7 மணி |
| சனி- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | காலை 10 மணி |
| திங்கள்- தொழில் பலிதம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- பொருளாதார முன்னேற்றம், மனக்கவலை நீங்கும். | பி.ப 2 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| சனி- கடன் படல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, வரவுக்கு மிஞ்சிய செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- காரியானுகூலம், உயர்ந்த நிலை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- வீண் விரயம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப 2 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்தநிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, தனலாபம். | பி.ப 3 மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் பகை, பணச்செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- கடன்பயம், மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் சகவாசம், மன நிம்மதி. | காலை 8 மணி |
| புதன்- துயர் நீங்கும், தெய்வானுகூலம். | காலை 9 மணி |
| வியாழன்- மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | பகல் 11 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| சனி- செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், குடும்ப நன்மை. | பி.ப 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணத்தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- வீண் குறைகேட்டல், கௌரவக் குறைவு. | பி.ப 4 மணி |
| புதன்- பணவரவு, தொழில் சித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- மனப்பயம், அந்நியர் உதவி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- உயர்ந்தநிலை, தெய்வ நம்பிக்கை. | காலை 8 மணி |
| சனி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பணவரவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, முயற்சித்தடை. | காலை 8 மணி |
| புதன்- வெளியிட பயணம், குடும்பக் கலகம். | பகல் 12 மணி |
| வியாழன்- தெய்வ நம்பிக்கை, பணத்தடை. | காலை 8 மணி |
| வெள்ளி- மனக்கிலேசம், பிள்ளைகளால் கஷ்டம். | பகல் 11 மணி |
| சனி- செலவு மிகுதி, தொழில்நிலை உயர்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகவாசம், கௌரவநிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனப் பயம். | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 8 மணி |
| புதன்- தொழில் நிலை உயர்ச்சி, கௌரவம். | பி.ப 1 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- அதிகார விருத்தி, பொருள்வரவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- குடும்ப நன்மை, மனச் சந்தோஷம். | காலை 7 மணி |
| வியாழன்- பொருள்வரவு, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மனச்சந்தோஷம். | காலை 8 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணத்தடை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, பணச் சிக்கல். | பி.ப 3 மணி |
| திங்கள்- கௌரவம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, பெரியோர் நட்பு. | பி.ப 1 மணி |
| புதன்- வீண் துயர் நீங்கும், குடும்ப நன்மை. | காலை 8 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், கௌரவக் கேடு. | பி.ப 2 மணி |
| சனி- செலவு மிகுதி, முயற்சித்தடை. | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் சகவாசம், காரியசித்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, தெய்வானுகூலம். | காலை 8 மணி |
| வியாழன்- மனஉறுதி, வாக்கு வசீகரம். | பகல் 12 மணி |
| வெள்ளி- பதவி மாற்றம், பணச்சிக்கல். | காலை 8 மணி |
| சனி- இடமாற்றம், செலவு மிகுதி. | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி. மனப்பயம் நீங்கும். | பகல் 11 மணி |
| திங்கள்- வீண்குறை நீங்கும், பெரியோர் உதவி. | காலை 8 மணி |
| செவ்வாய்- தனலாபம், செய்தொழில் மேன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- தேகசுகம் பாதிப்பு, மனப்பயம். | காலை 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, குடும்பச் சிறப்பு. | காலை 9 மணி |
| சனி- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், இலக்கம்- 1

# மருத்துவ விந்தைகள்



வயிற்றினுள்ளே கத்தரிக்கோல் இருந்தபோது எடுக்கப்பட்ட எக்ஸ்ரே படம்.

## வயிற்றின் பின்னால் இருப்பது என்ன?

## ஒன்றல்ல—இரண்டு கத்தரிக்கோல்!

மரியா குறாஸ் குடலிறக்க நோய் கண்டு துடியாத் துடித்தாள். பிரேஸில் நாட்டிலுள்ள சஓ பௌலா நகரிலுள்ள ஃபிராங்கோ ரோச்சா மருத்துவமனையில், 1991 ஜுன் 24ல் சத்திர சிகிச்சை நடைபெற்றது. ஆனால் சிகிச்சையின் பின்னர் குடலிறக்க நோயினால் (ஹேர்னியா) முன்னர் பட்ட வேதனையைவிட பன் மடங்கு வேதனையால் மரியா துடித்தாள்.


மருத்துவமனையிலிருந்து- சத்திரசிகிச்சைக் காயம் பூரணமாகக் குணமாகிவிட்டது. வீடு செல்லலாம் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஆனால் "வலி குறையவில்லையே?" என்று மரியா கூறியபோது. வீட்டில் நடந்து திரிந்தால் நாளடைவில் வலி நின்றுவிடும் என்றனர். அவர்கள் வார்த்தைகளை நம்பி வீடு திரும்பியவளால் ஓரடிகூட எடுத்து நடக்க முடியவில்லை.

சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்களை நாடிச் சென்று தானே மருத்துவத்தைத் தொடர வேண்டும்! அதே மருத்துவமனைக்கு பலமுறை சென்றாள். வலி தீர்க்கும் மருந்துகளையும் தூக்க மாத்திரைகளையுமே மருத்துவர்கள் கொடுத்தனர்.

இவ்வாறு இரண்டு வருடங்களாக நரக வேதனையில் துடித்தாள் மரியா. இறுதியாக அவளுக்கு உண்மையில் நோய் கிடையாது என்றும் மன நோய்தான் என்றும் மனோதத்துவ நிபுணரைப் பார்க்கும்படியும் மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்தனர்.

மனோதத்துவ நிபுணராலும் உண்மையினைக் கண்டுபிடிக்க முடியவில்லை. படுக்கையை விட்டு எழவோ எந்த உணவையோ உண்ண முடியாமல் பெரும் துன்பமடைந்த மரியாவை ஜுண்டியா நகரிலுள்ள பௌலோ சக்கரமன்ரோ மருத்துவமனைக்கு மரியா வின் கணவர் அழைத்துச்சென்றார். அங்கு எக்ஸ்ரே படம் பிடிக்கப்பட்டபோது, சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கத்தரிக்கோல் ஒன்று வயிற்றினுள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. உடனடியாக சத்திர கிச்சை மேற்கொள்ளப்பட்டது.

எக்ஸ்ரேயில் ஒரேயொரு கத்தரிக்கோல் மட்டுமே தெரிந்தது. ஆனால் அதன்மேல் மற்றுமொரு கத்தரிக்கோலும் ஒட்டியிருந்ததை எக்ஸ்ரே படம் காட்டவில்லை. எனினும் இரு கத்தரிக்கோல்களையும் மருத்துவர் வெளியே எடுத்துவிட்டார். இப்பொழுது உபாதை எதுவுமில்லாமல் மரியா குறாஸ் இருக்கிறார். ஏற்கனவே கத்தரிக்கோல்களை வயிற்றினுள் வைத்துத் தைத்த மருத்துவர்களையும் மருத்துவ மனையையும் நீதிமன்றத்தில் ஏற்றுவதற்கு கணவனும் மனைவியும் திட்டமிட்டுள்ளனர்.



வயிற்றுக்குள்ளிருந்து எடுக்கப்பட்ட கத்தரிக்கோல்

## நீரிழிவின் அறிகுறி—கண்ணிலே தெரியும்!

ஒருவருக்கு நீரிழிவு உண்டா? அவ்வாறானால் அதன் அளவுப் பரிமாணம் என்ன என்பதனை அந்நபரின் கண்களைப் பார்த்தே கண்டு பிடித்துவிட முடியும். இரத்தப் பரிசோதனையோ சிறுநீர்ப் பரிசோதனையோ செய்ய வேண்டியதில்லை. நீல ஒளிக் கதிரை கண்ணில் பாய்ச்சும் ஒரு கருவி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஒளியை கண்களில் பாய்ச்சினால் போதும். கண்மணியில் ஏற்படும் நிற மாற்றங்களைக்கொண்டே அந்நபருடைய இரத்தத்திலுள்ள சீனியின் அளவினைக் கண்டு பிடித்துவிட முடியும்.

நீரிழிவினால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானோருக்கு கண்களில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால் இதனை இலகுவில் கண்டுபிடிக்க முடிவதில்லை. கண் பார்வையில் படிப்படியாகக் கோளாறுகள் தோன்றிய பின்னர் தான், இதற்குக் காரணம் நீரிழிவு என்று அறியப்படுகிறது. நீரிழிவினால் கண் பாதிப்பு ஏற்படுகிறது என்று அறியாமல் கண்ணுக்கு வேறு வகை மருத்துவங்களைச் செய்யத் துவங்கினால், இதனால் கண் பார்வையினையே இழக்கவேண்டி ஏற்படலாம்.

நாம் உண்ணும் உணவு சக்தியாக மாறி உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சென்றடைய உதவுவது 'இன்சுலின்' என்ற திரவம். கணயம் என்னும் சுரப்பியே இன்சுலினைச் சுரக்கிறது. சரியான காரணமின்றி இக்கணயம் இன்சுலின் சுரப்பதைக் குறைக்கிறது- அல்லது அடியோடு நிறுத்திவிடுகிறது. இதனால் உண்ணும் உணவு சக்தியாக மாற்றமடையாமல் குளுக்கோஸ் நிலையிலேயே இரத்தத்தில் கலந்து விடுகிறது. சிறுநீருடன் குளுக்கோஸ் வெளியேறுவதனால் உடல்நிலை பல வகையிலும் பாதிப்புக்குள்ளாகி விடுகிறது.



இந்நிலையில் பாதிப்புக்குள்ளானவர் இலகுவில் தொற்று நோய்களுக்கு இடம் தருகிறார். உடல் மெலிந்து சோர்வு அதிகரித்து விடும். சிறு காயங்கள்கூட ஆற முடியாமல் உறுப்புகளை அகற்றிவிட வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

இவ்வாறு இரத்தத்துடன் சேரும் குளுக்கோஸ் கண்களையும் பாதிப்படைய வைப்பதனால் அதே கண்களைப் பரிசோதிப்பதன் மூலமே குளுக்கோஸ் விரயமாகும் அளவினைக் கண்டுபிடித்து விடலாம் என்று கருதிய ஆய்வாளர்கள் இதற்கென புதிய முறை ஒன்றினைக் கண்டறிந்துள்ளனர். பொஸ்டன் நகரிலுள்ள ஜொஸ்லின் நீரிழிவு மையத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்வென்-எரிக் பேர்சல் என்பவர் புதிதாக ஒரு கருவியை வடிவமைத்துள்ளார். இதன்மூலம் நீல வர்ண ஒளிக்கதிர் கண்மணி மீது பாய்ச்சப்படுகிறது. கண்ணில் உள்ள குளுக்கோசின் அளவுக்கேற்ப கண்மணியில் நிற பேதங்கள் காணப்படும். இதனைக் கொண்டே இரத்தத்தில் சீனி எந்த அளவில் உள்ளது என்பதனைக் கண்டறிந்து அதற்கேற்ற சிகிச்சையினை தொடங்க முடியும்.

சீனியின் அளவைக் கண்டறிய-தற்போது இரத்தப் பரிசோதனை மற்றும் சிறுநீர்ப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இவற்றினால் வீண் கால தாமதமும் பொருட் செலவும் ஏற்படுகிறது. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கருவி மூலம் பரிசோதனை செய்வது மிகவும் சுலபம். கருவியும் கைக்கடக்கமாக இருப்பதனால் எங்கும் இதனை எடுத்துச்செல்ல முடியும். கண்களுக்கும் உடனடி மருத்துவம் செய்தோ அல்லது சத்திரசிகிச்சை செய்தோ, பார்வையற்றுப்போவதையும் தவிர்க்கலாம்.

இக்கருவியினைப் பயன்படுத்துவதற்கான அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் நிர்வாக நிறுவனத்தின் அங்கீகாரம் பெறுவதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. இவ்வருட முடிவிற்குள் இந்தக்கருவி சந்தைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மைக்கல் ஜாக்சன்

## மைக்கல் + லிசா திருமணம்

## பொப்பிசை மன்னனின் காதல்

நியூயோர்க் நகரில் பல வானளாவிய கட்டிடங்கள். அதில் ஒன்று 'ட்றம்ப் ரவர்' எனும் கோபுரம். இதில் 65வது மாடியில் நான்கு படுக்கை அறைகளைக்கொண்ட- நவீன வசதிகளத்தனையும் கொண்ட இல்லம்.

இதுதான் மைக்கல் ஜாக்சன்- லிசா மாரி தம்பதி குடியேறியுள்ள காதல் மாளிகை.

கடந்த வருடம் சிறுவன் ஒருவனுடன் பாலியல் தொடர்பு கொண்டிருந்தார் பொப்பிசை மன்னரான மைக்கல் ஜாக்சன் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். இந்தப் பிரச்சனையில் பல இலட்சக்கணக்கான டொலர்களை ஜாக்சன் இழந்தார்.

தனது இன்னிசையால் உலகை மயக்கிய எல்விஸ் பிறெஸ்லியின் ஒரே மகள் லிசா மாரி. 26 வயதான லிசா, டனி கியோக் என்ற இசைக் கலைஞரை திருமணம் முடித்திருந்தாள். டனிலீ என்ற 5வயது மகளும் பெஞ்சமின் ஸ்ரோம் எனும் 21 மாத மகனும் இவர்களுடைய குழந்தைகள். டனியை விவாகரத்துச் செய்துவிட்டு 35 வயதான மைக்கல் ஜாக்சனை மறுமணம் புரிந்து கொண்டாள்.

தன்னை அலங்கரிப்பதிலோ, அளவான - அழகான உடைகளை அணிவதிலோ எந்தவித அவாவும் கொள்ளாத லிசா தன் முதல் கணவனான டனியை விட்டுப் பிரிந்ததும் திடீரென அலங்காரங்களை அணைக்கலானார். கவர்ச்சியான ஆடைகளை அணிய ஆரம்பித்தார். இதனால் இவளுடைய சினேகிதிகள் பலருக்குச் சந்தேகம் எழுந்த போதிலும் ஜாக்சனை இவர் மணம் முடிக்கப் போகிறார் என்று எவருமே சந்தேகிக்கவில்லை.

கடந்த ஏப்ரலில் டொமினிக்கன் குடியரசில் இவர்களுடைய திருமணம் நடைபெறவிருந்தது. அங்கு அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டமையினால் ஒத்தி வைக்கப்பட்டு மே 26ல் திருமணம் நிகழ்ந்தது. இருவருக்குமே புரியாத ஸ்பானிய மொழியிலேயே திருமண ஒப்பந்த வாக்குறுதிகள்- மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடன்- கூறப்பட்டுள்ளன. இந்த வைபவத்தில் தேவாலய ஊழியர்கள், இரு சாட்சிகள் மற்றும் ஜாக்சனின் மெய்க் காவலர்கள் இருவர் ஆகியோரே- மதச் சடங்கை நடத்திய இரு மத குருமாருடன் கலந்து கொண்டனர்.

தகவல் தொடர்பாடலாளர்களிடமிருந்து ஒதுங்கியிருப்பதற்காகவே இத்தகைய 'குசுகுசு' நிலையில் திருமணம்- வேற்று நாட்டில் நடந்திருக்கவேண்டுமென்று கருதப் படுகிறது.

கடந்த ஜுன் மாதம் முதல் 'ட்றாம்ப் ரவர்' மாளிகையின் இல்லத்தை ஜாக்சன் வாடகைக்கு அமர்த்தியிருந்தார். இதற்கான மாத வாடகை 110,00 அமெ.டொலராகும். (இலங்கை நாணயப்படி 110,000 × ரூபா49.00) கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.!



லிசா

கடந்த ஜுலை இரண்டாவது வாரத்தில்தான் இந்த காதல் மாளிகைக்கு புதுமணத் தம்பதியினர் குடி புகுந்தனர். ஜுலை 8ம் திகதியன்று டிக் ஸிம்மொர்மான் என்ற புகைப்படக் கலைஞரை தனது இல்லத்துக்கு அழைத்த லிசா, முதன் முதலில் கவர்ச்சியான வெண்ணிற ஆடைகளை அணிந்து படங்கள் எடுத்துக்கொண்டார். அப்போதுகூட லிசா- ஜாக்சனை மணம் முடித்தமையினால்- தன் கணவனுக்காக புதுப்புது அலங்காரங்களைச் செய்கிறார் என்ற உண்மை அந்தப் படப் பிடிப்பாளருக்குக்கூடத் தெரிந்திருக்கவில்லை.

ஜாக்சன் கடந்த வருடம் இந்தியா முதலான கிழக்கு நாடுகளில் இசைக் கச்சேரி நடத்த ஒப்புக் கொண்டிருந்தார்.

ஆனால் சிறுவனை 'கெடுத்த' பிரச்சனை புற்றீசல்



போல் கிளம்பியமையினால் நிகழ்ச்சிகளை நடத்த முடியவில்லை. இருப்பினும் அவரிடம் கோடிக்கணக்கில் பணம் குவிந்திருக்கிறது. கடந்த நவம்பரில் தனது இசைப் பேழை வெளியீட்டுரிமைகளை விற்றதன் மூலம் 7 கோடி டொலர் பெற்றார். லிசா மாரியும் பொருளாதாரத்தில் குறைந்தவரல்ல. அவருடைய இன்றையக் கையிருப்பு 15 கோடி டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

# கொலை விழும் நேரம்



> "போகப் போகத் தெரியும்—இந்தப் பூவின் வாசம் புரியும்—ஒரு ராகம் நெஞ்சினில் விளையும்—சிறு தாளம் அதிலே இணையும்!"
> —கவியரசு கண்ணதாசன்—

## தருவது ரசிகன்

## 27

**ப**சுபதி நிச்சயமாய் செத்துப் போய்விட, பிரசாத்தை காப்பாற்றுவதில் துரிதமாகியது பொலிஸ்.

குலாம்ஷாவின் உத்தரவு பொலிசை துரிதமாக்க, பொலிஸ் பொது மருத்துவ மனையை உலுப்பி எடுக்க,

பிரசாத் அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிரமாய் கவனிக்கப்பட்டுக்கொண்டிருக்க,

பசுபதியின் உடலோடு ஜவாஹரின் உடலும் மருத்துவமனை சவச்சாலையில் பிரேத பரிசோதனையில் கீறிக் கிழிக்கப் பட்டபின் வைக்கப்பட்டிருந்தது.

பசுபதியின் பங்களா முழுவதும் பொலிஸ் வாசனை.

ஒரு இடம்கூட விடாமல் அங்குலம் அங்குலமாக பரிசோதிக்கப்பட்டு, பசுபதியின் அடியாட்கள் அனைவரும் பொலிஸ் அடிகள் மூலம் [illegible] பட்டு, பங்களா கடைசியாக மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டு, வெளியே நாலு பொலிஸ் காவலுக்கு நிறுத்தப்பட்டது.

மருத்துவமனைக்கு வரும்போது கூடவே நிர்மலாவையும் அழைத்து வந்திருந்தார் குலாம்ஷா.

டாக்டரோடு பேசி பிரசாத் உடல்நிலை பற்றி அறிந்துவிட்டு திரும்பிவர ரிசப்சனில் ஐ.ஜி.ஃபோனில் வந்தார்.

"யெஸ் சேர்."

"வெறி குட் குலாம்ஷா. ஆனாலும் வெரிஃபான்ட். இரண்டு உயிர்பலி. வேண்ட். தவிர்த்திருக்கலாம் நீங்கள்."

"முயற்சித்தேன்........ பட்......"

மறுமுனையில் ஐ.ஜி.கனமான குரலில் மறுத்தார்.

"பொய்! எனக்குத் தெரியும். அவர்களுக்கு அதுதான் உங்கள் தண்டனை. சோ... முயற்சிக்கவில்லை. ஓ.கே. ஆனாலும் மேலே நான்தான் பதில்சொல்ல வேண்டும். ஏனெனில் இது நேரடியாக என் பொறுப்பில் உங்களை வைத்து செய்யும் காரியம்."

"ஐ நோ சேர். உங்களுக்கு எந்த தொந்தரவும் வராமல்தான் நான்..."

"ஓ.கே- ஓ.கே- டி.ஐ.ஜி. டென்சிலும் இந்த கேசில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் அவரது வேறு கோணம். இப்போது இரண்டு கோணமும் சேரும் நேரம். சோ... இன்று மாலை நீங்களும் வாருங்கள். டி.ஐ.ஜியும் வரட்டும். கூடிப்பேசி அடுத்த காலை நகர்த்தலாம்."

"எங்கே வர....?"

ஐ.ஜி. சிரித்தார்.

"ஓ... அதைச் சொல்லவில்லையா நான். என் அலுவலகத்திற்கே வாருங்கள். 5 மணிக்கு. ரைட்."

ஐ.ஜி. மறுமுனையில் றிசீவர் சாத்த, குலாம்ஷா யோசனையாய் றிசீவர் வைத்து நிமிர, நிலையில் இருந்தவள்– லிப்ரிக்ஸ் உதட்டுக்காரி– ஒப்புக்காகச் சிரித்தாளா? உண்மையாகவே சிரித்தாளா தெரியவில்லை. சிரித்தாள்.

நிர்மலா சோகமாயும் இல்லாமல், சந்தோசமாயும் இல்லாமல் தெரிந்தாள்.

கேசவனின் தம்பி ராகவன் கொல்லப் பட்டதாக ஜவாஹர் சொன்னது பொய்யா என்று நிர்மலா யோசித்தபோது, குலாம்ஷா வந்து அருகில் அமர்ந்தார்.

"சித்தப்பா பிழைத்துக்கொள்ள 75 சதவீதமான வாய்ப்பு இருக்கிறது நிர்மலா. டாக்டர் சொன்னார்."

குலாம்ஷா பிரசாத் பற்றிச் சொன்னதை காதில் வாங்காதது போல, நிர்மலா,

"மிஸ்டர் குலாம்ஷா! ராகவன் என்று ஒருவர் என்னோடு......"

"உன்னோடு பசுபதி வீட்டுக்கு வந்தார். அவர் இப்போது எங்கே என்பதுதான் உன் அவசரம். என்ன அப்படித்தானே நிர்மலா?"

பலமாய் தலையாட்டி விழிகளில் ஆச்சரியத்தோடு ஆமோதித்தாள் நிர்மலா.

"ராகவன் உயிரோடுதான் இருக்கிறார். ஆனால் இங்கே இல்லை."

புரியாமல் பார்த்தாள்.

"யெஸ். பிரியாவின் பாதுகாப்பில் இருக்கலாம் என்று நினைக்கிறேன்."

"யார் அது பிரி.... பசுபதியின்.."

"மகளேதான்."

"ராகவனை அவள்..."

பொறு என்பதாய் கைகாட்டினார்.

"எல்லாக் கேள்விகளுக்கும் உடனே பதில் கிடைத்துவிடாது நிர்மலா. தேடவேண்டும். தேடலாம். இப்போது வா போகலாம்."

"ராகவனை கொன்றதாக ஜவாஹர்...... பசுபதியிடம்..."

நிர்மலா பொறுமையிழந்து கேட்க, குலாம்ஷா மென்மையாய் சிரித்து,

"ஜவாஹர் ராகவனை சுட்டது மெய். அவனை பிரியாதான் தகுந்த நேரத்தில் காப்பாற்றியிருக்கிறாள். போதுமா? வா...... போகலாம்."

குலாம்ஷாவின் பின்னால் நிர்மலா தளர்வாய் சென்றாள்.

□□

**கா**யத்திரியும், இந்திராவும் ஒருவரை ஒருவர் பார்த்து–திகைத்து–"நீயா?" என்று கோரசாகக் கேட்டுவிட்டு, இருவருமே சில நிமிசம் எதுவும் பேசாமல் மௌனித்து நிற்க,

இடையே நிலவிய நிசப்தத்தை கலைப்பது போல்,

வெளியே இருந்து அறைக்குள் எட்டிப் பார்த்து, இருவரும் நின்ற நிலை புரிந்து உள்ளே வந்து,

"என்ன இந்திரா உனக்கு காயத்திரியை முன்பே தெரியுமா?"

அமைதி உடைய, இருவரும் வினோவை பார்க்க, வினோ இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்து,

"இருவருமே ஏற்கனவே அறிமுகமோ என்று கேட்டேன்."

என்றான் சற்று குரலை உயர்த்தி.

முதலில் பேசியது இந்திராதான்.

"தெரியும்."

இனிமையான குரல். முகம் பாதி கருகாவிட்டால் பொறாமைப்படும் அழகாய் இருந்து, எத்தனை ஆண்களை அலைய வைத்து,

"எப்படித் தெரியும்?"

சற்று தயங்கினாள். இப்போது காயத்திரி பேசினாள்.

"மிஸ் சூர்யாவின் பெண்கள் அமைப்பில் அறிமுகம்."

வினோ புருவம் உயர்த்தி,

"பெண்கள் அமைப்பில் நீயும் உண்டா?"

"நோ. பேட்டிக்காக சென்றது."

என்றபடி, அப்போது இந்திரா பளிச் சென்று, பன்னீரில் நனைந்த பூமாதிரி அழகாய் இருந்தது நினைவில் வர அனுதாபம் மனதில் எழ, பேச்சை மாற்றி–

"வெளியே போய் இருந்து பேசலாமே வா இந்திரா?"

என்றாள் காயத்திரி,

"ஒரு நிமிசம்."

என்றுவிட்டு சமையலறைக்குள் நுழைந்த இந்திரா, ரீ போட்டு மூவருக்குமாய் கொண்டுவந்தாள்.

"தாங்ஸ் இந்திரா."

என்றுவிட்டு வினோவைப் பார்க்க, இந்திராவையே பார்த்தபடி இருந்த வினோ, இரு என்று அவளுக்கு கண்களால் சைகை காட்ட,

"வேண்டாம் அண்ணா. உள்ளே வேலை இருக்கிறது. இரவு சாப்பாடு இங்கேதான். சாப்பிட்டுவிட்டுப்போ காயத்திரி. ரெடி பண்ணுகிறேன்."

"வேண்டாம் இந்திரா. நான்..."

"அந்தக் கதையே வேண்டாம். இருந்து சாப்பிட்டுவிட்டுத்தான் போக முடியும்."

சொல்லிச்சிரித்து, உள்ளே போனாள் இந்திரா.

உள்ளே அவள் போனதையே சோகமாய் முகத்தை வைத்தபடி கவனித்தாள் காயத்திரி. பின், திரும்பி வினோவைப் பார்த்தாள்.

"யார் வினோ? இந்தக் கொடுமைக்கு யார் காரணம் வினோ?"

சூடு தெரிந்தது குரலில். வினோ அவளை ஆழமாய் பார்த்தான். ஆட்காட்டி விரலால் தன் நாசியின் மையத்தை வருடிக்கொண்டே அவளை உற்றுப் பார்த்தான்.

"சொல்லமாட்டாயா வினோ. நான் அறியக்கூடாதா வினோ?"

"ஒரு விதத்தில் அறியலாம். இன்னொரு விதத்தில் கூடாது."

"புரியவில்லை."

இப்போது காயத்திரி வினோவை ஊடறுப்பது போல அவன் விழிகளுக் குள்ளாகப் பார்த்தாள்.

"என்மீது அக்கறையுள்ள தோழியாக, என் சகோதரிமீது பிரியமுள்ள தோழியாக அறியலாம்."

காயத்திரி அவசரமாக குறுக்கிட்டுக் கேட்டாள்.

"எந்த முறையில் அறியக்கூடாது வினோ?"

வினோ பதில் சொல்லாமல் அவளை தீர்க்கமாகப் பார்த்தான்.

"சொன்னால் உனக்கு தொடர்ந்து இங்கிருப்பது கஷ்டமாக இருக்கும் காயத்திரி. சங்கடமாக இருக்கும்."

"பரவாயில்லை வினோ. சொல். நீ சொல்லாமல் நான் இங்கிருந்து போகப் போவதில்லை வினோ!"

"என்ன காயத்திரி நீ? முதலில் ரீயைக் குடி."

ரீ கோப்பையை கையில் எடுத்து இரண்டுதரம் உறிஞ்சிவிட்டு,

"சொல் வினோ. என்னை வதைக்காதே."

திடீரென்று கதிரைவிட்டு எழுந்து, தன் ஜீன்சின் இரு பொக்கற்றுகளுக்குள்ளும் இரு கைகளையும் செலுத்தியபடி கேட்டான் வினோ,

"நான் மட்டும் உனக்கு ஏன் உண்மை சொல்லவேண்டும் காயத்திரி?"

காயத்திரியின் முகத்தில் அடுக்கடுக்கான குழப்ப ரேகைகள்?

"என்ன சொல்கிறாய் வினோ?"

"ஏன் புரியாதது மாதிரி நீ நடிக்கிறாய் காயத்திரி?"

"நான்? நடிக்... நடிக்கிறேனா? வினோ உனக்கு என்ன நடந்தது?"

வினோ அந்த வீடே அதிரும்படி சிரித்தான்.

காயத்திரிக்கு சட்டென்று ஒரு பயம் தொற்றிக் கொண்டது.

பின்னால் யாரோ நின்று தன்னையே உற்றுப்பார்ப்பது போல பின் கழுத்து மையத்தில் உறுத்த, திரும்பிப் பார்த்தாள்.

சமையலறையில் இருந்து வினோவின் சிரிப்புச் சத்தம் கேட்டு வந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த இந்திரா,

காயத்திரி திரும்பிப் பார்த்ததும், லேசாக புன்னகைத்துவிட்டு, மீண்டும் உள்ளே சென்றுவிட,

காயத்திரி மீண்டும் வினோவை நோக்க,

"கோபமா இன்ஸ்பெக்டர்?"

என்று அவள் விழிகளையே பார்த்தபடி கேட்டான் வினோ.

காயத்திரி தான் இருந்த நாற்காலியில் மின்சாரம் செலுத்தப்பட்டது போல், அதிர்ச்சிவாங்கி, தன்னையும் அறியாமல் நாற்காலிவிட்டு துள்ளலாய் எழ,

வினோ ஆட்காட்டி விரல் நீட்டி, கதிரையில் இருக்குமாறு சைகை செய்து, உதடு நிறைய புன்னகைத்து,

"அதிர்ச்சியாகத்தான் இருக்கும். நிருபர் என்ற போர்வையில் உள்ள கிரைம் இன்ஸ்பெக்டர் காயத்திரிக்கு! எப்படித் தெரிந்தது என்று மூளையைப் போட்டு கசக்கித்தான் தீரவேண்டும்."

காயத்திரி வினோவின் பேச்சில் குறுக்கிட வில்லை. முகத்தில் சலனமே இல்லாமல் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"கிரைம் இன்ஸ்பெக்டர் பத்திரிகை நிருபராக நடிக்கலாம். தப்பில்லை. ஆனால் காதலியாக நடிக்க நினைத்தாய் பார்! அது தப்பு. மகா தப்பு."

சொன்னபோது வார்த்தைகளில் வெறுப்புத் தொனித்தது.

இப்போதுதான் காயத்திரி இதுவரை காத்த மௌனம் உடைத்து.

"நோ வினோ. நோ. நான் உன்னைக் காதலித்தது, காதலிப்பது, காதலிக்கப் போவது எதுவுமே பொய்யில்லை வினோ. தயவுசெய்து என் காதல் பொய் என்று சொல்லி என் உயிரை அறுக்காதே வினோ!"

என்றாள். விழிகளில் இருந்து திரண்டு உருண்டு மார்புச் சட்டை நனைத்தது கண்ணீர்.

வினோ அவளை நேரே பார்க்காமல் தவிர்த்தபடி தொடர்ந்தும்,

"ஏன் நினைக்கக்கூடாது காயத்திரி? ஏன் நினைக்கக்கூடாது என்று கேட்கிறேன். நீ ஒரு பொலிஸ் அதிகாரி என்ற உண்மையை மறைத்து என் சோகம் கிளறி, காதலை தூண்டிலாய்ப் போட்டு, என் குடும்ப சோகம் துருவி நீ நாடகம் ஆடியதெல்லாம் பொய்யா சொல் காயத்திரி?"

"இல்லை வினோ. நீ சொல்வதில் பாதிதான் உண்மை வினோ!"

"எந்தப் பாதி? நீ கிரைம் இன்ஸ் பெக்டர் என்பதா?"

காயத்திரி பொத்தென்று நாற்காலியில் அமர்ந்தாள். தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டாள்.

"வினோ உனக்கு எப்படி புரிய வைப்பது என்றே தெரியவில்லை எனக்கு"

என்றாள்.

"நான் புரியவைக்கிறேன்."

என்று குரல் வர, காயத்திரி திரும்பிப்பார்க்க, சமையலறையில் இருந்து வந்து கொண்டிருந்தது

–இந்திரா–

□□

**க**சட் வழியே அவன் கதை சொல்லி முடிக்கவும், டெலிஃபோன் சிணுங்கி அழைக்கவும் சரியாக இருந்தது.

மறுமுனையில் ஐ.ஜி. வந்தார். ஹலோ என்றவுடன் குரல் புரிந்தது.

"யெஸ் சேர்."

என்றார் டி.ஐ.ஜி.

"குலாம்ஷா கில்லாடிதான்."

டி.ஐ.ஜி. பதில் சொல்லவில்லை. எப்படி, ஏன் என்றெல்லாம் கேட்பது மரியாதையாக இருக்காது என்பதால் மௌனம் காத்தார். ஐ.ஜி.யே பேசட்டும் என்று காத்திருந்தார்.

"யெஸ் டி.ஐ.ஜி.டென்சில். குலாம்ஷா உன் நண்பன் என்பதால் நீ பெருமைப் படலாம். எடுத்த காரியத்தை முடிக்காமல் விடமாட்டான் போ."

ஐ.ஜி. ஒரேயடியாகப் பாராட்டுவது டென்சிலுக்கும் சந்தோசமாகவே இருந்தது. எனினும் தனக்கும் தெரியாமல் ஏதோ சூரத்தனம் பண்ணியிருக்க வேண்டும் குலாம்ஷா. அது என்ன என்று அறியும் ஆவலும் ஏற்பட்டது.

டென்சிலின் மனநிலை புரிந்தது போல், ஐ.ஜி. மறுமுனையில்,

"இன்று மாலை 5 மணிக்கு என் அலுவலகத்தில் சந்திக்கலாம். ஓ.கே."

"யெஸ் சேர்."

றிசீவர் சாத்திவிட்டு நிமிர, கதவு திறந்து உள்ளே வந்து இன்ஸ்பெக்டர் மோகன், பசுபதி– ஜவாஹர் செத்துப் போனது. பிரசாத் உயிருக்காகப் போராடுவது. பசுபதியின் பங்களா பொலிசின் பொறுப்பில் இருப்பது. அனைத்து நடவடிக்கைகளையும் ஐ.ஜி.யின் நேரடிக் கண்காணிப்பில் குலாம்ஷாவினால் செய்யப் பட்ட விபரத்தை சொல்லி முடித்தார்.

விபரம் சொல்லி முடித்து இன்ஸ் பெக்டர் மோகன் செல்ல, டெலிஃபோன் அழைத்தது. எடுத்து–

"ஹலோ. அட நீயா? பெரிய ஆளடா நீ."

என்றார் குலாம்ஷாவிடம் டென்சில்.

குலாம்ஷா சிரித்து,

"இல்லை டி.ஐ.ஜி. பாதிதான் நான் முடித்திருக்கிறேன். மீதி முடிக்க நீங்கள் வழி சொல்ல வேண்டும்."

குலாம்ஷா சொல்ல,

ஜீன்சின் இடது பொக்கற்றில் இருந்த 'கசட்டை' தொட்டுப் பார்த்துக் கொண்டார் டென்சில்.

"செய்வோம். வெல்வோம்."

"யா. மாலை 5 மணிக்கு ஐ.ஜி.யிடம் வருகிறீர்கள்தானே?"

"யா"

"ஓ.கே. நேரில் பார்க்கலாம்."


றிசீவர் சாத்திவிட்டு கசட் மூலமாய் அவன் சொன்ன தகவல்களை மூளையில் போட்டு அலசத் தொடங்கினார். அத்தோடு யார் அவன்? என்று யோசிக்கத் தொடங்க, மூளையில் ஒரு வெளிச்சம் தெரிந்தது.

(மறுவாரமும் வரும்)

## பேனா நண்பர்



பெயர்: தி. பரமசிவம்
வயது: 22
முகவரி: [illegible], கொழும்பு வீதி, ஹப்புத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, விளையாட்டு.



பெயர்: ஏ. நஸார்
வயது: 21
முகவரி: 350, மொனராகலை வீதி, கனுல்வெல, பிபில.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல்கள், கிரிக்கெட், நண்பர்களுடன் அரட்டை.



பெயர்: நடராஜ் மோகனச்செல்வி
வயது: 19
முகவரி: 42/5A, டிம்புள்ள றோட், ஹட்டன்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, படம் வரைதல், இயற்கைக் காட்சி படங்கள் சேகரித்தல்.



பெயர்: எவ். ஃபஸீலா
வயது: 16
முகவரி: இல.32, கலுகமுவ, கெலி-ஓயா.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: வீ.ராமச்சந்திரன்
முகவரி: SAFARI CO.LTD. BLOCK NO-23 B, ROOM NO- 05, P.O.BOX-15005, JEDDAH-21444, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, உதைபந்து.



பெயர்: எல். ஜெரால்டன்
வயது: 26
முகவரி: P.O.BOX-16872 JEBEL ALI DUBAI, U.A.E.
பொ.போக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.

பெயர்: கே. சந்திரன்
வயது: 20
முகவரி: நெலுவ தோட்டம், பண்டாரவளை.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்கு.

பெயர்: எம். முபமீதீன்
வயது: 21
முகவரி: 1705, பதுறியா வீதி, காங்கேயனோடை-11.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: செல்வத்துரை ராஜா
வயது: 35
முகவரி: VOLTA STR-44, 6005 LUZERN, SWITZERLAND.
பொ.போ: பத்திரிகை, ரீ.வி. நண்பர் தொடர்பு, சுற்றுலா.

பெயர்: ஏ.எம். அஸ்ஹர்
வயது: 14
முகவரி: மஹ்ரூப் நகர், கிண்ணியா.
பொ.போ: பத்திரிகை, வானொலி, விளையாட்டு.

பெயர்: கே.வின்சன்
வயது: 23
முகவரி: மத்திய வீதி, சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகளுடன் ஓவியம் வரைதல்.

பெயர்: எம். மொய்டின்
வயது: 20
முகவரி: 32/9, முதல் பள்ளித்தெரு, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.

சிறுகதை

# அன்புள்ள அஸ்மியா....!

ஓர் உண்மையின் தழுவல்

ஹரீரா அனஸ்

பள்ளி வாசலின் கூர்நுதி மாடத்திற்கு நேராய் நிலவு குவிந்து ஞாலம் காட்டியது. கொல்லைப்புறத்து ஜன்னல் கதவுகளைத் திறந்தாள்: விழிகள் பரபரப்பாய் தேடின. மனம் பதறியது. கைகள் இரண்டும் குளிர்ந்து விட்டிருந்தன. 'ரூமி...என் ரூமி.... இதயம் படபடத்தது. அவளின் அறையில் இருந்த கடிகாரம் ஓசைப்படாமல் பன்னிரெண்டு மணியைக் காட்டிக்கொண்டிருந்தது.

'ரூமி வருவார். என் ரூமி வருவார். இன்று என் ரூமியைச் சந்திக்கவிட்டாய்...' நைந்துருகும் அவள் மனத்தோடு சேர்ந்து அர்த்தமில்லாமல் கண்களும் கலங்கித் துளிர்த்தன. மனம் முழுக்க அவனின் அன்பு நிறைந்து போயிருந்தது. வீதியின் திருப்பத்தில் ஓர் உருவம். அழகான ஆண். ஆம் அதே சேட். அதே ரவுசர். ரூமி... ஆம்..ரூமி... ஆயிரம் கைகள் அவளுள்ளத்தில் ஆனந்தக் கும்மி கொட்டின. உணர்வுகள் உயிரோடு கலந்து கூத்தாடின. ரூமி இப்பொழுது அவளருகில். அவன் இப்பொழுதுதன் அருமையான காதலியின் அருகில்... "அஸ்மியா.." "ம்.." ஹம் ஒலி மட்டுமே அவளிடமிருந்து வந்தது. அந்தச் செம்பவள இதழ்கள் திறந்தால் என்ன வலித்தாவிடும்?

நிமிடங்கள் தென்றலில் கரைந்து கொண்டிருந்தன...

"அஸ்மியா பேசேன்."...

கண்மடல்கள் படபடவென சிறகடித்துக் கொண்டன.

"என்ன பேச ரூமி?"

"இதற்குத்தானா என்னை வரச் சொன்னாய்?"

"ரூமி நீங்கள் வந்தவுடன் எவ்வளவோ பேச வேண்டும் என நினைத்திருந்தேன். ஆனால்... ஆனால்..."

அவளின் படபடப்பும், முத்தாய் கோர்த்து நிற்கும் வியர்வைத் துளிகள் அவளின் நெற்றியின் மீது அழகு சேர்க்கும் விந்தையும் அவளை அப்படியே அள்ளி எடுத்து கன்னங்களிலும்... நெற்றியிலும்... மாறி... மாறி.... முடியாது. இடையில் திரையாய்; தடங்கலாய், சிறையாய் ஜன்னல் கம்பிகள்,

அஸ்மியாவின் கைகள் தொட்டு அவன் அன்பாய் பேசி.. திடீரென ரூமிக்குப் பின்னால் இருமல் சத்தம்.

அஸ்மியாவின் தந்தை- புலன்கள் அறுந்த நிலையில் ரூமி!

அஸ்மியாவுக்கு உடலெல்லாம் உதற லெடுத்தது. "வாப்பா!"

மனம் முழுக்க மின்சாரம் பாய்ந்தது.

நிலவு அந்தக் காதலனைக் காட்டிக் கொடுத்தது.

அவருக்கு ரூமியை நன்றாகத் தெரியும். அவர் அவனின் வலது கையைக் கெட்டி யாகப் பிடித்தார். தரதரவென இழுத்துக் கொண்டு வந்து நடு ஹோலில் விட்டார்.



எல்லா லைட்டுகளையும் போட்டார். ஃபானை சுழல விட்டார்.

இதமான காற்றைத் தரும் காற்றாடியின் கீழ் ரூமி வியர்த்துக்கொட்ட நின்று கொண்டிருந்தான். என்ன செய்யப் போகிறாரோ? மனம் அறுத்துப்போட்ட கோழியாய் துடித்தது. கால்கள் உதறலெடுத்தன.

'ரூமி..." கர்ண கடூரமாகக் கூப்பிட்டார்.

அழுகை வரப்பார்த்தது அவனுக்கு. இந்த அமர்க்களத்தில் அஸ்மியாவின் உம்மாவும் எழுந்து வந்துவிட்டாள். அஸ்மியா தீக்குள் விழுந்த புழுவாய் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள்.

அவர் தனது இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டைக் கழட்டினார்.

"ரூமி.... இங்காலை வாடா.." உத்தர வுக்கு கட்டுப்பட்டு மந்திரத்தில் இயங்குப வனாய் ரூமி.

மாறி மாறி பெல்ட் அவனின் முதுகில் கோடிழுத்தது. தோல் உரிந்து... இரத்தம் கசிந்தது. உடலெல்லாம் எரிந்து பற்றியது.

அன்றோடு அஸ்மியாவை மறந்து போயிருக்க வேண்டும் அவன்.

ஆனால்...

□□□

அன்றைய நினைவுகளை எண்ணி எண்ணி உணவின்றி உறக்கமின்றி, படிப்பின்றி மனம் துவண்டு போய் வாடிய மென் மலராய் அவள். திருட்டுத்தனமாய் ரூமியின் கடிதங்களே அவளுக்கு மன ஒத்தடம். ரூமியின் கடிதங்களா அவை. அவை ஒவ்வொன்றும் கவிதைத் துளிகள். அவள் இதயத்தை ஆறுதல் படுத்தும் ஆத்ம ராகங்கள். அழுது அழுது கண்கள் இரண்டும் சிவந்து வீங்கியிருந்தன.

"அஸ்மியா..." எங்கேயோ கனவு போலவும் குகையொன்றில் இருந்து வருவது போலவுமான வார்த்தைச் சத்தம்.

மீண்டும் "அஸ்மியா..." ரூமியின் குரல் தான் என்பதை அவள் புரிந்துகொண்டாள். மெதுவாக நடந்துபோய் ஜன்னல் கதவு களைத் திறந்தாள்.

"ரூமி..." அவள் ஆச்சரியத்தால் அலறினாள்.

கையுடைந்து, தலை வெடித்து, கால்களிலெல்லாம் வெண் துணியினால் கட்டுப்போட்ட ரூமி....

லேசான மழைத் தூறல்."ரூமி! வாப்பா இல்லை... உள்ளுக்கு வாங்கோ!"

"வேண்டாம் அஸ்மியா... எப்படியாவது அவருக்குத் தெரிஞ்சா.."

"ரூமி! மழை தூறுது. ப்ளீஸ் உள்ளுக்கு வாங்களேன்."

ஓசைப்படாமல் கதவு திறந்து, மெதுவாக அடிமேல் அடிவைத்து தனது காதலனை அழைத்து வந்து அந்தப் பூமேடையில் அமர வைத்தாள் அஸ்மியா.

எத்தனை நிலவு கால இரவுகள், ஜன்னல் கம்பிகளின் அண்மித்தலோடு கழிந்து போனவை.

"அஸ்மியா! இப்படி அடி வாங்கின தால்த்தானே இவ்வளவு உபசரிப்பும்" கலங்கிய விழிகளைத் துடைத்துவிட்டு தன் மென் மடியில் அவனைச் சரித்தாள் அவள்.

அவனுக்கு எல்லா வலிகளும் பறந்து போயின. யாரது மென் இறகினால் அவனைத் தடவியது? யாரது ரோஜாவை அவன் மேல் பரப்பியது?

எவ்வளவு மகிழ்ச்சி. தனது அன்பான வளின் அணைப்பிலும் ஆதரிப்பிலும் அவன் எவ்வளவாய் கிளர்ந்து போனான்.

பக்கத்து அறையில் உம்மாவின் இருமல் சத்தம். அந்தப் பொழுதில் அதொரு அபசகுனம்.

"அஸ்மியா..அஸ்மியா..." உம்மாவின் அழைப்பும் அதனைத் தொடர்ந்த கதவு தட்டலும்.

"அஸ்மியா...உம்மா அஸ்மியா.."

தட்டுத் தடுமாறி 'என்ன செய்வது? ரூமியை எங்கே ஒளியவைப்பது? அவளுக்கும் பதட்டம், வாப்பாவிடம் பட்ட அனுபவம் இன்னும் சான்றாய் எத்தனை கட்டுக்கள்.

"ரூமி ட்ரெஸ்ஸிங் டேபிளுக்குப் பின்னால் நில்லுங்கோ." அவனை அழைத்து நிப்பாட்டி வைத்துவிட்டு உம்மாவை கதவைத் திறந்து என்ன என்று கேட்க...

அதற்குள் அவனை மறைக்கத் திராணியற்று அந்த 'ட்ரெஸ்ஸிங் டேபிள்' விலக...'விக்ஸ், எடுக்கவந்த உம்மாவின் கண்களுக்குள் ரூமி.

உம்மாவினுள் ஆயிரம் மின் குமிழ்கள் ஒருமித்து ஒளியுமிழந்து பின் ஓய்ந்தன.

"ரூமி.." தன்னையுமறியாமல் உம்மா பதட்டமடைய... அஸ்மியா திரும்பிப் பார்த்தாள். உம்மா என்ன செய்யப் போகின்றாவோ, அன்று வாப்பாவின் பாரிய தாக்குதல், இன்று உம்மா...

"உம்மா..அது வந்து.."

"நீ ஒண்டும் சொல்லாதே...அங்காலை போ..."

"ரூமி இங்கை வா! இதென்னடா வேலை உனக்கு? அண்டைக்கு அஸ்மியாடை வாப்பா எப்பிடிப் போட்டு அடிச்சார். அதையும் மறந்து இப்பிடி வந்து நிக்கிறியே..?"

உம்மாவின் மனதில் பொறியாய் ஒரு நினைவுச் சுழல்.

எத்தனை வேதனைகளை, அதிர்ச்சி களை, துன்பங்களைத் தாங்கி தன் காதலியின் மீதுள்ள அன்பால் அவளைச் சந்திக்க, இந்த ஊர் உறங்கும் வேளையில் வந்து நிற்கும் இந்த இளையவன். அவனிடம் எவ்வளவு உறுதி. தன் அன்பானவளிடம் எவ்வளவு பற்றுதல். உம்மாவின் மனது அவனின் உயர்வான நேசத்திற்காய் உருகியது. தனக்கு இஷ்டப்படாத கணவன் மார்களை வலுக்கட்டாயமாகக் கட்டிக் கொண்டு காலம் பூராகவும் அல்லற்படும் எத்தனை பெண்களின் வாழ்க்கைகள் அநியாயமாக அழிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி தன் காதலிக்காய் துன்பங் களைத் தாங்குபவன் பின்னரும் தன் மனைவியை சீர் பெறச் செய்வான். உம்மாவின் இதயம், சில நியாயங்களுக்காய் வாதாடியது.

"ரூமி இங்கை வாப்பா..."

அன்பாக அழைத்து அவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

"அஸ்மியாவோடை நீ இவ்வளவு அன்பு வைச்சிருக்கிறாய்..? இனி நீ எண்ட மருமகன். மாமாட்டை உன்னைப்பற்றி நான் நிறையக் கதைக்கிறன்."

பாசத்துடன் அவனை ஒரு தாயாக அணைத்து ஆறுதல் சொன்னாள்.

ரூமி.. இன்ப அதிர்ச்சியில் ஆடிப் போனான்.

அஸ்மியா... உம்மாவின் செய்கைகளைக் கண்டு சிலைபோல நின்றாள்.

எதுவுமே எதிர்பாராதது அல்லவா....?

---

# யுத்தம் தீரும் மட்டும்!

சிறுகதை

ஷர்மிளா இஸ்மாயில்



கண்மூடியிருந்தாள் சஹானா. மனதின் வெளிகளில் எல்லாம் ஏதோவோர் இனம் புரியாத வெறுமை. எல்லாம் இருந்தும் எதுவுமே இல்லையென்ற பெயரிட முடியாத ஏக்கத்தின் ஆக்கிரமிப்பு. ஜன்னலைத் திறந்து வெளியுலகைப் பார்த்தவள் முகத்தில் எரிச்சல் முகாமிட்டது. இடைவிடாதொலிக்கும் இரைச்சல் காதுகளை துளைத்தெடுத்தது. வாகனங்களின் இரைச்சல் ஒருபுறம். லொத்தர் டிக்கட் விற்கும் ஒலிபெருக்கி மறுபுறம். தெருவோரம் கடை விரித்து வாய் ஓயாமல் கூவி விற்போர் இன்னொருபுறம். எங்கும் இரைச்சல் மயம். காற்றில் தூய்மை யில்லை. உஷ்ணம் உடலை ஊடுருவுவதான வெப்ப காலநிலை. "ஆண்டவனே. அழகான அமைதியான என் கிராமத்தைவிட்டு என்னை ஏன் இங்கு வரச் செய்தாய்?" மெதுவாக பெருமூச்சை வெளிவிட்டு ஆதங்கமாய் இறைவனை கேள்வி கேட்டாள்.

திரும்பவும் ஓடிப்போய் அந்தக் கிராமத்து மண்ணை மிதித்து அருவியில் குளித்து, புற்களின் மேல் தவழும் பனியை இரசித்து, தோட்டத்து ரோஜாவின் சுகம் விசாரித்து... சஹானாவுக்குள் கண்ணீ ரலைகள் கரைபுரளவாரம்பித்தன. அடக்கிக் கொண்டவள் பார்வை ஜன்னலோரமாய் வைத்திருந்த பூச்சட்டியில் விழுந்தது. அவள் ஆசையாய் வைத்திருந்த ரோஜாச் செடியின் கடைசி இலையும் கருகிப் போயிருந்தது. அழ நினைத்த மனதை அடக்க முடிய வில்லை. அழுதுகொண்டிருந்தாள் சஹானா. சுதந்திரமாக, களங்கப்படாத கிராமத்து சூழலில் சின்னச் சிட்டாகக் கிடந்தவளை நகரத்துப் பாலையில் நடக்க முடியாது சிறைப்பிடித்து வைத்ததான திருமண பந்தத்தின் மீது அவளுக்கு கோபம். கையாலாகாத கோபம்.

இராமன் இருக்குமிடமே சீதைக்கு அயோத்தி என்பார்கள். சஹானாவும் கைப்பிடித்தவன் வேலை பார்க்கும் நகரத்துக்கே வந்து சேர்ந்து ஐந்து மாதங்களே. ஐந்து யுகங்கள் கழிந்ததான உணர்வு அவளுக்குள். கிராமத்துப் புறாவான அவளுக்கு நகரத்து நாகரிக வாழ்க்கை ஒத்துக்கொள்ள முடியாததெனத் தோன்றியது. வாழ்க்கை ஒருபுறம் இருக் கட்டும். சூழல்கூட அவளைக் கவரவில்லை. கணவனது அன்பும், அவளைக் கவனிப்ப தான பரிவும் அவளை ஒட்டாமல் ஒட்டி வாழ வைத்தது எனலாம். அவனும்கூட அவளைப் புரிந்து வைத்திருந்தான். கிராமத்துக்கு அடிக்கடி அழைத்துப் போவான். இருந்தும் அவளால் நகர வாழ்க்கையை ஜீரணிக்க முடியவில்லை. காலையில் அவன் போன பிறகு சாத்திய கதவுக்குள் மாலைவரை தனிமையின் வெறுமையில் நேரம் கழிவதே சிரமமாயிற்று.

கதவு தட்டப்படுவது கேட்டு அவசர மாய்க் கண்களை துடைத்து, கதவு திறந்தாள். அழகான பொட்டுடன் கூடிய வட்ட நிலவாய்ப் பெண்ணொருத்தி நிற்பது கண்டு மனதுக்குள் வியப்பு. அவளே அறிமுகத்தை ஆரம்பித்தாள்.

"நான் மிஸிஸ் சாந்தினி ராஜசேகர். உங்கட பக்கத்து வீட்டுக்கு புதிதா வந்திருக் கிறோம். வந்திருக்கிறோம் என்பதைவிட வரவழைக்கப் பட்டோம் என்பதுதான் சரியானது.

"சொந்தமான வீடு, வளவு எல்லாத் தையும் விட்டுவிட்டு இரவோடிரவா உயிர் தப்பி வந்தனாங்கள். அகதி முகாமில காலம் கழிச்சு, இப்போ இந்த வீட்ட வாடகைக்கு எடுத்து....."

நீளமான வசனங்களைப் பேசியவளைப் புன்னகையுடன் பார்த்தாள் சஹானா.

"சுருக்கமாகச் சொன்னா யுத்தம் உங்களை இங்கு அனுப்பி வெச்சது இல்லையா? சரி, வாங்க உள்ளே. உங்களை சந்திச்சதுல ரொம்பவும் மகிழ்ச்சி."

கையைப் பிடித்து அவளை அழைத்துச் சென்று அமர வைத்தாள்.

"உங்கட ஹஸ்பண்டை என்ர ஹஸ்பண்ட் தற்செயலா நேற்று மாலை நேரம் சந்திச்சு, பிறகு ஒருத்தருக்கொருத்தர் அறிமுகமாகி, அவர்தான் சொன்னவர் இன்று உங்களைப் போய் பார்த்து பேசிட்டு வரச்சொல்லி..."

சஹனாவுக்குள் சந்தோஷம் பிறந்தது. தனிமைக்கு துணையாய் இதோ என்னைப் போல் இன்னுமொரு பெண்! சொந்த ஊரை, பெற்றோரை, உற்றாரைப் பிரிந்து, அறிமுகமில்லாத நகரத்துச் சூழலில் அகப்பட்டு நிற்கும் இன்னுமொரு ஜீவன். என் சொந்த சோகத்தைவிட அவளது சோகம் பெரிது. இழப்பு பெரிது. சஹானா சாந்தினிக்காய் அனுதாபப்பட்டாள். அரவணைத்துக்கொண்டாள். மதம் எனும் வேலியைக் கடந்து நட்பெனும் மலர் இருபக்க நிலத்திலும் பூத்தது.

"நீங்க மட்டும் பக்கத்து வீடா இருந்தில லாட்டா என்ர ஜீவியம் பாலை வனமா இருந்திருக்கும்." சாந்தினி சஹானாவின் கரங்களில் புது வருடப் பட்சணத் தட்டைக் கொடுத்தவளாய் கண்கள் கலங்கி நின்றாள்.

"ஆமா சாந்தி, நீங்க வரமுன்பெல்லாம் நான்கூட பாலைவனத்துல தான் வாழ்ந்துக் கிட்டிருந்தேன். இல்ல-அப்படி நெனச்சிட்டிருந்தேன். இப்போ உங்களப் பார்த்தாப் பிறகு, என் கவலையெல்லாம் அர்த்தமற்றதாப் படுது. இந்தப் புது வருஷப் பிறப்பிலாவது யுத்தம் தீர்ந்து போகணும். மீண்டும் சொந்த மண்ணிலே இரத்த பந்தங்களுடன் சந்தோஷமாக் கொண்டாடப் படும் பெருநாள் உங்களுக்கு வாய்க்கும். இதுதான் என் பிரார்த்தனை."

சஹானாவின் இந்த வார்த்தைகளில் கண்ணீர் தடவியிருந்தது.

□□□

"ஹேய்-சஹா...உனக்கொரு ஹெப்பி நியூஸ் சொல்லட்டுமா? வேண்டாமா?"

அவளது கணவன் உற்சாகமாய் வந்தான்.

"என்ன? என்ன? சொன்னீங்க?"- ஆவலாய்க் கேட்டாள் சஹானா.

"நம்ம கம்பனிர புதிய கிளையொன்றை அடுத்த மாதம் கண்டியில திறக்கிறாங்க. அதுக்கு இன்சார்ஜ் ஆக என்னை போக முடியுமான்னு எம்.டி. கேட்டார். நான் யோசிச்சு சொல்றேன்னு சொல்லியிருக்கேன். எப்படி உனக்கு? இனி ரொம்ப சந்தோச மாயிருக்குமே? நாளைக்கே நான் சரின்னு சொல்லிடப் போறேன். என்ன சொல்றே நீ?"

சஹானா மௌனித்தாள். அவன் எதிர்பார்த்த அந்த உற்சாக சிரிப்பு, கலகலப்பு அவள் முகத்திலில்லை.

"இல்லைங்க. நாங்க இங்கேயே இருப்போம். அது தான் என் விருப்பம்."

அவளது வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியாது நின்றான் அவன்.

"நா...நாங்க போய்ட்டா... சாந்தி மட்டும்... மட்டும் இங்க தனிச்சு போய்டுவா. எனக்கு ஒரு நல்ல நண்பியா, சகோதரியா இருக்கவள விட்டுட்டு போறதில எனக்கு சம்மதம் இல்ல. இந்த யுத்தம் தீர்ந்தாப்புறம் வேணும்னா நாங்க ஊருக்குப் போகலாம். அதுமட்டும் இங்கிருப்போம்."

-சஹானா சொல்லிக்கொண்டிருந்தாள்.

---

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

அவள்: உன் மாமியார் தலையில் பூச்சாடி விழுந்திருச்சின்னு சொன்னியே அப்புறம் என்ன ஆச்சு?

இவள்: புதுசா வேறொரு பூச்சாடி வாங்கிட்டோம்.

□□

ஒருவர்: டாக்டர்..... சரியா தூக்கம் வர மாட்டேங்குது.

டாக்டர்: நல்ல தலையணை, மெத்தை போட்டுத் தூங்கிப் பாருங்களேன்.

ஒருவர்: ஓஃபீஸில இந்த வசதி எல்லாம் செய்து தர மாட்டாங்களே டாக்டர்.

□□

வீட்டுக்காரர்: நாங்கள் குடி வரப்போற இந்த வீட்டில நிறைய எலிகள் இருக்காமே?

புரோக்கர்: யார் சொன்னது? பாம்பு இருக்கிற வீட்டில எலி எப்பிடீங்க இருக்கும்?

□□

பாபு: அறுபது வயசு வரைக்கும் எங்கப்பாவுக்கு ஒரு பல்கூட விழலே.

கோபு: உங்க அம்மா, சின்ன வயசிலேயே செத்துப் போயிட்டாங்களா?

□□

வட்டிக்கடைக்காரர்: லைட் போட்ட பிறகு நான் யாருக்கும் பணம் தரமாட்டேன்.

கடன் வாங்க வந்தவர்: அப்படீன்னா லைட்ட ஓஃப் பண்ணிட்டு பணத்தைக் குடுங்களேன்.

□□

(டாக்டர் நோயாளியிடம்)-

"இந்த மருந்தை 'மடக்'குன்னு குடிச்சிடுங்க. நான் உங்க கையில 'நறுக்'குன்னு கிள்ளிறேன்.ஊசி தொலைஞ்சு போச்சு."

□□

ஒருவர்: தலைவர் அடிக்கடி இருமிக்கிட்டே இருக்கிறாரே ஏன்?

மற்றவர்: கட்சிக்குள்ளே ஒரே புகைச்சலா இருக்கே.

சிறுகதை

# எதையும் தாங்குவேன் தங்கைக்காக.....!

## கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய

பள்ளிவாசலுக்குச் சென்று சுபஹ் தொழுகையை நிறைவேற்றி விட்டு வீடு திரும்பிய ரொஷான் மனவேதனையோடு கதிரையில் அமர்ந்தான். இன்றும்கூட அவன் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது, பைப்படியில் நின்றிருந்த பெண்கள் சிலர் அவனையும் நந்தினியையும் இணைத்து ஏதேதோ பேசினார்கள். இது அவனுக்கு சொல்லொணா வேதனையைக் கொடுத்தது. இன்று நேற்றல்ல நந்தினியை அவன் வீட்டுக்கு அழைத்து வந்த நாளிலிருந்து அவர்கள் இவ்வாறுதான் கதைக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல அந்த ஊர் சனங்களே இவ்வாறுதான் கதைக்கிறார்கள்.

'நரம்பில்லாத நாக்கால என்ன மாதிரியெல்லாம் பேசுறாங்க. இவங்களெல்லாம் பைப்படிக்கு வர்றது தண்ணி எடுக்கவா... இல்ல ஊரு பலாய் பேசவா? அகதியா வந்த ஒரு பொண்ணுக்கு இருப்பிடம் கொடுத்ததை கேவலமா பேசுறாங்களே! அண்ணன் தங்கச்சியா வாழ்ந்துக்கிட்டு இருக்கிற எங்க ரெண்டு பேரையும் இணைச்சி... சேச்சே நினைக்கவே உடம்பெல்லாம் கூசுது. நந்தினியும் இவங்கள மாதிரி ஒரு பொண்ணுதானே... இதை புரிஞ்சிக்காம அவளைப்பற்றி கன்னா பின்னான்னு பேசுறாங்களே!

'ச்சே...என்ன உலகம் இது.'

அவன் சமுதாயத்தை எண்ணி மனம் நொந்து கொண்டான்.

"இந்தாங்க அண்ணா தேத்தண்ணி..."

அவன் கையில் தேநீர் கோப்பையைக் கொடுத்தாள் நந்தினி.

"நீங்க தொழுதிட்டு வந்து ரொம்ப நேரமாச்சா? இன்னைக்கு விடிஞ்சதுகூட தெரியாம தூக்கம் போயிடுச்சி. அதான் நீங்க தொழுதிட்டு வந்ததும் தேத்தண்ணி தரமுடியல. ஸாரி அண்ணா."

"அதனாலென்னம்மா..."

"அண்ணா! கோயிலுக்குப் போய் ரொம்ப நாளாச்சு. இன்னைக்கு வெள்ளிக்கிழமை தானே... நான் கோயிலுக்குப் போகட்டுமா?"

"ம்"

"அப்படின்னா நீங்க வேலைக்குப் போகையில என்னை கோயில்ல விட்டுட்டுப் போறீங்களா?"

"சரிம்மா."

"அண்ணா! வன் மினிட் வெயிட் பண்ணுங்க. டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்திடுறேன்."

புள்ளி மானாக அவள் துள்ளி ஓடினாள்.

நந்தினி வட-கிழக்கில் ஏற்பட்ட பிரச்சனையில் தன் பெற்றோரையும், உற்றாரையும் இழந்து ஒரு அகதியாகஅந்த ஊருக்கு வந்தாள். பெற்றோரையும், உற்றாரையும் பறிகொடுத்து விட்டு கதியற்று நிற்கும் தன்னுடைய சோகக்கதையை கண்ணீரோடு அவள் கூறியபோது, அந்த ஊர் மக்கள் அனுதாபப்பட்டார்கள். அவளது சோகக் கதையை அவர்கள் திரும்பத் திரும்ப கேட்டனர். ஏதோ சினிமா கதையை கேட்பதைபோல..!

நந்தினியின் கதையைக் கேட்டு அனுதாபப்பட்ட அந்த ஊர் மக்களிடம் அவள் தனக்கொரு இருப்பிடம் கேட்டபோது அதுவரை அவளது கதையை சுவாரசியமாக கேட்டுக்கொண்டிருந்தோர் சொல்லாமல் கொள்ளாமல் நழுவிச் சென்றனர். அவளைச் சூழ்ந்திருந்த ஊர் மக்கள் அவளைவிட்டு நழுவிச் சென்றதால் அவள் தனிமைக்கு தள்ளப்பட்டாள். அடுத்து தன் நிலையை எண்ணி அவள் அழுதாள். பெண்ணல்லவா? அதனால் கண்ணீருக்குப் பஞ்சமின்றி கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடி அவளது கன்னங்களை தழுவிச் சென்றது. அவளது நிலை கண்டு பரிதாபப்பட்டு அவளுக்கு தன் வீட்டில் இருப்பிடம் கொடுத்தது ரொஷான்தான்!

அவன் நந்தினிக்கு தன் வீட்டில் இருப்பிடம் கொடுத்ததால் அந்த ஊர் மக்கள் வெகுண்டனர்.

"இவன் ஜாதி என்ன.. அவள் ஜாதி என்ன...போயும் ஒரு தமிழச்சியை வீட்ல வைச்சிக்கிட்டு இருக்கானே?"

இது அந்த ஊர் முஸ்லிம் மக்களின் குரல்.

"இவளுக்கு எந்தளவுக்கு நெஞ்சழுத்தம் இருக்கும்னா ஒரு சோனகனோட வீட்ல போய் இருப்பா...?"

இது அந்த ஊர் தமிழ் மக்களின் குரல்.

ரொஷான் நந்தினியை தன் சொந்த தங்கையாகவே நினைத்து வந்தான். அவளும் அவனை தன் உடன் பிறந்த அண்ணனாகத் தான் கருதி வந்தாள். ஆனால் இந்த சமூகத்தினர் அவர்களது அண்ணன் -தங்கை உறவை உணராது ஏதேதோ பேசினார்கள். அவர்களுடைய தூய்மையான சகோதர பாசத்தை சந்தேகக் கண்கொண்டு நோக்கி களங்கப்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

"ரொஷான்......ரொஷான்."

அவனது மாமாதான் வீட்டு வாசலில் நின்றபடி சப்தமிட்டார். தினமுரசு 'சினிவிசிட்' பகுதியை சுவாரசியமாக படித்துக் கொண்டிருந்த ரொஷான், மாமாவின் குரல் கேட்டு தினமுரசை மேசைமீது வைத்துவிட்டு முன் ஹாலுக்கு வந்தான்.

"வாங்க மாமா உள்ளே வாங்க."

"நான் ஒண்ணும் உன் வீட்டுக்குள்ள உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்க வரல."

அவர் ஏகமாய் கோபத்தில் இருப்பது பேச்சில் தெரிந்தது.

"மாமா! எதுவா இருந்தாலும் வீட்டுக் குள்ள வந்து பேசுங்க."

"ஆமா பெரிய இவரு.... வீட்டுக்குள்ள வந்து பேசுறதுக்கு இன்னும் என்ன இருக்கு...?

"தயவு செய்து வீட்டுக்குள்ள வந்து பேசுங்க மாமா."

"அவ வாழுற வீட்டுக்குள்ள வந்து பேச நான் ஒண்ணும் உன்னை மாதிரி ஒழுக்கமில்லாதவனில்ல."

"மாமா."

"ஏன் சும்மா கத்துறே...இந்த வீட்ல நடக்கிற கண்றாவியெல்லாம் எனக்கு தெரியாதுன்னு நெனைச்சிட்டியா?"

"வார்த்தையை அளந்து பேசுங்க. எது கண்றாவி? அகதியா வந்த ஒரு பெண்ணுக்கு இருப்பிடம் கொடுத்தா அது கண்றாவியா?"

"ஆமா கண்றாவிதான். அதான் ஊரே சிரிக்குதே!"

"ஊர் சிரிக்கிற அளவுக்கு நாங்க ஒண்ணும் கேவலமா வாழல. அண்ணன் தங்கச்சியாத்தான் வாழுறோம்."

"ஓ....கூடப் பொறக்காமலேயே சகோதர பாசமோ?"

"ஏன்... கூடப் பொறந்தா மட்டும் சகோதர பாசம் ஏற்படுமா? இல்லேன்னா ஏற்படாதா?"

"இந்தா பாரு, அந்த இந்த பேச்செல்லாம் வேண்டியதில்ல. உனக்கு என் மகளைக் கல்யாணம் பண்ணித் தரணும்னா முதல்ல அந்தப் பொண்ணை வீட்டை விட்டு வெளியில அனுப்பு."

"அது மட்டும் என்னால முடியாது."

"அப்போ இந்தக் கல்யாணம் நடக்காது."

"அதைப்பற்றி எனக்கு கவலையில்ல."

"ஓஹோ...என் மகளை விட உனக்கு அவ பெரிசா போயிட்டாயில்ல...அவ என்ன ஜாதின்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியும் மனித ஜாதி..!"

"உன்கிட்ட இதுக்கு மேலயும் பேசி பயனில்ல. என் மகளுக்கு நான் வேற மாப்பிள்ளை பார்க்கப் போறேன்."

"தாராளமா! உங்க மகளைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு நீங்கதான் என்கிட்ட கேட்டீங்க. ஏதோ மாமா கேட்கிறாரேன்னு நானும் சம்மதம் தந்தேன். ஆனா.... இப்போ நீங்களே உங்க மகளுக்கு வேற மாப்பிள்ளை பார்க்கப் போறீங்க. ரொம்ப நன்றி மாமா. எனக்கும் நந்தினிக்கும் இடையில இருக்கிறது அண்ணன் தங்கச்சி உறவுதான் என்கிறதை நீங்களும் இந்த ஊர் சனங்களும் என்னைக்காவது ஒரு நாளைக்கு தெரிஞ்சிக்கத்தான் போறீங்க."

மூச்சி விடாமல் அவன் கூறி முடித்தான். கள்ளம் கபடமற்ற அவர்களது சகோதர பாசத்தை புரிந்துகொள்ளாத அவனது மாமா மேற்கொண்டு அவனோடு எதுவும் பேசாது அவ்விடத்தை காலி செய்தார்.

ரொஷான் அதிக பட்ச வேதனையை மனதில் சுமந்தவனாக வீட்டுக்குள் வந்தான்.

"அண்ணா... என்னால தானே உங்களுக்கு இத்தனையும்?"

அவன் கால்களில் விழுந்து கண்ணீர் வடித்தாள் நந்தினி.

"என்னம்மா இது? எழுந்திரு."

அவளது தோள்களை பற்றி நிமிர்த்திய ரொஷான், அவள் கண்கள் சிந்திய கண்ணீரை பாசத்தோடு துடைத்துவிட்டான்.

"அண்ணா நான் எங்கேயாவது போறேன். என்னால உங்க வாழ்க்கை அநியாயமாக வேணாம்."

"என்னம்மா ஏதேதோ பேசிக்கிட்டு...? உன்னைவீட்டை விட்டு அனுப்பிவிட்டுத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கணும்னா அப்படியொரு வாழ்க்கை எனக்குத் தேவையில்லம்மா."

"அ....ண்...ணா."

"ஆமா நந்தினி...எனக்கு ஆயிரம் பொண்ணுங்க கிடைக்கலாம். ஆனா உன்னை மாதிரி ஒரு பாசமுள்ள தங்கச்சி எனக்கு கிடைக்க மாட்டாம்மா. என்கூடப் பொறந்த தங்கச்சின்னாகூட என்மேல இந்தளவுக்கு பாசமா இருப்பாளா என்கிறது சந்தேகம் தான்! சின்ன வயசிலேயே பெற்றோரை இழந்து பாசம்னா என்னவென்றே அறியாம வாழ்ந்த நான், உன் மூலமாத்தான் அந்த பாசத்தை உணர்ந்தேன். என் தங்கச்சியோட பாசத்தை இழந்து தான் என் மாமா மகளை நான் கல்யாணம் பண்ணிக் கணும்னா அதற்கு நான் தயாராயில்லம்மா."

"அண்ணா!"


அவள் விசும்பினாள்.

"எனக்கு என் வாழ்க்கையவிட என் தங்கச்சியோட வாழ்க்கைதான் முக்கியம். வெளிநாட்டுல இருக்கிற என் பெஸ்ட் பிரண்ட் ராஜிக்கு உன்னைப்பற்றி எழுதினேன். அவன் வெளிநாட்டுல இருந்து வந்ததும் உன்னை கல்யாணம் பண்ணிக் கிறதா தெரிவிச்சிருக்கான். அதுவரைக்கும் எந்தவொரு பிரச்சனையையும், இந்த ஊர் சனங்களின் சொல்லம்புகளையும் உனக்காக நான் தாங்கிக்குவேன்." அவன் உறுதியோடு சொன்னான். அவனது பாசத்தை எண்ணி நந்தினி நெகிழ்ந்து போனாள். ●



# முகங்கள் மாறலாம்....?

## என். உதயகுமார்



"உன்னுடைய பேட்டையில் மொத்தம் எத்தனை குடும்பம் வசிக்கும்?"

நாகப்பனுக்கு சட்டென்று பதில் சொல்லத் தெரியவில்லை.

என்னதான் அவன் அந்த பேட்டை பிஸ்தாவிருந்தாலும் இதையெல்லாம் அவன் நாளும் கணக்கு வைத்துக்கொண்டதில்லை.

"சுமார் எழுபது குடும்பம் இருக்குமுங்க." பணிவுடன் பதில் சொன்னான். சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. நாகப்பனுக்கு அதன் காரணம் தெரியவில்லை. திடீரென்று கப்பல் போன்ற காரில் நான்கைந்து பேர் வந்து, இங்கே நாகப்பன் என்பது யார் என்று தேடியபோது அவனுக்கு அதிர்ச்சியிருந்தது.

தன்னுடைய பேட்டைக்கு வந்து தன்னையே பெயர் சொல்லிக்கேட்கும் அளவிற்கு இவர்கள் யார் என்று நினைக்க ஆச்சர்யமாகவும் இருந்தது.

நாகப்பன் அவர்கள் எதிரே வந்து நின்றதும் அவன் நினைத்ததிற்கு மாறாக அவர்கள் அவனிடம் பணிவுடன்,

"ஐயா உங்களை கையோட அழைத்துவரச் சொன்னார்கள். இப்போதே வந்தீர்களென்றால் நல்லது."

நாகப்பனுக்கு எதிர்த்துப் பேசவொன்றும் தோன்றவில்லை. என்னதான் நடந்து விடுமென்று பார்ப்போம் என காரில் ஏறி அமர்ந்து கொண்டான்.

அவன் பீடியை எடுத்து வாயில் வைத்துக் கொண்டபோது, நெருப்பு வைத்துவிட்டார்கள். அப்போதே நாகப்பனுக்கு புரிந்தது இவர்கள் தன்னிடம் ஏதோ பெரிய உதவியை எதிர்பார்க்கிறார்கள் என்று.

"அப்போ உன் பேட்டையில் மூவாயிரம் நாலாயிரம் வோட்டுக்கள் தேறும் என்று நினைக்கிறேன்."

நாகப்பனுக்கு இப்போது எல்லாம் புரிந்தது. கால்மேல் கால் போட்டுக் கொண்டான். இன்னொரு பீடியை எடுத்து வாயில் வைத்துக்கொண்டான். மீண்டும் நெருப்பு வைத்துவிட்டார்கள்.

"ஆமாங்க ஐயாயிரம் வோட்டுகிட்ட தேறுமுங்க.."

அவனது இந்த வார்த்தையால் மேலிடத்தின் முகத்தில் பிரகாசம் தெரிந்தது.

"நல்லது, அத்தனை வோட்டுக்களும் எனது கட்சிக்கே, எனக்கே வந்து சேரச் செய்வது உனது பொறுப்பு... இந்தா அட்வான்ஸ்...."

"பணம் எதுவும் எனக்கு வேண்டாமுங்க..." நாகப்பன் அடக்கமாய் பதில் சொன்னான்.

"என்னது பணம் வேண்டாமா?" மேலிடம் புருவங்களைத் தூக்கிக்கொண்டது.

"ஆமாங்க எனக்கு பணம் வேண்டாமுங்க." திரும்பவும் அதையே கூறினான்.

"அப்படியானால் வேறு என்ன வேண்டும் கேள்."

"எனக்கு எங்க பேட்டை ஜனங்க நல்லாயிருக்கணுமுங்க...

ஒரு நோய் நொடின்னு வந்தா டவுனுக்கு தூக்கிக்கொண்டு போற வழியிலேயே பாதிப்பேர் உசிரு போயிருதுங்க...."

"அப்படியென்றால்....."

"எங்க ஏரியாவில ஒரு ஆஸ்பத்திரி கட்டணுமுங்க, நாள்பூரா பைப்பு குழாயில தண்ணி வரணுமுங்க" நாகப்பன் அழுத்தத்துடன் கூறினான்.

அவனது பேச்சைக் கேட்டு மேலிடம் சிரித்துக்கொண்டது. பிழைக்கத் தெரியாதவனாய் இருக்கிறானே என்று எண்ணியது.

இவன் என்ன பேட்டை ரௌடியா அல்லது தொண்டனா...?

"நல்லது உனது கோரிக்கைகள் யாவும் நிறைவேற்றப்படும். அதுக்குமுன் நாம் ஆட்சிக்கு வரவேண்டும். அப்போது தான் என்னால் அதைச் செய்யமுடியும்...."

"சரி, நான் என்ன செய்யணுமுங்க..."

"உனது பேட்டை வாக்குகள் ஒன்றுவிடாது எனக்கு விழச் செய்யவேண்டும்.."

"நீங்க கவலைப்படாதீங்க, அது என் பொறுப்புங்க. என் பேட்டை சனங்க என் சொல்லை மீற மாட்டாதுங்க...ஆனால்..." நாகப்பன் தயங்கினான்.

"சொல், என்ன வேண்டும், எனது உறுதியை எழுத்து மூலம் எழுதித்தர வேண்டுமா...?"

"ஐயோ அப்படி எதுவும் வேண்டாமுங்க. எல்லாமே நம்பிக்கை தானுங்கோ.."

எனக்கு என் ஜாதி சனம் நல்லாயிருக்கணுமுங்க. அது போதும்.."

"இனி அவை என் பொறுப்பு, நீ ஆகவேண்டியதைக் கவனி, உனக்கு வேண்டிய உதவிகள் எனது தோழர்கள் எப்பவும் செய்து தருவார்கள்.." நாகப்பனைக் கொண்டுவிட மீண்டும் மேலிடம் உத்தரவு பிறப்பித்தது.

நாகப்பன் பேட்டை பிஸ்தாவாக விருந்தாலும் சற்று வித்தியாசமானவன். நெஞ்சில் ஈரமுள்ளவன். அவனுடைய அலாதியான பேச்சும் முரட்டுத் தோற்றமுமே அவனிடம் மற்றவர்களுக்கு பயத்தையும் மரியாதையையும் ஏற்படுத்தி அவனை அந்தப் பேட்டைக்குத் தலைவனாக்கியது.

நாகப்பனின் மனம் பலவித கற்பனையில் மூழ்கியிருந்தது. தன்னுடைய பேட்டை ஜனங்களுக்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது போல் அவன் மனதில் களிப்புண்டாயிற்று. அவன் தயங்கவில்லை. மறுநாளே செயலில் ஈடுபடத் தொடங்கிவிட்டான். ஒவ்வொரு வீடு வீடாய்ச் சென்று மேலிடத்துப் பெயரைச் சொல்லி வோட்டு போடும்படி வேண்டிக் கொண்டான். அவன் பின்னாலேயே மேலிடத்து ஆட்கள் சிலபேர்.

நாகப்பன் கடுமையாக உழைத்தான். பிரச்சாரம் செய்தான்.

பேட்டை ஜனங்களுக்கு அவன்மீது பயமும் இருந்தது, பக்தியுமிருந்தது. தங்களில் எவரும் நாகப்பனை எதிர்த்து வோட்டுப்போட முடியாது என்று நினைத்தனர். அதனால் அவர்கள் நாகப்பனின் பேச்சிற்கு ஆதரவளிக்க வேண்டியதாயிற்று.

தேர்தல் அன்று நாகப்பன் தன்னுடைய பெரிய முறுக்கு மீசையையும் தடவியபடி வாக்குச் வாசடியிலேயே உலாவிய படியிருந்தான்.

வேறு யாருக்காவது வோட்டு போடும் எண்ணமுடையவர்களிருந்தாலும், நாகப்பனை அங்கே பார்த்ததும் மனசுமாறி அவனது ஆதரவாளருக்கே புள்ளடி போட்டுவிட்டுச் சென்றனர். நாகப்பனின் ஆதரவில் மேலிடம் அந்த பேட்டையில் அதிக வாக்குகளால் வெற்றியீட்டியது. நாகப்பனை அழைத்து மாலை போட்டு கௌரவித்தது.

"எனக்கு இது ஒண்ணும் வேணாமுங்க. உங்களுக்கு வோட்டுப் போட்ட நம்ம ஜனங்க நல்லா இருக்கணும், அது தானெனக்கு முக்கியமுங்க..."

"கவலைப்படாதே. நீ சொன்ன வாக்கை காப்பாற்றிவிட்டாய். காத்திரு உன் ஆசைகள் நிறைவேறும்."

நாகப்பன் காத்திருந்தான். தன் பேட்டைக்கு விடிவு பிறக்கும் என எதிர்பார்த்திருந்தான். நாட் கணக்காய்....வாரக் கணக்காய்...மாதக் கணக்காய் காத்திருந்தும் ஒரு சிறு மதில் சுவர்கூட அவன் பேட்டையில் கட்டுப் படவில்லை.

நாகப்பனுக்கு புரிந்தது. தான் ஏமாந்து விட்டோம் என்பது புரிய ஆரம்பித்தது. நியாயம் கேட்கச் சென்ற அவன், வாசலில் வைத்து மறிக்கப்பட்டே திருப்பி அனுப்பப்பட்டான்.

கொதித்துப்போனான் நாகப்பன். ஆனால் அவர்களது செல்வாக்கின் முன்னால் இவனது அடாவடித்தனங்கள் யாவும் செல்லாத காசுக்களைப் போலாயிற்று.

நாகப்பன் காத்திருந்தான். அடுத்த தேர்தலை எதிர்பார்ப்புடன் காத்திருந்தான். இம்முறையும் அவனைத்தேடி கார் வந்தது. ஆனால் அது வேறு அணியினர் தன்னை ஏமாற்றியவர்களுக்கு பதிலடி கொடுக்க இதுவே நல்ல சந்தர்ப்பம் என எண்ணினான். இவர்களிடமும் அதே நிபந்தனையை மீண்டும் வலியுறுத்தினான். ஆனால் இந்தத் தடவை வெறும் பேச்சளவில் நின்றுவிடாமல் எழுத்து மூலம் எழுதி வாங்கிக்கொண்டான். அதையே துருப்புச்சீட்டாய் ஆக்கிக்கொண்டு, ஜனங் களிடம்தான் ஏமாற்றப்பட்ட கதை சொன்னான் நாகப்பன். அவர்களுக்கு புத்தி புகட்டுவதற்காக வோட்டுக் கேட்டான். இம்முறை ஜனங்களுக்கு அவன் உள்ளம் புரிந்தது. இலகுவாய் அவன் காட்டிய இடத்தில் அவர்களால் புள்ளடி போட முடிந்தது.

ஆட்சி கைமாறிக்கொண்டது. நாகப்பன் மார்தட்டிக்கொண்டான்.

தாமதியாது தனது கோரிக்கைகளை நிறைவேற்றும்படி நின்றான்.

மேலிடம் அவனைப் பார்த்து கேலியாய்ச் சிரித்தது.

வெறும் நோட்டுக்கட்டொன்று மட்டும் 'நன்றி' எனக்கூறி அவன் முகத்தில் வீசி எறியப்பட்டது. நாகப்பன் சோர்ந்து போய் விடவில்லை.

அவர்களது எழுத்து வாக்குமூலத்தை ஆதாரமாக நினைத்தான். ஆனால் அவர்கள் வீசி எறிந்த பண நோட்டுக்களால் அந்தக் காகிதங்கள் பெறுமதியற்றுப் போயின.

நாகப்பன் நம்பிக்கையை இழந்து போகவில்லை.

அடுத்த தேர்தல் வரும்வரை காத்திருந்தான்...

அவனைத்தேடி கப்பல் போன்ற பெரிய கார் வந்து நின்றது. நாகப்பன் காரில் ஏறி அமர்ந்துகொண்டான். பீடியை எடுத்து வாயில் வைத்துக்கொண்டபோது நெருப்பு வைத்து விட்டார்கள்..... ●



# பகிர்ந்து தரும் பாங்கினைப் போல்.....

தருவது— **ரசிகன்**

பொதுச் சேவை போதும் என்று சூரியன் தன் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்ட நேரம்.

சூரிய உழைப்பாளியே ஓய்வுக்குப் போனபின், எமக்கென்ன வேலை என்று கழனிகளில் இருந்து இல்லம் திரும்பிக் கொண்டிருந்தனர் உழவர்கள்.

உழைத்தும், உச்சி வெய்யில் பட்டும் உரமேறிக் கறுத்த உடல்கள்.

உழுது, ஊருக்கும் தந்து, தாமும் உண்டு நெற்கதிர் குவிக்கும் உழவர் பெருமக்கள் இல்லையெனில், உண்ணும் உணவுக்கும் கையேந்தி மாற்றார் கருணைக் கண் பார்வைக்கு ஏங்கி வாழ வேண்டியிருக்கும் வேழ நீள் நாடு.

என்றெல்லாம் எண்ணம் பல கொண்டபடி வயல் வரப்பில் நடந்து கொண்டிருந்தான் உழவன்-இளைஞன்- உருக்குநிகர் உடலினன் இடும்பன்.

இவை எல்லாம் எம் உழைப்பு. இவை எல்லாம் எம் வியர்வையின் விளைவு.

பசுமையாய், கண்களுக்குக் குளிர்ச்சியாய் விரிந்து பரந்து கிடந்த கழனிகளை பூரிப்போடு பார்த்தபடி நடந்தவனை,

கரவோசை செய்து அழைக்காமல் வளையோசை எழுப்பி திரும்பிப் பார்த்திட வைத்தவள்-பூமணி.

வளையோசை கேட்டுத் திரும்பியவன் பூமணிதான் தன்னைத் தொடர்ந்து வருகிறாள் என்று அறிந்தவுடன், கால்களுக்கு தொடர்ந்து செல்லாமல் தடை போட்டுவிட்டு,

பூத்துக் குலுங்கும் நெற்கதிர்கள்போல், அழகு செழித்துக்கிடக்கும் பருவத்தாள் தன் பக்கம் வரும்வரை காத்திருந்தான்.

கூந்தலில் சூடிய மலர்களின் வாசனை முன்னே வந்து அவன் நாசியை தொட்டுச் செல்ல, பின்னே வந்தது மலர் ரதம்.

சிரித்தான். அவள் புன்னகையை தொலைத்தவள்போல் அவனைப் பார்த்து முறைத்தாள்.

இடும்பனுக்கு கரும்பினும் இனியவளின் கோபத்தில் காய்ச்சிய இரும்பாய் சுடுவது வலித்தது.

தலையைச் சொறிந்து கொண்டான்.

அவளோ மோதுவதுபோல் நின்றாள். அவையோ மிரட்டுவதுபோல் நிமிர்ந்து, முரட்டுக்காளையின் இரு கொம்புகளும் மோதவராதே என்று பார்ப்போரை மிரட்டுவதுபோல தெரிந்தன.

முரட்டுக்காளையின் கொம்புகள் ஆளைக் கொல்லும். ஒரே குத்தில் கொன்றுவிடும். ஆனால் இந்த இதய திருட்டுக்காரியின் கொம்புகள் தினம் தினம் அல்லவோ கொன்று வதைக்கின்றன. உடலை மட்டுமா? உள்ளத்தையும் அல்லவோ தொல்லைப்படுத்தித் தொலைக்கின்றன.

இடும்பன் தன்மீது, அதுவும் குறிப்பாக ஒரே இடத்தில் விழிகளை மேய விட்டு இரசிப்பதை கண்டும் காணாதுபோல நடந்துகொண்டு,

"வழியை விடுங்கள். இடையில் நின்றுதான் யோசிப்பதாக்கும்?"

என்றாள் பூமணி. உடனே குறும்பாய் சிரித்தான் உழவன் இடும்பன்.

"இதில் என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது?"

என்றாள் போலிச் சினத்தோடு பூமணி.

"நீ சொன்னதில் நீயறியாத நியாயம் ஒன்று கண்டேன். அதனால் சிரித்தேன்."

கண்களை சிமிட்டியபடி உரைத்தான் இடும்பன். மொட்டவிழ்ந்த மலர்போல கண்களை விரித்துக்கேட்டாள் பூமணி;

"என்ன நியாயம்?"

இன்னும் சற்று சேலையை வரிந்து கட்டினால் உடைந்துவிடுமோ என்று இடும்பனின் வாலிப நெஞ்சம் வருந்தக் காரணமாகவிருந்த சிற்றிடைமீது விழிகளை நிறுத்தியபடி பதில் சொன்னான்;

"இன்பபுரிக்குப் போகும் பயணத்தில் இடையில் தங்கிச் செல்லலாமே தவிர, அங்கேயே தாமதித்து நின்று யோசித்துக் கொண்டிருக்கக்கூடாது."

வெள்ளைச் சுவரில் துப்பிய வெற்றிலைச் சாறுபோல, பூமணி முகத்தில் வெட்கம் தெரிந்தது.

"உங்களுக்கு வேறு யோசனையே கிடையாது. விவஸ்தையும் கிடையாது."

என்றாள் வெட்கத்தின் சாயல் குரலில் தெரிய.

வெட்கமாய் இருந்தபோதும் மனம் விரும்பி ரசிக்கத்தான் செய்தது இடும்பன் சொன்னதை.

"நிலமறிந்து விதைப்பது, பருவமறிந்து பயிர்செய்வது உழவர் நாம் அறிந்ததுதான். அதுபோல வயதிருக்கும்போது அதற்குரிய குணமிருக்கும் என்பது வாலிப வயது கடந்தவர் அறிவர். கடக்கப்போவோர் அறியத் தொடங்குவர். நாம் தொடங்கலாமா பூமணி?"

கேலியும், விஷமமும் குரலில் தொனித்த



போதும், அவன் விழிகளில் தாபம் தெரிந்ததை பூமணி புரிந்துகொண்டாள்.

பூமணிக்கும் தாபம்தான். ஆனால் வெளியே காட்ட வெட்கம்தான்.

"நான் போக வேண்டும். வழியை விடுங்கள்."

என்றாள் அவன் கையருகில் கரும்பு போல் நின்றுகொண்டிருந்த காரிகையாள்.

"என் கரங்களும் போகவேண்டும் வழி காட்டு என்றுதான் என்னிடம் வாதாட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றன."

"போகலாமே? யார் தடுத்தார்களாம்?"

"இதுவரை தடுக்கவில்லைத்தான். இனி தடுக்கலாமோ என்று சந்தேகம். அதுதான் தயக்கம்."

பூமணி அவன் முகம் நோக்கினாள்.

அவன் அவள் இதழ்களை விழிகளில் குறும்புதெரிய நோக்கினான்.

நோக்குவது புரிந்து, பூமணி வெட்கப் பட்டாள். அவன் விழிகள் பட்டதால் இதழ்களும் துடித்தன.

அவன் சமீபமும், அவன் மூச்சுக் காற்றின் சூடும், அவன் விழிகளின் குறும்பும், பேச்சின் தொனியும், தனிமையும் ஆசை பாதி-அச்சம்பாதி தர, அவள் நெற்றி வியர்த்தது.

## இலக்கிய நயம்

வயல் வரப்பு. வீசும் காற்று. இதமான மாலைப்பொழுது. அப்படியிருக்கவும் நெற்றி வியர்க்கிறதே? தேகம் எல்லாம் சூடு பரவுவதுபோல் தெரிகிறதே என்று பூமணி மனதுள் வியந்தாள்.

அவள் நெற்றியில் மணித்துளிகளாய் தெரிந்த வியர்வைத் துளிகள் கண்ட இடும்பன், இடக்கரம் நீட்டி, ஆட்காட்டி விரல் விரித்து, வியர்வைத் துளி துடைத்தான்.

விரல் பட்டதனால் தீ மேலும் எரிந்தது. திரி தூண்டப்பட்ட விளக்காக ஆசை மாறியது.

நெற்றியில் தொட்ட விரல் ஊர்ந்து அவள் நாசியில் இறங்கிவந்து, மேல் உதட்டில் நின்று, கோடு வரைந்து, கீழ் உதட்டில் தாவியது. இப்போது இன்னொரு விரலும் கரும்பு தின்ன கூலி எதற்கு என்பதுபோல உதவிக்கு ஓடிவர, இதழ்களை பிழிவதுபோல பிடித்துக்கொண்டு, அவள் விழிகளுக்குள் பார்த்து, அங்கே தெரிந்த கிறக்கம் அழைப்பாகத் தெரிய, துணிந்து தன் உதடுகளை அவள் இதழ் அரங்கில் இறக்கிவிட்டான் இடும்பன்.

பூமணி துவள, முதுகில் இரு கரம் கொடுத்து அணைத்தான்.

அணைத்தபோது தன் தேகமெங்கும் புத்துணர்ச்சி பரவியது போல் உணர்ந்தான்.

கழனியிலே விளைந்த நெல்லை ஊருக்கு பகிர்ந்து கொடுக்கும் உழவர் குடிக்கு தன் பூமேனியிலே விளைந்த அழகை என் மேனியிலும் பகிர்ந்து தரும் இவள் ஒப்பானவள்தான்.

தலை வாழை இலையிலே பகிர்ந்துண்ணும் விருந்துபோல, தன் மனதுக்குப் பிடித்தவனுக்கு இனியது பகிர்ந்து தரும் இவளும் விளங்குகிறாள்.

உழைத்து தேடிய பொருளை பகிர்ந்து வழங்கும் வள்ளலின் செயலுக்கு, செழித்துக் கிடக்கும் இவள் தேகத்தால் என்னைத் தழுவும் செயலும் ஒப்பிடப்படலாம்.

என்றெல்லாம் எண்ணிக்கொண்டு இடும்பன் பூமணி என்னும் பொற்பாவையை காற்றுக்கும் இடம் கொடா இறுக்கமுடன் தழுவிக்கொண்டான்.

இடும்பனின் எண்ணத்தை ஒட்டிய குறள் ஒன்றை நாம் காண்போம்.

**தம்மில் இருந்து தமதுபாத்து- உண்டாற்றால்**
**அம்மா அரிவை முயக்கு.**

குறள்- 1107, அதிகாரம்- 111

அழகிய மாநிறம் உடைய இவளது தழுவுதல் வீட்டிலிருக்கும் ஈட்டிய பொருளை பகுத்து கொடுத்து உண்பது போன்றது என்பதுதான் குறளின் பொருள். இடும்பனின் நினைவு சரிதானே?

## குறுக்கெழுத்துப் போட்டி இல—63

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | |
| | | ■ | 4 | | | |
| 5 | | | | | ■ | ■ |
| | | ■ | | ■ | 6 | 7 |
| ■ | | 8 | ■ | 9 | ■ | |
| 10 | ■ | 11 | | | | |
| 12 | | | | | ■ | |

### இடமிருந்து வலம்

1. தேர்தலில் இது எத்தனை கிடைக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் வெற்றியும் தோல்வியும்.
3. முன்னறி தெய்வங்களில் ஒருவர்.
4. நல்ல மனம் உடையோரிடமிருந்து இது கிடைப்பது பெருமை.
5. பத்து வருடங்கள் சேர்ந்தால் இது உருவாகும்.
6. இது வெல்லத்தில் ஆக்கப்பட்டால் சுவைதான்.
11. இதிலே ஒன்பது வகை உண்டு.
12. இவர் கையில் இருக்கும் கத்தியால் ஆபத்தில்லை என்பார்கள்.

### மேலிருந்து கீழ்

1. பக்தர்கள் அடிக்கடி செய்வது.
2. இதனை வெறுத்தவர்கள் துறவறம் பூண்டதுண்டு.
4. சிலர் எதற்கெடுத்தாலும் இதுதான் செய்வார்கள்.
7. மனிதனுக்குள்ள குணங்களில் இதுவும் ஒன்று.
8. இவரது பொறுப்பின்மை விபத்தினை உண்டாக்கும்.
9. இதற்கு யோசித்துத்தான் பதில் கண்டு பிடிக்க வேண்டும்.
10. இதை அறிய நா வேண்டும்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 27.08.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-63
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-61க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நா | ளி | 2 த | ழ் | ■ | 3 வி | 4 சா |
| 5 த | லை | ப் | பா | 6 கை | ■ | ட் |
| ஸ் | ■ | பு | ■ | யே | ■ | டை |
| வ | 7 க | ■ | 8 க | டு | கு | ■ |
| 9 ர | ப் | 10 ப | ர் | ■ | 11 வே | 12 தி |
| 13 ம் | ப | ர | வி | ■ | ள் | கி |
| ■ | ம் | ண் | ■ | 14 த | வி | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.61இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. என்.ஜீவன் புத்தளம்.
2. செல்வி. நி. சுபத்திரா தெஹிவளை.
3. எஸ்.மகேஸ்வரி நுவரெலியா.
4. எம்.சித்தீக் கண்டி.
5. ஆர்.தினேஷ்குமார் கொழும்பு-06.
6. திருமதி.ஜெமீலா காதர் சிலாபம்.
7. ம. சிவப்பிரகாசம் மட்டக்களப்பு.
8. எம்.ஐ. பைரூஸ் பஸ்யால.
9. ச.செந்தூரன் நானுஓயா.
10. எ. அன்ரன் சில்வஸ்ரர் ராகம.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா; மனம் அமைதிபெற என்ன செய்யலாம்?

சசி-வ/தெற்கிலுப்பைக்குளம்.

யோகம் செய்யலாம்.

□□

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இப்போது படங்களில் நடிப்பது இல்லையா?

ஆர்.கலா-நிவித்திகல.

தற்போது இல்லை. ஆனால் விரைவில் பாலசந்தர் படம் ஒன்றில் நடிக்கக்கூடும்.

□□

பிரபாகரன் போராட்டத்தை நிறுத்தி விட்டு சமாதானத்திற்கு வந்தால்?

எ.ஃப்.மும்தாஜ்-அட்டாளைச்சேனை.

வந்தால்கூட தெற்கில் உள்ளவர் களின் மனக்கதவு திறக்குமா என்று தெரியவில்லை.

□□

"எதையும் தாங்கும் இதயம்" என்பார்களே? இதனை காக்க ஒரு சிறந்த வழி கூற முடியுமா?

ஹிதாயா ஹுஸைன்-தியத்தலாவை.

இருதய நோய் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

□□

அவதார புருஷர்கள் எல்லோரும் இந்தியாவிலேயே அவதரிக்கிறார்களே? ஏன் இலங்கையில் அவதரிப்பதில்லை?

எஸ்.இராஜாராம்-இரத்தினபுரி.

விபுலானந்தர்-யோகர் சுவாமிகள் என்று தொடரும் பட்டியல் உண்டு இங்கும்.

□□

மனச்சாட்சி என்று ஒன்று இல்லா விட்டால்......?

இ.எம்.ஹனீபா-முள்ளிப்பொத்தானை.

அப்படி என்ற ஒன்று இப்போது மட்டும் இருக்கிறதா என்ன......?

□□

நிம்மதியாக வாழ எது முக்கியம்?

எஸ்.பத்மா-கொழும்பு-10.

மதி.

□□

நடிகைகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பி.எஸ்.குமார்-காரைதீவு-07.

அழகாக இருப்பதாக நடிப்பவர்கள். விதிவிலக்காக சிலர் மட்டும் அழகாக இருக்கிறார்கள்.

□□

இரசிகர்கள் அதிகமுள்ள நடிகை யார்?

கே.கணேசமூர்த்தி-அலவத்துகொட.

மனோரமா.

□□

காதல் கட்டுடலிலா, களங்கமற்ற அன்பிலா?

எஸ்.கலாதாசன்-எடின்பரோ எஸ்டேட்.

கட்டுடலில் மட்டும் என்றால் விரைவில் பட்டுவிடும். அன்பென்னும் நீர் இன்றேல் காதல் பயிர் வாடிவிடும்.

□□

சினிமா வாழ்க்கைக்கும்- நிஜ வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

திருமதி சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை-07.

சினிமாவில் கமராவுக்கு முன் மட்டும் நடித்தால் போதும். ஆனால்...(ஊகிக்கவும்)

□□

ஒரு பெண்ணுக்கு அமைய வேண்டியது பிறந்த வீடா? புகுந்த வீடா?

எ.எல்.ஷாம்-காத்தான்குடி-06.

இரண்டில் எது வாடகை வீடாக இல்லையோ அது.

□□

நமது நாட்டு மக்கள் அனைவரும் ஒரே இன மக்களாக இருந்தால் நமது நாடு எப்படி இருக்கும்?

எஸ்.சாந்தி பரமசிவம்-பொகவந்தலா.

இனம் ஒன்றாக இருந்தால் மட்டும் ஒற்றுமை ஓங்கிவிடாது. மதம்-சாதி என்றும் மோதிச்சாக பல வழிகள் இருக்கிறதே.

□□

ஆனைக்கு அடி சறுக்குமா?

ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

சறுக்கும்.- பார்த்து நடக்காவிட்டால்.

□□

ஒரு ஆணும்-பெண்ணும் எத்தனை வருடங்கள் காதலிக்கலாம்?

எஸ்.பி.மோகன்ராஜ்-அட்டாம்பிட்டிய.

காதலை எந்தக் கடையில் வாங்கியிருக்கிறீர்கள்? தயாரிப்பு எப்படி' என்றெல்லாம் தெரிந்தால்தான் எத்தனை வருசம் பாவிக்கும் என்று உத்தரவாதம் தர முடியும். விபரத்தை எழுதியனுப்புக.

□□

கல்விக்கு அவசியமானது எது?

எஸ்.டேனியல்-பசுமலை.

கற்கும் ஆர்வம்.

□□

எத்தனை பிறவி எடுத்தாலும் கிடைக் காதது எது?

எஸ்.சரோஜா-ஹட்டன்.

சாகாவரம்.

□□

வசதி இருந்தும் படிப்பில் அக்கறை காட்டாதவர்கள் பற்றி?

பெ.தமிழ்ச்செல்வி-பறகடுவ.

நிரந்தர செல்வம் எதுவென்பதை அறியாமல் இருப்பவர்கள்.

□□

நடிகர் பிரசாந்தின் படங்களில் காதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏன்?

கே.என்.நிதாஸ்-தோப்பூர்-2.

இளைஞனாக இருக்கும் நடிகர் என்ப தால். வயதுள்ளபோதே வசதியான பாத்திரம் கொடுக்க நினைக்கிறார்கள்.

□□

அன்புள்ள சிந்தியா! சம்சார வாழ்க்கைக்கும் சந்நியாசி வாழ்க்கைக்கும் என்ன வேறுபாடு?

திருமதி பரிமளாதேவி இலங்கேஸ்வரன் அலவத்துகொட.

முன்னதில் பொறுப்பு அதிகம். பின்னதில் கிடையாது.

□□

# மகாபாரதம்

அங்கம் 42

**இவ்வாரம் (21.08.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: இம்மகா காவியத்தின் மிக முக்கியமான கட்டமாக விளங்குவது இந்திரப் பிரஸ்தத்தில் பாண்டவர்களில் தலைமகன் யுதிஷ்டிர மன்னன் நடத்தும் இராஜசூய யாகம். இந்த யாகம் இல்லையென்றால் மகாபாரதக் கதையே இல்லை. மல்யுத்தத்துக்கு ஜராசந்தன் பீமனை தேர்ந்தான். அர்ச்சுனனைத் தேர்ந்திருந்தால் மற்போரில் ஜராசந்தனை அவனால் வெல்ல முடியாது. யாகமும் நடைபெற முடியாமற் போயிருக்கும்.

-காட்சி தொடக்கம்-

மல்யுத்த மேடையில் பீமனும் ஜராசந்தனும் பூமாதேவியையும் சூரியனையும் வணங்கியபின் பொருதுகின்றனர். மகத நாட்டு மக்கள் மேடையைச் சூழ்ந்து நிற்கின்றனர். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் மக்களுடன் காணப்படுகின்றனர். இருவரும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் சண்டையிடும்போது பீமன் ஜராசந்தனின் கால்களைப் பிடிக்கிறான். கிருஷ்ணன் பீமனுக்கு ஒரு குச்சியை எடுத்து இரு கூறாகப் பிளந்து சைகை காட்டுகிறார். பீமனும் அதனைப் புரிந்துகொண்டு ஜராசந்தனை இரு கூறாகப் பிளந்து இருபுறமும் எறிகிறான். ஆனால் அவை இரண்டும் ஒன்றாக இணைந்து ஜராசந்தன் எழுந்து பீமனைப் பார்த்துச் சிரிக்கிறான். மூன்று தடவைகள் இவ்வாறு நடந்ததும் கிருஷ்ணர் சைகை மூலம் இரு துண்டுகளையும் மாறு திசைகளில் எறியுமாறு சாடை காட்டியதும் பீமனுக்குப் புரிந்துவிட்டது. ஜராசந்தனின் உடலைப் பிளந்து வலப் பகுதியை இடது புறமும் இடப் பகுதியை வலது புறமுமாக வீசுகிறான். அத்துடன் ஜராசந்தனின் உயிர் பிரிகிறது. வெற்றி பெற்ற பீமன் கண்ணனை வணங்குகிறான்.

-காட்சி மாற்றம்-

கிருஷ்ணர், பீமன், அர்ச்சுனன் ஆகியோர் சிறைக்கூடம் வந்து ஜராசந்தனால் சிறைப் பிடிக்கப்பட்ட 86 மன்னர்களையும் விடுவிக்கின்றனர்.

கிருஷ்: நான் வாசுதேவ கிருஷ்ணன். இவர்களிருவரும் பாண்டு மாமன்னரின் புதல்வர்கள் பீமனும் அர்ச்சுனனும். ஜராசந்தனின் கொடூரம் ஒழிந்து விட்டது. பீமசேனன் அவனைக் கொன்று விட்டான். நீங்கள் விடுதலை பெறுகிறீர்கள்.

மன்னர்கள்: வாசுதேவ கிருஷ்ணன் வாழ்க! பீமசேனர் வாழ்க! அர்ச்சுனர் வாழ்க!

▫▫▫▫

ஜராசந்தன் மகன் சகோடயன் கிருஷ்ணன், பீமன், அர்ச்சுனனிடம் வருகிறான்.

சகோ: தேவகி நந்தனா! கேசவா! எனது தந்தை, மகத நாட்டு மன்னர் செய்த அட்டூழியங்களுக்கு நாட்டு மக்கள் சார்பில் மன்னிப்புக் கோருகிறேன். எனது தந்தையின் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு அனுமதிப்பீர்களா பிரபு..?

கிருஷ்: மகத நாட்டு மன்னர் சகோடயனே! உமது தந்தையின் ஈமக்கிரியைகளைச் செய்ய எவருடைய அனுமதியையும் கோரவேண்டியதில்லை. நாங்கள் மேற்கொண்டு இங்கு வந்த கடமை முடிந்துவிட்டது. உமது கடமைகளை நீர் நிறைவேற்றலாம்.

சகோ: என்னை மகத நாட்டு அரசன் என்று அழைத்தீர்களே!

கிருஷ்: ஆமாம்! அதற்கு நீரே பொருத்தமானவர். இறைவன் அருளால் நலமெலாம் பெறுவீர்! வாழ்க!

<u>பின்னணிப்பாடல்:</u>

*அறநெறி தழைக்க அவனியிலுதித்த*
*அவதார மூர்த்தியின் அருஞ் செயலதனால்*
*அரசர்களனைவரும் அடிமையகன்றனர்*
*பாண்டவரணியினில் பலமுடனிணைந்தனர்.*

▫▫▫▫

காலத்தின் குரல்: இராஜசூய யாகம் நடத்துவதற்கு இடையூறெனக் கருதப்பட்ட ஜராசந்தன் மடிந்ததும் யுதிஷ்டிரனை இந்திரப் பிரஸ்தத்தில் விட்டுவிட்டு ஏனைய நால்வரும் நான்கு திக்குகளுக்கும் திக் விஜயம் சென்றனர். பெரும்பாலான நாட்டு மன்னர்கள் பாண்டு புத்திரர்களை வரவேற்று கௌரவித்து அனுப்பினர். எதிர்த்த மன்னர்கள் வெற்றி கொள்ளப்பட்டனர். அவர்கள் நாடு திரும்பியதும் யாகத்துக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. அழைப்போலைகள் அனுப்பப்பட்டன. அஸ்தினாபுரிக்கு சகாதேவனை அனுப்பி வைத்தனர். சகுனிக்கு விடுக்கப்பட்ட அழைப்பினைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தவனாகக் காணப்பட்டான். சகுனியிடம் காணப்பட்ட இந்த விசித்திர மாற்றம் துரியோதனனுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது.

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனை- துரியோதனன் அமைதியிழந்திருக்கிறான். கர்ணன் அங்கு வருகிறான்.

கர்ண: துரியோதனா! என் நண்பனே!

துரி: கர்ணா! மாமாவின் மகிழ்ச்சியைப் பார்த்தாயா? இந்திரப் பிரஸ்தத்துக்கு, பறந்துபோய் விடுவார்போலத் தெரிகிறதே!

கர்ண: மாமாவின் போக்கு பற்றி என்னால் எதையும் கூற முடியாதே! அவருடைய செயல்கள் எல்லாமே மாறுபட்டுத் தானே தென்படுகின்றன.

துரி: மாமா மட்டுமென்ன..! அப்பாவும் ஆனந்த வெள்ளத்தில்தானே மூழ்கிக் கிடக்கிறார்.

கர்ண: அவருடைய மகிழ்ச்சி உண்மையானதே!

துரி: அப்போ மாமாவின் மகிழ்ச்சி போலியானதா?

கர்ண: அவருடைய போக்குகள் அத்தனையும் சூதும் சூழ்ச்சியும் இணைந்ததாகவே இருக்கலாம்.

சகுனி: *(வந்துகொண்டே)* யாரைப் பற்றிய விமர்சனம் நடக்கிறது அங்க நாட்டு அதிபதியே?
*(தொடர்ந்து)* அங்க நாட்டரசனே! பாசாங்கு செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஜராசந்தனின் அழிவு பாண்டவர்களின் பெருமையை உயர்த்தி விட்டது. சகுனி இவற்றால் மாற்றமடைந்துவிட்டான் என்று கருத வேண்டாம். துரியோதனா பாண்டவர்கள் யாகம் நடத்தும்போது நீ ஒதுங்கியிருந்தால் நீ குறுகிய உள்ளம் படைத்தவன் என்று குறை கூறப்படுவாய். காண்டவ பிரஸ்தத்தை சொர்க்க புரியாக மாற்றியமையினால் அவர்கள் இன்று பெரும்பாலானோரால் மதிக்கும் அளவு உயர்ந்துவிட்டார்கள். அஸ்தினாபுரத்தையும் அவர்கள் வென்றுவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா?
கோபமுற்ற துரியோதனனை கர்ணன் சாந்தப்படுத்துகிறான்.

கர்ண: கண்டவர்களெல்லாம் கொய்யுமளவு கனித்த கனியல்ல அஸ்தினாபுரி..?

சகுனி: அரசியலுக்கும் கவிதைக்கும் பெருமளவு வித்தியாசமுண்டு கர்ணா..! உவமைகளுக்கு அரசியலில் இடமில்லை. அதிகமாகப் பேசுவதை நிறுத்திக்கொள்! யாகத்துக்கு அழைப்பு வந்தால் ஏற்றுக் கொள். சிரிக்க முடியவில்லையானால் என்னிடம் பெற்றுக்கொள். பொறாமை கொள்வதானால் அதனை வெளிக் காட்டிக் கொள்ளலாகாது. இதுதான் இந்த சகுனியின் விவேகமுடைய பாதை!

-காட்சி மாற்றம்-

திருதராட்டினர் அரண்மனை- காந்தாரி வருகிறார். மன்னன் அவளின் கைகளைப் பற்றுகிறார்.

காந்: உறங்கப் போகவில்லையா பிரபு?

திருத: தூங்க முடியவில்லையே! அரண்மனை மருத்துவர்களாலும் எனது தூக்கமின்மையைப் போக்க முடியவில்லை.

காந்: விதுரர் ஒரு தடவை தூங்க முடியாதவர்களைப் பற்றிக் கூறியது நினைவிருக்கிறதா? எதிரியின் பலத்தை நினைத்து வெதும்புபவர்; எல்லாவற்றையும் இழந்தவர்; அடுத்து திருடர்கள். இவர்களுக்கு மட்டுமே உறக்கம் வருவதில்லையாம்.

திருத: அந்த மூன்றும் எனக்குப் பொருந்தும். எனது அபிலாசைகளை அடைய முடியாதமையினால் பாண்டவர்களின் இராஜசூய யாகம் பற்றி மகிழ்ச்சியினை வெளிப்படுத்த முடியவில்லை. விதுரரின் அரசியல் சாணக்கியத்தால் சகலவற்றையும் நான் இழந்தேன். துரியோதனனுக்குரியவற்றில் பாதியை அபகரித்து பாண்டவர்களுக்குத் தந்தமையினாலும் பாண்டவர்களுக்குரித்துடையவற்றில் பாதியைப் பறித்து துரியோதனனுக்கு கொடுத்தமையினாலும் நான் திருடனாகிவிட்டேனே! ஆனால் என்னுடன் என் மனம் ஒத்துழைக்க மறுக்கிறது. ஓர் உண்மையைக் கூறுகிறேன். என்னை நம்பு. என் தம்பி பாண்டுவின் புத்திரன்- யுதிஷ்டிரன் நடத்தவிருக்கும் இராஜசூய யாகம் எனக்கு நிச்சயம் மகிழ்ச்சியையே தருகிறது.

-காட்சி மாற்றம்-

காலத்தின் குரல்: இந்திரப் பிரஸ்தம் இராஜசூய யாகத்துக்கான சகல ஆயத்தங்களுடன்பொலிவுற்றுக் காணப்படுகிறது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அழைக்கப்பட்ட அரசர்கள் அணிவகுத்து அந்நாட்டை நோக்கிச் செல்கின்றனர். திருதராட்டினர், பிதாமகர் பீஷ்மர், துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், துரியோதனன், துச்சாதனன், கர்ணன், விகர்ணன்,சகுனி, துவாரகை நாயகர்களான கிருஷ்ணன், அவர் அண்ணன் பலராமன் ஆகியோர் அங்கு வந்து சேர்ந்து விட்டனர். சிந்து நாட்டு மன்னன் ஜயத்ரதன்கூட வந்துவிட்டான். அதோ செத்தி நாட்டின் மன்னன் சிசுபாலனும் வருகிறான்.
*சிசுபாலன் இரதத்தில் வருகிறான்.*

கால.குரல்: *(தொடர்ந்து)* சிசுபாலன் கிருஷ்ணனின் அத்தை மகன். குந்தியின் மற்றுமொரு சகோதரியின் புத்திரன். சிசுபாலன் இந்திரப் பிரஸ்தத்தை அடையுமுன் அவன் வரலாறு பற்றித் தெரிந்து கொள்வது நல்லது. இதுதான் அவனுடைய இறுதி யாத்திரை. அவன் கதை விசித்திரமானது. ஒருவனின் வாழ்க்கையின் ஆரம்ப நடவடிக்கைகளே அவனுடைய எதிர்காலத்தை வடிவமைக்கிறது. ஆகவே செத்தி நாட்டுக்கு என்னுடன் வாருங்கள். சிசுபாலன் பிறப்பதுடன் கதையைத் தொடங்குகிறேன்.

-காட்சி பின்னோக்கு-

செத்தி நாடு- இடி மின்னல் வானில் மோத சிசுபாலனின் தாய் பிரசவ வேதனையில் துடிக்கிறாள். குழந்தையும் பிறக்கிறது.

தாதி: மகாராணி ஒரு பூத உருக்கொண்ட குழந்தையையல்லவோ பெற்றிருக்கிறீர்! குழந்தை நான்கு கைகளுடனும் மூன்று கண்களுடனும் பிறந்து அழுகிறது.

தாதி: மகாராணி! இதனை என்ன செய்வது?

தாதிமார்: மகாராணி இதனைத் தூர வீசிவிடுங்கள்.
தாயார் குழந்தையை எடுத்து மடியில் கிடத்தியவாறு அழுகிறாள்.

தாயார்: இறைவா! இத்தகைய தண்டனைக்கு நான் என்ன குற்றம் செய்தேன்...?

அசரீரி: இக்குழந்தையை வீசிவிடாதே! இவன் ஒரு பெரும் வீரனாக சரித்திரம் படைப்பான்.

ம.ராணி: இவ்வாறு ஒரு குழந்தை பிறந்தால் இவனுடைய முடிவு எவ்வாறிருக்கும்...?

அசரீரி: இவன் எவனுடைய மடியில் இருக்கும் போது இவனுடைய மேலதிக அங்கங்கள் மறைகின்றனவோ அவனே இவனுடைய முடிவுக்குக் காரணமாவான்.
அரண்மனையிலுள்ள பலரிடம் குழந்தை கொடுக்கப்படுகிறது. ஆனால் மேலதிக உறுப்புகள் மறையவில்லை.

-காட்சி மாற்றம்-

தேவகி- வாசுதேவனுடன் கிருஷ்ணனும் பலராமனும் செத்தி நாட்டு அரண்மனை வருகின்றனர்.
குழந்தை சிசுபாலனுடன் தாயார் அழுது கொண்டிருக்கிறாள்.

கிருஷ்: குழந்தையை என்னிடம் தாருங்கள் அத்தை!

பலரா: இல்லை! நானே மூத்தவன்! நான்தான் முதலில் அவனைத் தூக்கவேண்டும்.

தேவகி: வீணாக அழவேண்டாம் மைத்துனி! இறைவன் காரணமின்றி இவ்வாறு படைக்க மாட்டான். எங்கே... குழந்தையை என்னிடம் தாருங்கள். ஆகா என்ன அழகாகச் *சிரிக்கிறான்....!
வாசுதேவனும் குழந்தையை எடுக்கும்போது பலராமன் தன்னிடம் தரும்படி கோருகிறான். பலராமனிடம் கொடுக்கப்பட்ட குழந்தையை கிருஷ்ணன் பெற்று விளையாடும்போது குழந்தையின் மேலதிக உறுப்புகள் மறைகின்றன.

-காட்சி மாற்றம்-

தொட்டிலில் கிடத்தப்பட்டுள்ள குழந்தையைக் கண்டு தாயார் புலம்புகிறார்.

தாயார்: கிருஷ்ணனா உன்னைக் கொல்லப் போகிறான்? மகனே! அப்பேற்பட்ட கொடுமையையா நீ கிருஷ்ணனுக்குச் செய்யப் போகிறாய்?

▫▫▫▫

கிருஷ்ணன் உறங்கும்போது சிசுபாலனின் தாய் அவனுடைய காலடியில் நின்று கண்ணீர் விடுகிறாள். கண்ணீர்த்துளி தன் காலில் பட்டதும் கிருஷ்ணன் கண் விழிக்கிறான்.

கிருஷ்: அத்தை! என்ன அத்தை! ஏன் அழுகிறீர்கள்?

தாய்: கண்ணா! என் மகனை நீ கொல்லப் போகிறாயா?

கிருஷ்: ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள்?

தாய்: இவன் பிறந்த வேளையில் இறைவனிடம் கேட்டபோது அசரீரி கூறியது. எவனுடைய மடியில் இவனுடைய மேலதிக உறுப்புகள் மறையுமோ அவன் கையாலேயே இவன் மடிவான் என்று கூறியது.

கிருஷ்: ஒரு தாய் தன் குழந்தையின் நலன் பற்றி இறைவனிடம் கேட்கலாம். நீங்களோ உங்கள் மகனின் முடிவு பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அசரீரி தெய்வ வாக்கு. அது பொய்ப்பதில்லை. ஒருவனின் தலைவிதி எவ்வாறிருக்குமோ அதன்படிதான் யாவும் அமையும்.

தாய்: அப்போ நீயே இவனைக் கொல்லப் போகிறாயா? கண்ணா! உன் அத்தை மகன் இவன். இவனைக் கொன்று விடாதே!

கிருஷ்: நான் நிச்சயமாக கருணையுடன் நடந்து கொள்ளுவேன்.

தாய்: இது கருணையல்ல கண்ணா...

கிருஷ்: உண்மைதான். இது ஒரு விமோசனமாகும் அத்தை! பாவ விமோசனம்!

தாய்: இவற்றை புரிந்துகொள்ளும் சக்தி என்னிடமில்லை. எனது ஒரே மகனை கொல்லமாட்டேன் என்று எனக்கு வரம் கொடு. கை கூப்பி கெஞ்சி வேண்டுகிறேன் கண்ணா! அவன் என்ன குற்றம் செய்தாலும் அவனை மன்னித்து விடுவதாக எனக்கு வாக்குக்கொடு.

கிருஷ்: அந்த வாக்கினை துர்க்காதேவிதான் தரமுடியும் அத்தை. இருப்பினும் அவன் மரணதண்டனை பெறும் குற்றங்களை செய்தாலும் நூறு தடவைகள் நான் அவனை மன்னிப்பேன் என்று மட்டும் வாக்களிக்கிறேன்.

<u>பின்னணிப்பாடல்:</u>

**விண்ணவர் கோமகன் வேத நாயகன்**
**மண்ணிலற நெறி தளைத்திட வுதித்தவன்**
**புண்ணிய முணரா சேத்தி நாட்டதிபன்**
**பண்ணிய குறைகளை பலமுறை பொறுத்தனன்.**
**அன்னையின் வேண்டலை அகமதிலேற்றியே**
**சின்னவன் சிசு பாலனின் செய்கையால்**
**சீறிய சினந்தனை சதம்வரை அடக்கியே**
**இறுதியிலன்றோ விமோசனமளித்தனன்.**

-காட்சி மாற்றம்-

சிசுபாலன் இரதத்தில் வந்துகொண்டிருக்கிறான்.

கால.குரல்: அந்தக் குழந்தைதான் சிசுபாலன். அவனுடைய இறுதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

▫▫▫▫

மற்றோர் புறத்தில் கிருஷ்ணன் மற்றும் பலராமர் இரதத்தில் அந்தப்புரம் விரைகின்றர்.

▫▫▫▫

இந்திர பிரஸ்தம்–குந்தியின் அந்தப்புரம்.

அறிவிப்பாளன்: தேவகி நந்தன் கிருஷ்ணனும் அவருடைய அண்ணன் பலராமனும் வருகின்றனர்.
குந்தி எழுந்துசென்று அவர்களை வரவேற்கிறார்.

கிருஷ்: வணக்கம் அத்தை!

பலரா: வணக்கம் அத்தை!

குந்தி: வாழ்க! இறைவன் அருள் புரிவானாக..! துவாரகையில் யாவரும் நலமா!

கிருஷ்: யாவரும் நலமுடன் உள்ளனர். இங்கு வரும்போது சுபத்திரையைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டு வந்தேன். அவள் உங்களுக்கு தொல்லை கொடுத்திருப்பாளே... (சுபத்திரையைக் கண்டதும்) அடடே இதோ வருகிறாளே எனதருமைத் தங்கை!
கிருஷ்ணன் சுபத்திரையை அணைத்துக் கொள்ளுகிறார்.

பலரா: பார்த்தீர்களா அத்தை..? நான் குடும்பத்தில் மூத்தவன் இருக்கும்போது தங்கையை இவன் முந்தி அணைத்துக் கொள்ளுகிறான்..!

கிருஷ்: நீங்கள் மூத்தவனாகப் பிறப்பதற்கு முன்னரே இவற்றை யோசித்திருக்க வேண்டாமா அண்ணா..?

குந்தி: சகலவகையிலும் மூத்தவனுக்குத்தான் முதல் மரியாதை. இருப்பினும் அன்பு, பாசம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் இளையவர்களுக்கு அதிக சலுகை தரப்படுகிறது.

கிருஷ்: (பலமாகச் சிரித்துவிட்டு) கேட்டீர்களா அண்ணா..? சற்றுப் பொறுங்கள்! என் தங்கையிடம் உரையாடி விட்டு வருகிறேன்! சுகமாக இருக்கின்றாயா என்று உன்னிடம் விசாரிப்பதில் அர்த்தமில்லை. அத்தையின் இல்லத்தில் நீ நிச்சயமாய் நலமுடன் இருப்பாய்!

குந்தி: இல்லை கிருஷ்ணா! இது என்னுடைய இல்லமே இல்லை. மருமகள்கள் வந்ததும் இந்த வீடு அவர்களுடையதாகிவிடுகிறது.

கிருஷ்: சரி அப்படியானால் உங்கள் இல்லத்தில் அத்தை மகிழ்ச்சியுடன் இருக்கிறானா சுபத்திரா?

சுபத்: அண்ணா! இந்த வீடு எனக்குரியதேயில்லை. இது அக்கா திரௌபதிக்குரியது. இங்கு நான் ஒரு பணிப்பெண்.

திரௌ: *(வந்துகொண்டே)*- பார்த்தீர்களா அத்தை? அவளுடைய அண்ணனிடத்தில் என்ன சொல்கிறாள் என்று கேட்டீர்களா? நான் இவளை வேலைக்காரிபோல் நடத்துவதாக அவள் அண்ணன் எண்ணட்டும் என்றல்லவோ இவ்வாறு கூறுகிறாள்! நீங்களே உங்கள் சகோதரியிடம் கேட்டுப்பாருங்கள்- நான் இவளைக் கொடுமைப் படுத்தினேனா என்று....!

கிருஷ்: அப்போ- அவள் தான் என் சகோதரி என்றும் நீ என் சகோதரி அல்ல என்றும் கூறுகிறாயா திரௌபதி? உண்மையில் இவளைவிட நீதான் என் மேலான சகோதரி ஆவாய்!

பலரா: கிருஷ்ணன் கூறுவதை நான் ஆமோதிக்கிறேன்.

கிருஷ்: அண்ணா! இன்றுதான் நீங்கள் என்னுடைய கருத்துடன் முதன் முதலாக ஒத்துப்போகிறீர்கள்.
எல்லோரும் சிரித்து மகிழும்போது தோழி ஒருத்தி வருகிறாள்.

தோழி: எல்லோருக்கும் வணக்கம். மகரிஷி வேத வியாசர் ஏனைய முனிவர்களுடன் மாளிகைக்கு வருகிறார்.

-காட்சி மாற்றம்-

மாளிகைக்கு வரும் வியாச முனிவர் அனைவரையும் வாழ்த்துகிறார்.

கிருஷ்: தயவு செய்து அமருங்கள் மாமுனிவரே!
கிருஷ்ணர் வியாச மாமுனிவரின் பாதங்களைக் கழுற்ற யுதிஷ்டிரர் நீர்கொண்டுவந்து முனிவரின் பாதங்களைக் கழுவி பாதபூசை செய்கிறார். ஏனைய முனிவர்களின் பாதங்களையும் கழுவுகிறார்.

<u>பின்னணிப்பாடல்</u>

**பாண்டவர் நிகழ்த்திடும் பெருவேள்விகாண**
**பாரினை ஆளும் மாமன்ரெல்லாம்**
**படைபோல் திரண்டு விரைந்தோடி வருவதை**
**ஆண்டவனன்றோ வரவேற்றழைத்தனன்**

**மாயவன் கண்ணனின் வாழ்த்தினைப் பெற்ற**
**மன்னவரெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்தனர்**
**மங்கல வாழ்த்தொலி எங்கும் நிறைந்தது**
**மன்றம் பொலிந்திட முரசமொலித்தது**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.



